Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් ஆக. 13-19, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 369

## நாடாளுமன்றத்துக்கு வரும் தீர்வுத் திட்டம் நடக்குமா காரியம்?

## கள நிலவரம் கை மீறுமா?



திகில் கதை

நவீன திரௌபதி

ஸ்நேகிதியே... ரகசிய ஸ்நேகிதியே...

# முரசம்

## நிலம் விளையுமா?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

இனவாதம்
இந்த நாட்டில்
எவ்வளவு தூரம்
ஊறிப்போயுள்ளது என்பதை
இப்போதைய நிகழ்வுகள்
எடுத்துக் காட்டுகின்றன.
எந்தவொரு சிறிய தீர்வையும்
தமிழ் மக்களுக்கு
வழங்கிவிடக்கூடாது என்பதில்
சிங்கள இனவாதிகள்
எவ்வளவு முனைப்பாக
உள்ளனர் என்பதை
அரசியலமைப்புச் சட்ட
ஆலோசனைகளைப்
பாராளுமன்றத்தில்
பாரப்படுத்த விடாது
தடுக்க நிகழ்ந்த
முயற்சிகள் காட்டி விட்டன.

இந்த அரசியலமைப்பு
எவ்வளவு தூரம்
இனப்பிரச்சனையைத்
தீர்க்கப்போவதென்பதை
எதிர்காலம்தான்
தீர்மானிக்க வேண்டும்.
ஆனால்
அதைத் தடுக்கமுனைந்த
சிங்கள இனவாதத்தின்
நோக்கமானது
முழுமையான தீர்வொன்றை
வழங்க வேண்டும் என்பதல்ல;
எந்தத் தீர்வையுமே
வழங்கக் கூடாது என்பதுதான்.
இந்த விடயத்தில
ஐ.தே.க. ஆடிய நாடகம்
மிகத் தெளிவாகவே
அதன் கபடத்தனத்தை
அம்பலமாக்கி விட்டது.

இன்று அது கூறும்
சாக்குப் போக்குகள்
நகைப்புக் கிடமானவையாகவும்
வெறுப்புக் கிடமானவையாகவும்
வெளித் தெரிகின்றன.

கால அவகாசம்
போதாதென அது
இப்போதுதான் துயிலெழுந்ததுபோல்
அல்றுவ்ந்தக கண்டு
அழுவதா சிரிப்பதா
என்று தெரியாதிருக்கிறது.

புதிய அரசியலமைப்புக்கான
முதலாவது ஆலோசனைகள்
வெளியிடப்பட்ட
1995ம் ஆண்டிலிருந்து
இன்றுவரை
அதனை முறியடிப்பதற்கும்.
பின்னடிப்பதற்கும்
மாறுதல்களுக்குள்ளாக்கவும்
தாமே காரணமாகக்
குறுக்காக நின்று விட்டு,
இத்தனை காலத்தையும்
பாழாகச் செய்து விட்டு-
இன்று எழுந்து நின்று
காலம் போதவில்லையெனச்
சாட்டுக் கூறுவது
ஏமாற்று நடவடிக்கையே!
ஜனாதிபதித் தேர்தலின் போது
பேச்சுவார்த்தை மூலம்
இனப் பிரச்சனைக்குத்
தீர்வு காண்போமெனக் கூறி
தமிழர்களை ஏமாற்றி
வாக்கெடுத்த ஐ.தே.க.,
அரசாங்கத்தோடு தாம் பேசிய
பேச்சுவார்த்தையில்
அரசாங்கம் தருவதற்கு
உடன்பட்ட விடயங்களிலும்
முட்டுக்கட்டைகளைச் சொருகியதானது
தமிழர்களின் முதுகில் கத்தியைச்
செருகும் 'புரூட்டஸ்' தனத்தை
அம்பலமாக்கி விட்டது.

இதற்குப் பின்னர்
தம்மால் இத் தீர்வை
ஏற்க முடியாதென
நிராகரித்ததும்
முன்னரே திட்டமிட்ட
கபடத்தனமேயென்பது
தெளிவாகத் தெரிகிறது.

தனது நிராகரிப்புக்கு
இனவாத உணர்வைக்
காரணமாகக் காட்டாது,
இந்தத் தீர்மானங்களுக்கு
பௌத்த சங்கத்திடம்
சம்மதம் வாங்க வேண்டுமெனவும்,
புலிகளிடம் காட்ட வேண்டுமெனவும்,
நாட்டு மக்களுக்கு
முன்வைக்க வேண்டுமெனவும்
ஏதேதோ கூறுகிறது.

புலிகள் உடன்படக் கூடிய தீர்வை
பௌத்த சங்கம் ஏற்பதென்பது
எத்தகைய கற்பனாவாதமென்று
எவருக்கும் புரியும்.

ஒரு போதுமே சாத்தியமாகாத
வழிகளைக் கூறிவிட்டு
ஒதுங்கிக் கொள்வதே
இந்தத் தந்திரம்.

ஆனால் இதேவேளை
சோசலிசம், சமத்துவம் என்று
இடதுசாரிச் சாயம் பூசிய
ஜே.வி.பி.யும் அதன்
அடித் தொண்டைக்குள்
அடக்கி வைத்திருந்த
விஷத்தைக்கக்கி விட்டது.
இந்த அரசியலமைப்பு
ஒற்றையாட்சியைப் பேணவில்லையென்றும்
தமிழர்களுக்கு
சுயாட்சி அதிகாரம் கொடுத்து
இன ஒற்றுமையைக்
குலைத்துவிடுமென்றும் கூச்சலிடுகிறது.

இத்தகைய மனோ நிலையில்
எந்தத் தீர்வுதான்
இந்த நாட்டில்
சாத்தியமாகும்?
விதை எதுவாக இருந்தாலும்
நிலம் நல்லதாக இல்லாவிட்டால்
விளையுமா?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ஆன்மீகம்

## ஆண்டவனைத் தேடி.......



கடவுளை அடைய பகட்டான பூசைகளும், புனஸ் காரங்களும் தேவையா?' என்று உங்களுக்குத் தோன்றும். 'இறைவனை அடையும் வழியென்ன?' என்று அரண்மனை அந்தப் புரத்திலுள்ள சப்ர மஞ்சத்தில் சாய்ந்தவாறு சிந்தனை செய்து கொண்டிருந்தார் அரசர். நெடுநாட்களாகவே அப்படி ஒரு சிந்தனை அவருக்கு. அந்த சிந்தனை அதிகரித்து கவலையே வந்துவிட்டது.

அந்த நேரத்தில் அவர் படுத்திருந்த அறையின் மேல் தளத்தில் யாரோ ஓடும் சப்தம் கேட்டது. அரசர் எழுந்து வந்து, "யாரது?" என்று கத்தினார். அங்கே ஒல்லியாய் ஒர் ஆசாமி நின்றிருந்தான். "மன்னர் அவர்களே, என் கழுதை காணாமல் போய்விட்டது. அதைத் தேடிக் கொண்டிருக்கிறேன்." என்றான். அரசனுக்குக் கோபம் ஏறி விட்டது. "உன் கழுதையைத் தேட, அரண்மனையின் மேல்தளம் தானா கிடைத்தது?"

அந்த ஒல்லி ஆசாமி சிரித்தபடியே சொன்னான். "நீ சர்வ வல்லமை பெற்ற இறைவனைத் தேட ஆடம்பரமான உம் அரண்மனைதான் சரியான இடமென்று நிறைத்திருக்கையில் அற்பமான என் கழுதையை இங்கு நான் தேடுவதில் என்ன தவறு?" என்று கேட்டு, மறைந்து போனான். அரசன் உடனே அரியணை துறந்தார். ஆண்டவனைத் தேடிச் சென்றார்.

ரி.குணவர்த்தன-களுவாஞ்சிக்குடி.

## வான்மறை எச்சரிக்கும் வாக்குறுதி

**நா**ம் ஒருவரை நம்புவதனால் அவரின் வாயிலிருந்து வெளியாகும் வாக்கை கொண்டே நம்புகிறோம். வாக்கு மாறும் போது ஒருவரின் மேல் ஒருவர் வைத்துள்ள நம்பிக்கை இழக்கப்படும். வாக்குறுதியை நிறைவேற்றுபவன் பிறரால் மதிக்கப்படக் கூடியவனாக கருதப் படுகிறான்.

வாக்குறுதியை நாம் எந்த அளவுக்கு நிறைவேற்றுகிறோமோ அந்த அள்வு மற்றவர்களும் நம்மீது நம்பிக்கை கொள்வார்கள்.

இன்று பல அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், செல்வந்தர்களும் கொடுக்கும் வாக்குறுதிகள் ஏழைகளையும், தொழிலாளர்களையும் ஏமாற்றக் கூடியதாக உள்ளது.

இப்படிப்பட்டவர்கள் அல்லாஹ்விடம் நாளை மறுமையில் தப்ப முடியாது. ஏனென்றால் அல்லாஹ் தன் திருமறையில் பின்வருமாறு கூறுகின்றான்.

"வாக்குறுதியைப் பூரணமாக நிறைவேற்றுங்கள். நிச்சயமாக வாக்குறுதியைப் பற்றி விசாரணை செய்யப்படும்."

அல்குர் ஆன் (17:34)

எனவே வான்மறை எச்சரிக்கும் வாக்குறுதி நம் வாழ்நாள் முழுவதும் பேணப்பட வேண்டும். இது ஈருலக வாழ்வுக்கு ஈடேற்றம் தரும்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## செழிப்பானதாய் மாற்றுவார்!

"அவன் நீர்க் கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம்வாய்க்கும்"


சங்கீதம் 1:3

யாக்கோபு என்கிற மனிதன் தேவனை மாத்திரமே நம்பியிருந்தான். தன் மகனான யோசேப்பைக் கண்ட சமயத்திலும் அவன் தேவனை மறந்து விடவில்லை. தேவனுடைய வார்த்தைகளை அவன் நேசித்தான். தேவனுடைய ஆலோசனைக்காக காத்திருந்தான். இரவும் பகலும் தேவனை மாத்திரமே சார்ந்து நின்ற யாக்கோபை தேவன் ஆசீர்வதித்தார். கர்த்தரை நேசித்து, அவருடைய வார்த்தையை நம்பினோர் வாழ்க்கையை தேவன் செழிப்பானதாக மாற்றியிருக்கிறார். கர்த்தருடைய வேதத்தில் மாத்திரம் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அதனையே தியானம் பண்ண வேண்டும். சிறிய காரியமானாலும் பெரிய காரியமானாலும் தட்டிக் கழிக்காமல் தேவனது ஆலோசனையை நாடி ஓடுகிற வேளைகளில், அவர் வாக்களித்தபடி, நாங்கள் செய்கிற காரியங்களையெல்லாம் வாய்க்கப்பண்ணுவார்.

தேவனுடைய வார்த்தையை மறந்து சுயபுத்தியின் மேல் சாய்ந்து மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருக்காமல் நாம் கர்த்தரின் சித்தத்திற்கு எங்களை ஒப்புக்கொடுப்போம். அப்போது நீரூற்றண்டை நடப்பட்ட மரத்தைப் போல் எங்கள் வாழ்க்கையை செழிப்பானதாய் தேவன் மாற்றுவார்.

எம்.வேதமாணிக்கம்-கொழும்பு-05.

## கவிதைப் போட்டி இல.369



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 19.08.2000

கவிதைப் போட்டி இல.369
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### யுத்தபூமி!

மனிதச் சங்கிலி கொண்ட இந்த
ரயில் எங்கே செல்கின்றது
யுத்தம் இல்லா தேசத்தையா
தேடி செல்கின்றது?
மானிடர்களாய் பிறந்த நாம்
எங்கு சென்றாலும்
நிழல் போல் நம்மை பின் தொடரும்
இந்த யுத்தம் கொண்ட இந்த பூமி!

பா.ராஜரமேஸ்-அக்கரைப்பற்று 08.

### பாப்பா!

விளையாடப் போகாதே பாப்பா-ஸ்கூல்
ஐடின்டி கையிலே இல்லாமல் வெளியே
விளையாடப் போகாதே பாப்பா!

க.மலர்ராஜன்-திருகோணமலை.

### காணவில்லை

கணினி யுகத்திலும்-நாம்
கண்டதில்லை புகையிரதத்தை-ஆனால்
கண்டதுண்டு எம்மைத் துண்டாடி
துடிக்க வைக்கும் வானூர்திகளை!.

மெற்றில்டா மரியதாஸ்-பண்டாரவளை.

### புறப்படு!

இனப்பிரச்சனையால் அமைதியற்று
பயங்கரவாதத்தால் பீதியுற்று
அல்லலுறும் எங்களுக்கு
'டாட்டா' சொல்லி விட்டு
எங்கேயடா தம்பி
புறப்படுகிறாய்?

ஓ.எஸ்.ஜெலீலா-பொலனறுவை.

## கவிதைப் போட்டி இல.366

### பரிசுக்குரிய கவிதை

### தேசத்தின் சிற்பிகள்!

**இனவாதமும்**
**திட்டமிட்ட புறக்கணிப்பும்**
**எமது முன்னேற்றத்தை**
**நூறாண்டுகள் பின் தள்ளின.....**
**இருந்தும் முன்னேறுவோம்....**
**வளரும் எம் கற்பனைகள்**
**நாளை**
**வரலாறு படைக்கும் வரை.....**

**'சாயினி' சண்முகலிங்கம்-**
**களுவாஞ்சிக்குடி.**



### சமாதானம்.....!

ஒரு தாய் பெற்ற
பிள்ளைகள் போல்....
ஒன்று கூடி வாழ்வோம்....!
எம்மிடையே....
ஒரினமோர் குலமென்ற
ஒற்றுமை நிலவ...
வாழ்ந்திடுவோம்!.

வி.ஜீவராசா-அக்கரைப்பற்று 07.

### பயிற்சி!

யார் சொல்லை யார் கேட்பர்
தன் போர் வெல்ல முனைகின்றனர்
யாழ் செல்ல அவா உண்டு-ஆனால்!
புகை வண்டியில்லை அங்கு செல்ல
பழகுகிறோம் அதுமாதிரி
பாலர்கள் நாங்கள்!

எம்.ஏ.அப்ஸார்-கிண்ணியா 04.

### பயணம்

நாம் புதிய பாதையில்
புதிய தேசம் தேடிப்
பயணிக்கின்றோம்-ஆனால்
ஒற்றுமைப் பாதையில்
உறுதியோடு!.

எஸ்.தேவகி-வவுனியா.

### அரசனை நம்பி?

அக்கரையை நம்பி
நிர்க்கதியான நிலையில்
திக்குத் தெரியாமல்
திணறுகின்ற தமிழர்களோ?

ச.மகாலிங்கம்-வெலிமடை.

### கால ஓட்டம்!

அண்ணன் தம்பி
தங்கையென
அந்த நாள் ஓடியது
'கோச்சி' ஓட்டம்!
குண்டு மழைக்கஞ்சி
குழிக்குள்ளே
கூடி வாழ்வது
கால ஓட்டம்!

நா.ஜெயபாலன்-
பிபிலை.

### கொடுமை

கன்னிப் பெண்ணுக்கு
சீதனக் கொடுமை,
மணமான பெண்ணுக்கு
கணவனின் கொடுமை,
கணவன் உள்ள
பெண்ணுக்கு
உறவினர் கொடுமை,
பிள்ளை அற்ற பெண்ணுக்கு
மலடி என்ற கொடுமை!
பாசமுள்ள பெண்ணுக்கு
கண்ணீர்க் கொடுமை,
அழகு மிக்க பெண்ணுக்கு
சந்தேகக் கொடுமை!

போல்ராஜ் கிரோமேரி-கோமரை.

### பழக்கம்

வாண்டுகளே வால்
பிடிக்கும் பழக்கம்
உங்களுக்கு வேண்டாம்!
அது சில அரசியல்
வாதிகளின் பழக்கம்!

எஸ்.பி.கணேஷ்-தாண்டியடி.

# வாசக(ர்)சாலை



முக்கிய பல செய்திகளையும் சிந்தைக்கினிய கட்டுரைகளையும், நாட்டு நடப்பான அரசியல் இன்னென்ன அம்சங்கள் மட்டுமன்றி 'சினிமா', 'சிறுகதை' 'விளையாட்டு', 'பலரசத்திரட்டு', 'லேடிஸ் ஸ்பெஷல்', 'தேன் கிண்ணம்', 'தொடர்கதைகள்', 'பாப்பா முரசு' அனைத்துமே தினமுரசு வார மலரை மெருகூட்டுகின்றது. இருந்தும் ஒரு குறை; முன்பு ஆரம்பத்தில் இடம் பெற்ற குறுக்கெழுத்துப் போட்டி இடம் பெறாததுதான். இனி வரும் வாரங்களிலாவது இடம் பெறுமா?

ஏ.சீ.எம்.முஸம்மில்-குளியாப்பிட்டிய.

முத்தான முரசே!

நீ சுமந்து வரும் செய்திகள் அனைத்தும் அருமை, அவற்றில் 'அரசியல்', 'அறிவியல்', 'ஆன்மீகம்', 'அரங்கம் அந்தரங்கம்' என்பன அற்புதம். அகவை குறைவானாலும் உனக்கு அறிவு நிறைவே. ஆகவே தான் நாட்டில் பல்லாயிரக் கணக்கான வாசகர்களை உன தாக்கி விட்டாய். ஆயினும் வன்னி மண்ணின் வாசகர்களுக்கு நீ ஏமாற்றுக்காரனாகி விட்டாய். இருந்தாலும் நீ வளமாக இன்னும் வளர வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

தோ.வீனஸ் பெஞ்சமின்-
மட்டு/ஆசிரியர் கலாசாலை.

என் இனிய முரசே!

வியாழன் தோறும் நீ! பவனி வரும் போது தவறாது உன்னைக் கையில் ஏந்தி, தொடக்கம் முதல் இறுதி வரை அனைத்து அம்சங்களையும் வாசித்து முடிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். முரசே! உன்னில் அடங்கியுள்ள அம்சங்கள் பிரமாதம். நீ தவறாமல் என் கையில் தவழ வேண்டும் என்பதுதான் எனது ஆசை.

முரசே! நீ சுமந்து வரும் ஒவ்வொரு ஆக்கங்களும் இனிக்க வைக்கின்றன. அதிலும், 'தகவல் பெட்டி', 'சிந்தியா பதில்கள்', 'பாப்பா முரசு', 'சர்தார்ஜி ஜோக்ஸ்' மற்றும் அனைத்து அம்சங்களும் மிகவும் சுவையாக அமைகின்றன. இன்னும் பல புதிய அம்சங்களுடன் வெற்றி நடைபோட்டு வலம் வர வேண்டும் என்றும் வாழ்த்துகிறோம். அத்துடன் மாணவர் பக்கம் ஒன்றை வழங்கி மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங்களுக்கு இடம் கொடுப்பின் முரசுமென் மேலும் பளிச்சிடும் என்பது உறுதி.

ஐ.அஸ்மி அஹமட்-திக்குவல்லை.

வாரா வாரம் எனது கரம் சேரும் அன்பான தினமுரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பரிலும் சூப்பர். அதிலும் எனது மனதை கொள்ளைக் கொண்ட 'செய்திச் சிதறல்', 'அதிரடி அய்யாத்துரை', 'அலசுவது இராஜதந்திரி', 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'தகவல் பெட்டி', 'கவிதைப்போட்டி', 'பாப்பா முரசு' என்பன இதே போன்று இன்னும் பல அம்சங்களை நீ சுமந்து வர எனது கோடான கோடி வாழ்த்துக்கள்.

கே.உதயச்செல்வி-கிளிநொச்சி

அன்பின் முரசிற்கு!

ஆயிரம் கோடி வணக்கங்கள். உன் இலட்சக் கணக்கான இரசிகர்களில் நானும் ஒருவன். நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் அருமையானவை. குறிப்பாக 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அதிரடி அய்யாத்துரை', 'செய்திச் சிதறல்' போன்றவை என்னை மிகவும் கவர்ந்தவை. இதே போன்று வெவ்வேறு அம்சங்களுடன் உனது பணி மீண்டும் மீண்டும் தொடர வேண்டும் என மனமாற வாழ்த்தி விடைபெறுகின்றேன்!

ச.சபேசன்-இலண்டன்.

என் அன்பின் முத்தான முரசே!

நீ வருவம்வரை காத்திருப்பேன் நான். புதிய சகஸ்த்திரத்திலும் உன் எழில் குன்றாமல் உனக்கே உரிய சிறப்புக்களை நீ அமைதியாகவும் அற்புதமாகவும் சுமந்து வருவது பாராட்டுக்குரியது. உன் கருத்தில் பவனி வரும் 'நில்-கவனி-முன்னேறு', 'சிந்தியா பதில்கள்' 'கவிதைகள்' மற்றும் அனைத்துமே சூப்பர், தடைகள் தாண்டி முன்னேற முரசே! உனக்கு என் வாழ்த்துக்கள்.

எம்.வசந்தி-ஆண்டாங்கேணி.

என் அன்பின் வளர்பிறையே!
என் இனிய தென்றலே!
வாரம் ஒரு முறை எம் வீட்டில் தவழும்
என் அன்பின் தினமுரசே!
நீ தரும் காற்றைச் சுவாசிக்கும்
பல்லாயிரம் வாசகர்களில் நானும் ஒருத்தி.
நீ தரும் அத்தனை அம்சங்களும் சுவை.
என் உயிர்த்தினமுரசே! நீ மேலும் மேலும்
வளர்வதற்கு என்றும் என் வாழ்த்துக்கள்.

எஸ்.சத்தியா-மன்னார்.

முத்தான முரசுக்கு!

நீ வாழ்க வளர்க முரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. தவறாமல் என் கையில் தவழ வேண்டும் என என் ஆசை. மேலும் உனது பணி ஓங்கி வளரட்டும் என வாழ்த்து கின்றேன்....

ஏ.தர்ஷா-தேற்றாத்தீவு.

முரசே!

ஜூலை 02 இதழில் வெளிவந்த நரனது எழுத்தில் உதித்த 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' யதார்த்தமானது. உண்மையை வெளிக் கொண்டுவந்த 'தரமான அரசியல் கட்டுரை', இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தும் நன்மை என்ன? வெறும் கண்துடைப்புத்தான் என்று விரிவாக அலசப்பட்டிருந்தது. மேலும் 'இராஜதந்திரியார்' என்ன சளைத்தவரா? 'மரணப்படுக்கையில் இலங்கை' என்று மகுடத்தலைப்பிட்டு 'தி ஐலண்ட்'டில் வெளியான கருத்துப் படத்துடன் ஜமாய்த்த கட்டுரை ஆகா... மறுக்கமுடியாத பல உண்மைகளை புட்டுப்புட்டு வைத்து புகழப்பட்டு விட்டார். சபாஷ், தகுந்த நேரத்தில் முரசு தந்த இந்த இரு மணியான கட்டுரைகளும் பாராட்டப்படக்கூடியவை. முரசு 02.07.2000 என்று வரவேண்டியது ஜூலை 02.08.2000 என்று முகப்பில் போடப்பட்டுவிட்டது.

இது சிறு தவறுதான். எழுத்தில் மாதம் சரி, எண்ணில் தான் பிழை.

அ.அரசரெத்தினம்-சேனையூர்-06.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# அமைதி குலைய இடந்தரலாகாது!

# அதிகாரத்திலுள்ளோர் ஆவன செய்ய வேண்டும்!

**அரசியல் யாப்பு திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே அதனை முற்று முழுதாக எதிர்ப்பதற்கு பேரினவாத இயக்கங்களும் பௌத்த மத குரு பீடங்கள் திட்டமிடத் தொடங்கிவிட்டன. பலதரப்பட்ட திட்டங்களையும் வகுத்து, அரசியல் சீர்திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்துக்குக் கொண்டு வராமல் தடுப்பதற்கும், அத் தடையை மீறி பாராளுமன்றத்தில். சமர்ப்பிக்கப்பட்டால் அதனை நிறைவேறாமல் செய்வதற்கும் பல சக்திகள் திட்டமிட்டுச் செயற்பட்டு வந்துள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்பட வாய்ப்புகள் உருவாகி வருவதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது. அமைதி குலையாமல் இருப்பதற்கு ஆட்சி பீடத்திலுள்ளவர்கள் உடனடியாகவே திட்டங்களை வகுத்து, சீருடையினரை எதற்கும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகின்றது.**

உத்தேச அரசியல் யாப்புத் திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் தான் இதனை எழுதுகிறோம். இச்சட்டம் வெற்றி பெறுமா? தோல்வி அடையுமா என்று ஊகித்துப் பார்க்க முடியாத நிலை. இருப்பினும் இச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும் நிறைவேற்றப்படாவிட்டாலும் இந்த நாட்டில் என்ன நடக்கப்போகிறதோ என்ற ஏக்கம் இந்தநாட்டு குடிமகன் ஒவ்வொருவரிடமும் பெருங் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

அரசியல் யாப்பு திருத்தச் சட்டமூலத்தை ஆதரிப்போரும் எதிர்ப்போரும் நாடெங்கணும் போர்க் குரலெழுப்பிய வண்ணமே-உணர்ச்சி வசப்பட்டவர்களாகக் குரல் கொடுத்து வருகின்றனர். இவர்களுடைய ஆர்ப்பாட்டங்கள் அமைதியாகவும் சாத்வீகமாகவும் நடைபெற்று வருமானால் நல்லது தான். ஆனால் மனிதன் உணர்ச்சி வசப்பட்டு மிருக வெறிக்கு இடம் கொடுக்க நேர்ந்தால் நாட்டில் நிச்சயமாக அமைதிக்குச் சாவு மணி அடிக்கப்பட்டுவிடும்.

இத்தகைய தருணத்தை எதிர்நோக்கி அரசாங்கமும் அதிகாரபீடத்தில் உள்ளவர்களும் மிகக் கவனமாக நடந்து கொள்ள வேண்டியவர்களாகின்றார்கள்.

அமைதிக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படும் காலகட்டத்தில் ஆயுதப் படைகளும் பொலிஸாரும் தான் அமைதியை நிலைநாட்டவேண்டிய கடமையுணர்வுடன் செயற்பட வேண்டியவர்களாகிறார்கள்.

தங்கள் சொந்த உணர்வுகளுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் இடமளிக்காமல் நடுநிலைநின்று கடமை புரிய வேண்டியவர்கள் அவர்களே. இதனைவிடுத்து கடந்த சில காலங்களில் நடைபெற்றதைப் போல், 'வேலியே பயிரை மேய்ந்த' நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவார்களானால் நாட்டில் அவலம்தான் மிஞ்சும்.

ஆயுதப்படையினர் இன்றுள்ள நிலையில் தமிழ் பிரதேசங்களில்தான் பெருந்தொகையாகக் குவிக்கப்பட்டுள்ளனர். தனி நாடு கோரி ஆயுதப் போரில் குதித்துள்ள விடுதலைப் புலிகளுடன் சண்டையிடுவதற்காகவே அவர்கள் அங்கு பெருவாரியாக நிலை கொண்டுள்ளனர். நாட்டின் ஏனைய பகுதிகளில் ஒரு சிறிய தொகையினரே கடமையில் ஈடுபட்டுள்ளனர். தீர்வு யோசனைகளுக்கான மசோதா வெற்றி பெற்றாலும் தோல்வி அடைந்தாலும் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடகிழக்குப் பிரதேசத்தில் ஏற்படும் நெருக்கடிகளைவிட நாட்டின் ஏனைய பிரதேசங்களில் தான் ஆயுதப்படையினரதும் பொலிஸாரினதும் உதவிகள் அதிகம் தேவைப்படும்.

இச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கான முஸ்தீபுகளும் நடைபெற்று வருகின்றன. தேர்தல் நடைபெறுமானால், நாடெங்கணும் அமைதியை நிலைநாட்டக் காக்கிச் சீருடையினர்தான் கடமையில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

எதிர்பார்க்கப்படும் இத்தகைய நெருக்கடிகளை மனதில் கொண்டு ஆட்சி பீடத்திலுள்ளவர்களும் பாதுகாப்பு தொடர்பான அதிகாரிகளும் கால தாமதமின்றி உரிய திட்டங்களை வகுத்து இப்போதே செயலில் இறங்க வேண்டியவர்களாகின்றார்கள்.

நாடெங்கணும் இன்று உருவாகியுள்ள கொந்தளிப்பான நிலையைக் கருத்தில் கொண்டே இந்தச் சாதாரண, ஆனால் மிக முக்கியமான கருத்தை நாம் முன் வைக்கிறோம்.

ஆயுதப்படையினரும் பொலிசாரும் இன்றுள்ள நிலையில் தலைநகரிலும் சுற்று வட்டாரங்களிலும் சிரத்தையுடன் செயற்பட்டு அமைதி காத்து வருகின்றனர் என்பது கண்கூடு. இந்நிலை தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்பதே பொது மக்களின் அவா.

## யாழ் தேர்தல் களம் சூடு பிடிக்கிறது

யாழ்ப்பாணத்தில் தமிழ்க்கட்சிகளிடையே சில தினங்களாக தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ளன. இதற்கு யாழ்மாவட்ட பா.உம் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமாகிய கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வருகையும் மட்டக்களப்பு மாவட்ட பா.உ (கூட்டணி) திரு.மாவை சேனாதிராஜா அவர்களின் வருகையும் இதற்கான காரணமாகும்.

அத்துடன் அரசியல் பிரசாரங்கள் வெளியில் தெரியாவிட்டாலும் தங்கள் தங்கள் பிரமுகர்களுடனும் தேர்தல் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டிருக்கிறது. இதேவேளை யாழ்ப்பாண ஈ.பி.ஆர்.எல்.எஃப். சுரேஷ் அணியின் முக்கியஸ்தர் ஒருவர் தேர்தல் சம்பந்தமாக தலைமைப்பீடத்துடன் கதைப்பதற்காக கொழும்பு சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தவிர மக்கள் ஜனநாயகப் பேரவையும் தேர்தல் பற்றிய விபரங்களை தங்கள் முக்கியஸ்தர்களுடன் கலந்து ஆலோசனை பண்ணி வருவதாகத் தெரிய வருகின்றது.

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து மாவட்டக் காரியாலயத்தில் சில தினங்கள் நின்றதற்கமைய பல முக்கியமான விடயங்கள் தீர்த்துவைக்கப் பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

## கல்முனை, அக்கரைப்பற்று வலயங்களுக்கு மேலதிக வலயக்கல்விப் பணிப்பாளர்கள் நியமனம்!

(காரைதீவு நிருபர்)

கல்முனை மற்றும் அக்கரைப்பற்று வலயத்திற்கு இரு மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களது நியமனம் 01.08.2000 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

வட-கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரன் இந்நியமனத்தை வழங்கியுள்ளார்.

கடந்த 22.06.2000 அன்று பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரண தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் மேற்படி நியமனங்கள் இழுத்தடிக்கப்பட்டு வருவதாக ஈ.பி.டி.பி. எம்.பிக்களான எஸ்.தவராஜா குணசேகரம் சங்கர் ஆகியோர் பிரஸ்தாபித்திருந்தனர். இதனையடுத்து ஆளுநரின் அங்கீகாரம் பெறப்பட்டு இந்நியமனம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை வலய மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி.சுலோசனா ஆனந்தராஜாவும், அக்கரைப்பற்று வலய மேலதிக வலயக்கல்விப் பணிப்பாளராக திருமதி.சரோஜினி லோவநாதசிறியும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

## தமிழ்தினப் போட்டிகளில் வட-கிழக்கு முன்னணி!

இவ்வாண்டு இடம்பெற்ற தேசிய மட்டத் தமிழ்தினப் போட்டிகளில் வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகள் 21 முதலிடங்களைப் பெற்றுச் சாதனை படைத்திருக்கின்றன.

44 பிரிவுகளாக இடம்பெற்ற போட்டிகளில் மேல் மாகாணம் 10 முதலிடங்களையும் மத்திய, சப்பிரகமுவ மாகாணங்கள் தலா நான்கு முதலிடங்களையும், வடமத்திய மாகாணம் மூன்று இடங்களையும் ஊவா, வடமேல் மாகாணங்கள் தலா ஒவ்வொரு முதலிடங்களையும் பெற்றுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணம் பெற்றுக் கொண்ட இருபத்தொரு முதலிடங்களில் பதினொன்றைத் திருக்கோணமலை பாடசாலைகள் பெற்றுள்ளன. அதி கூடிய இடங்களாக ஐந்து முதலிடங்களை ஸ்ரீ கோணேசர இந்துக் கல்லூரியும் நான்கு முதலிடங்களை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியும் புனித சூசையப்பர் கல்லூரி, புனித மரியாள் கல்லூரி ஆகியன தலா ஒவ்வோரிடத்தையும் பெற்றுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வின்சென்ட் தேசிய பாடசாலை மூன்று இடங்களையும், புனித மிக்கேல் கல்லூரி இரண்டு இடங்களையும் பெற்றுள்ளன. வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் 3 முதலிடங்களையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் ஒரு முதலிடத்தையும் பெற்றுள்ளன. முஸ்லிம் நிகழ்ச்சியில் கல்முனை ஸாஹிராக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது

## வியாபாரிகளின் மீன்கள் பறிமுதல்?

புல்மோட்டையைச் சேர்ந்த மீன் வியாபாரிகளிடம் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள் அடாத்தாக மீன்களை பறித்து வருவதாக புல்மோட்டை இராணுவ அதிகாரியிடம் கடந்த வாரம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புல்மோட்டை மீனவர்களிடம் கொள்வனவு செய்யும் மீன்களை அனுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லும் வியாபாரிகளே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எங்கள் ஒவ்வொருவரிடமும் பத்து முதல் பதினைந்து கிலோ மீன்கள் வரை கப்பமாகப் பெற்றுக் கொள்கிறார்கள். தினமும் இப்படி நடைபெறுகிறது. ஐம்பதோ நூறுகிலோ பெற்றுச் செல்லும் எங்களிடம் பதினைந்துகிலோ மீனைக் கப்பமாகப் பெற்றால் எங்கள் கதி என்னாவது?" என்று கேட்கிறார்கள் இந்த வியாபாரிகள்.

மீனைக் கொடுக்க மறுப்பவர்கள் சோதனைச் சாவடியில் மணிக்கணக்காகத் தடுத்து வைக்கப் படுகிறார்கள். இதனால் மீன்கள் பழுதாகிவிடுகின்றன என்று தெரிவிக்கும் வியாபாரிகள் உடனடியாக இராணுவ அதிகாரி தலையிட்டு இதற்கு முடிவு கட்டாவிட்டால் தங்கள் குடும்பம் கடன் சுமையில் தத்தளிக்க நேரிடும் என்றும் தெரிவித்தார்கள்.

இவர்களது குறைகளைச் செவிமடுத்த புல்மோட்டை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஆவன செய்வதாக உறுதியளித்துள்ளதாக தெரிகிறது.

## தொலைத் தொடர்பில் கொள்ளைலாபம்

யாழ்மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக சீர்குலைந்திருந்த தொலைபேசி இணைப்புகள் தற்போது ஓரளவுக்கு முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது.

சில தனியார் தொலைத் தொடர்பு நிலையங்களில் வெளி மாவட்டங்களுக்கு நிமிடம் ஒன்றுக்கு மிகக்கூடுதலான கட்டணங்கள் அறவிடப்படுவதுடன் வெளி இடங்களில் இருந்து வரும் இணைப்புகளுக்கும் 2.50-5.00 ரூபா வரை அறிவிடப்பட்டு வந்துள்ளன. வெளிநாட்டுக்கான தொலைபேசி இணைப்புகளும் ஒருநிமிடம் 100/- -150/- வரை அறவிடப்பட்டது. இதனால் மக்கள் பெரிதும் பாதிப் படைந்த நிலையில் துன்பமடைந்தனர்.

## மரக்கறி வாகனங்கள் தாமதமாவதன் நோக்கம்!

சமீப காலமாக தம்புள்ள, கெக்கிராவ கதுறுவெல போன்ற பகுதிகளிலிருந்து மட்டக்களப்புக்கு மரக்கறி ஏற்றி வரும் வாகனங்கள் தடைப்படுத்தப்பட்டு தாமதமாகவே அனுமதிக்கப்படுகின்றன.

ஏற்கெனவே, இவ்வாகனங்கள் நேர காலத்துடன் மட்டக்களப்பை வந்தடையக் கூடியதாக போக்குவரத்து தடையேதுமின்றி அனுமதிக்கப்பட்டிருந்தது.

பெரும்பான்மை இனத்தவரும் கிழக்கு மாகாணத்தில் மரக்கறி விநியோகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சமீப காலத்திற்கு முன்னர் பெரும்பான்மைச் சமூகத்தவரின் வாகனங்கள் சில தாக்குதலுக்குள்ளாகியிருந்தன.

இருந்த போதும் முஸ்லிம் வர்த்தகர்களின் லொறிகள் மற்றும் வாகனங்கள் வழமைபோன்று நேரகாலத்துடன் வந்து விற்பனையிலீடுபட்டன.

எனினும் பெரும்பான்மையினரின் வாகனங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரைத் தடுக்கப்பட்டு பின்னரே அனுமதிக்கப்பட்டன. இதனால் அவர்களின் வர்த்தகமும் பாதிக்கப்படுவதாக சீருடையினரிடம் முறையிட்டுள்ளனர்.

பெரும்பான்மையினர் பாதிக்கப்படுவதை அறிந்த சீருடையினர் அவர்களது நன்மை கருதி இப்பொழுது சகல வாகனங்களும் பாதுகாப்பை உறுதிப் படுத்திய பின்னரே போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படுகின்றன. இதனால் பெரும்பான்மைச் சமூக வர்த்தகர்களுக்கு அதிக இலாபம் கிடைக்கிறது. முஸ்லிம் வர்த்தகர்களும், நுகர்வோரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## வவுனியா ஓட்டோ சாரதி சடலமாக மீட்பு!

(நமது நிருபர்)

வவுனியா-தோணிக்கல் வாசியான கதிரேசன் கணபதி(33) எனும் ஓட்டோ வண்டிச்சாரதி மத்திய மலைநாட்டின் புஸ்ஸல்லாவையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை 27ம் திகதி அவரது ஓட்டோ வண்டியுடன் வாடகைக்கு அமர்த்திய சிலரால் அவர் கண்டிக்குச் செல்வதாகக் கூறி அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

எனினும் அவர் அன்றிலிருந்து வீடு திரும்பவில்லை. பின்னர் புஸ்ஸல்லாவையில் சடலமொன்று மீட்கப்பட்டதாகப் பத்திரிகையில் செய்திவெளியானதைத் தொடர்ந்து விசாரணை செய்ததில் சடலம் இவருடையதென அடையாளம் காணப்பட்டது.

தனது மகளின் பருவமெய்திய சடங்குச் செலவுகளையும் கண்டிக்குச் சென்று வாடகைச் கூலி பெறுவதன் மூலம் சமாளிக்கலாம் என்று கருதியே அவர் அங்கு செல்ல உடன்பட்டாராம்.

இவரது ஓட்டோ வண்டிக்கு என்ன ஆனது என்ற தகவலும் இதுவரை தெரியவில்லை. இவரை வாடகைக்கு அமர்த்திச் சென்றவர்கள் யார் என்ற விசாரணைகள் இடம் பெறுகின்றன. வவுனியா மனித உரிமைகள் பணிக் குழுவினர் இந்த விடயத்தில் அக்கறை கொண்டுள்ளனர்.

## தாக்குதலைத் தவிர்க்க வீதியோர மரங்கள் அழிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத் தொடரணி வாகனங்கள் அவ்வப்போது புலிகளின் கண்ணிவெடித் தாக்குதல்களுக்கு இலக்காகின்றன.

விடுமுறையிற் செல்லும் படைவீரர்களையும் விடுமுறை முடிந்து கடமைக்குத் திரும்பும் படை வீரர்களையும் மட்டக்களப்பிலிருந்தும் வெலிக்கந்தையிலிருந்தும் ஏற்றிக் கொண்டு இராணுவ வாகனத் தொடரணிகள் பயணம் செய்கின்றன.

இவ்வேளையில் வீதியோரங்களிலும், மரங்களிலும், கூரைகளிலும், நிலத்திலும் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளால் புலிகள் இராணுவ வாகனங்களைத் தாக்குகின்றார்கள்.

இதனைத் தடுக்கும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக வெலிக்கந்தையிலிருந்து மட்டக்களப்பு வரை வீதியோரங்களிலுள்ள மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டு வருகின்றன.

## அம்பாறை அபிவிருத்திக்குழ கூட்டம் பாராளுமன்றத்திலா?

மாவட்ட அபிவிருத்தி இணைப்புக் குழுக்கூட்டம் வழமையாக அந்தந்த மாவட்டக் கச்சேரியில் மாதாந்தம் நடைபெறுவதுண்டு.

மாவட்ட எம்பிகள், அமைச்சர்கள் அரச அதிபர், கூட்டுத்தாபன திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் பல அதிகாரிகள் இக்கூட்டங்களில் கலந்து கொள்வர்.

இந்த ஒழுங்கில் வழமையாக நடைபெறும் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி இணைப்புக் குழுக் கூட்டம் இம்முறை அம்பாறையில் நடைபெறுவதற்குப் பதிலாக பாராளுமன்றத்தின் முதலாவது அறையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தாம் கொழும்பு சென்று பாராளுமன்ற அறையில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்வதாயின் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி வரும் என்று அதிகாரிகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள புதிய அரசியலமைப்பு மீதான பாராளுமன்ற நடவடிக்கைகளில் எம்.பிகளும், அமைப்புகளும் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டியுள்ளதாலேயே இத்தகைய ஏற்பாடு என்று தெரிகிறது.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி இணைப்புக் குழுக் கூட்டமும் இம்முறை நடைபெறவில்லை. காலவரையறையின்றி இக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

## போக்கு வரத்து வசதியின்றி பொதுமக்கள் அவஸ்தை!

ஓட்டமாவடி மக்கள் சிரமமான முறையில் பயணம் செய்ய சீரான போக்குவரத்து வசதிகளின்றி சிரமப்படுகின்றார்கள்.

ஓட்டமாவடி, காவத்தைமுனை, காகித நகர், மீராவோடை பகுதிகளில் சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள்.

இந்த மக்கள் மட்டக்களப்பு கச்சேரி பெரியாஸ்பத்திரி வேறுபலதிணைக்களங்கள் உட்பட பல அலுவல்கள் நிமித்தம் மட்டக்களப்புக்குச் செல்ல வேண்டியுள்ளது.

ஆயினும் குறிப்பிட்ட ஒரு சில வாகனங்களைத் தவிர சீரான முறையில் உரிய வேளைக்குப் பயணம் செய்யக்கூடிய எந்த வசதிகளும் இப்பிரதேச மக்களுக்கு இல்லை.

இதேவேளை அண்மையிலுள்ள வாழைச்சேனைக்கு மட்டக்களப்பின் பல டிப்போக்களிலிருந்து அதிகளவான பஸ் சேவைகள் நடத்தப்படுகின்றன.

எனவே வெறுமனே வாழைச்சேனைக்குச் செல்லும் பஸ்களை அதிகளவான மக்களுக்குப் பயன் படும் விதத்தில் ஓட்டமாவடி ஊடாக வாழைச்சேனைக்குச் செல்வதற்கு ஒழுங்கு செய்யுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றார்கள்.

ஓட்டமாவடிக் கூடான பஸ்சேவைகள் இல்லாததால் அதிகளவான பணத்தைச் செலவு செய்து ஓட்டோ முச்சக்கர வண்டிகளில் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

## மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் பலி!

மட்டக்களப்பு-கல்லாறில் நடந்த தாக்குதல் சம்பவத்தில் புலிகளின் உள்ளூர் மருத்துவப் பொறுப்பாளர் ஒருவர் கொல்லப்பட்டார். அவரிடமிருந்து ஒரு தொகை மருந்துப் பொருட்கள், மற்றும் ஆயுதங்களும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர் திருவாளன் என்றழைக்கப்படும். ஆ.பரமேஸ்வரன் என்று அறிவிக்கப்படுகின்றது. சடலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினருக்கு ஊடாக புலிகளிடம் சேர்ப்பிக்கப்பட்டது.

## வவுனியாவில் கெடுபிடிகள் அதிகரிப்பு!

சமீப சில நாட்களாக வவுனியா நகரிலும் அதனைச் சூழ உள்ள பகுதிகளிலும் அதிகரித்துள்ள தாக்குதல் சம்பவங்களால் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

திடீர் சுற்றிவளைப்புகள், தேடுதல்கள், சோதனைத் தடைகள் என்பவற்றால் பொது மக்கள் அதிக நெருக்கடிகளையும், கெடுபிடிகளையும் எதிர் நோக்கியுள்ளார்கள்.

வவுனியாவில் வழமையாக உள்ள 'பாஸ்' முறைக் கெடுபிடிகளுக்கு மேலதிகமாகவே இந்த வித நெருக்கடிகள் இப்போது தோன்றியுள்ளன.

இதே வேளை அண்மையில் பஸ்கள் குண்டு வைத்துச் சேதமாக்கப்பட்டதினால் உள்ளூர்ப்போக்குவரத்துச் சேவைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. இதனால் பொதுப் பயணிகள் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

# கல்லாறு சதீஷுக்கு தமிழ்நாட்டில் விருது



சுவிற்ஸர்லாந்தில் கடந்த பத்து வருடங்களாக வாழ்ந்து வரும் இலங்கைத்தமிழரான கல்லாறு சதீஷ் அவர்களுக்கு, தமிழ்நாட்டில் இலக்கியப் பரிசு கிடைத்துள்ளது.

கல்லாறு சதீஷ் எழுதிய, மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்ட 'பனிப்பாறைகளும் சுடுகின்றன', என்னும் சிறுகதை நூலிற்கு, கடந்த வருடத்தில் வெளியான சிறந்த சிறுகதை தொகுதிக்கான லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கியப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

திரு.வல்லி கண்ணன், திருமதி.ராஜம் கிருஷ்ணன் போன்ற மிகச் சிறந்த இலக்கியவாதிகள் நடுவர்களாக இருந்தே இந்த 'பனிப் பாறைகளும் சுடுகின்றன' எனும் நூலை பரிசுக்காகத் தெரிவு செய்து பணப்பரிசினையும், சான்றிதழையும் திரு.கல்லாறு சதீஷ் அவர்களுக்கு வழங்கியுள்ளனர்.

"கடந்த வருடம் வெளியான 27 நூல்களை இந்தப் போட்டிக்காக அனுப்பியிருந்தோம், அதில் கல்லாறு சதீஷின் நூல் ஒன்றே பரிசுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நூலை வெளியிட்டு வைத்த போதே, நான் கருதினேன், இதற்கு நிச்சயமாக விருது கிடைக்குமென்று. காரணம், கல்லாறு சதீஷ், வெறும் கற்பனையை மட்டும் தட்டி விட்டு இந்த நூலை எழுதவில்லை. மாறாக புலம் பெயர் சூழலின் நிஜவாழ்க்கையை படிப்பினையாகப் படைத்துள்ளார். அதற்காக இதற்கு கிடைத்த பரிசு மிகச் சரியானதே!" என்று மணிமேகலைப் பிரசுர அதிபர் ரவி தமிழ்வாண்ன் அவர்கள் தெரிவித்தார்.

'பனிப்பாறைகளும் சுடுகின்றன' எனும் நூலிற்கு கிடைத்த பணப் பரிசினை, தமிழ்நாட்டு மருத்துவ மனையில், புற்று நோயால் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கும் பிரபல எழுத்தாளர் படுதலம் சுகுமாரன் அவர்களுக்கு வழங்குமாறு லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கிய நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார் கல்லாறு சதீஷ்.


## உடனடியாக விற்பனை பிரதிநிதிகள் தேவை

O/L படித்த தமிழ், சிங்களம் அல்லது ஆங்கிலம் விளங்கக்கூடிய அல்லது பேசக்கூடிய அநுபவமுள்ள விற்பனை பிரதிநிதிகளும், அநுபவமற்ற பயில விரும்புகிறவர்களும் 10 நாட்களுக்குள் உடனடியாக விண்ணப்பிக்கவும் வயது 18-40, வருமானம் 20,000/= வரை எதிர்ப்பார்க்கலாம்.

**THE ADVERTISER**
No. 8/48. Sri Siddartha Path, Kirulapone, Colombo-06.

## COMPUTER CLASSES

வத்தளைச் சந்தியில் தமிழ் விளக்கத்துடனான Computer வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. Microsoft Office 2000. Page Maker 6.5, Corel DRAW 9.0, Internet & E-mail, Hardware. Children Course, English & Tamil தட்டெழுத்து வகுப்புக்கள் மற்றும் Colour& Black and White Typesetting செய்து கொடுக்கப்படும். Software Developments. Computer Assembling & Sales. Trouble Shooting & Services. அத்துடன் Spoken English Classes நடாத்தப்படுகின்றன.

**D.S. COMPUTER STUDIES**
Internet & E-mail dsocm@mail.visual. com
No.6A, Hekitta Road, Wattala. 075-349247.


# 4வது, 10வது, 3வது, பிறந்த நாள் வாழ்த்து



செல்வன்.டினேஷாந்த்/16.08.2000



செல்வி.துர்க்காதேவி/16.08.2000



செல்வன்.நிகர்ஷன்/31.08.2000

தவேந்திரன்-ஜெகதீஸ்வரி தம்பதியினரின் செல்வப் புதல்வர்கள் டினேஷாந்த், நிகர்ஷன் தமது 4வதும், 3வதும் பிறந்த நாளை 16.08.2000 அன்று கொழும்பு 46/4, மோதரையிலுள்ள அவர்களது இல்லத்திலும்,

பாலகுமார்-ஜெயராணி தம்பதியினரின் செல்வப் புதல்வி துர்க்கா தனது 10வது பிறந்ததினத்தை 16.08.2000 டென்மார்க்கிலும் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

இவர்களை அன்பு அப்பா-அம்மா, அப்பப்பா-அப்பம்மா, அம்மப்பா-அம்மம்மா, பெரியப்பாமார்-பெரியம்மாமார், சித்தப்பாமார்-சித்திமார், மாமாமார்-மாமிமார், அக்காமார், அண்ணாமார், தங்கை, மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.


உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984



## மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்



நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக P. K. SAAMY ASSOCIATE (PVT) LTD.ஐ உருவாக்கியது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தை பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

தீரும் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அந்தந்த நாட்டுக்கு உரியவரிடம் பார்சல் போய் சென்றடைய உலகளாவிய ரீதியில் பிரதிநிதித்துவம் அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரிக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே! 33 மாந்திரிகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மனதார நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ , தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தவுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பீ. கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 466271, 466571,466620.466820 431137, 470615, 342463, 344831, இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை நீங்கள் ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தூண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.

கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
**Prof.Dr. P. K. Samy (J.D.G.A.N) JP**

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail : drpksamy@sltnet.lk
Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami

**வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:**
வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.
வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.

## தொலைக் கல்விச் சேவை

தபால் மூலம் ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெற ஓர் அரிய வாய்ப்பு!
புதிய நூற்றாண்டின் சவால்களுக்குத் தைரியத்துடன் முகம் கொடுக்க வாரீர்!!

முன்னைநாள் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரேமதாஸ உடகம, பிரிட்டிஷ் கவுன்ஸில் அத்தியட்சகர் பிரெட் ஹன்லன், மற்றும் வெளிநாட்டில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட போதனா முறை.

**ஆரம்ப ஆங்கில டிப்ளோமா**

ஆறு மாதப் பயிற்சி-ஆங்கிலத்தில் அறிவு குறைந்தோர்க்கானது.

**ஆங்கிலத்தில் டிப்ளோமா**

ஆறுமாதப் பயிற்சி-க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி பெற்றோர்க்கானது.

**ஆங்கில உயர் டிப்ளோமா**

எட்டு மாதப் பயிற்சி-க.பொ.த.(சா/த) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றோர்க்கானது

இலக்கணம்-இலக்கியம்-மொழிபெயர்ப்பு, கட்டுரை ஆகியன உள்ளடக்கிய பாடநெறி.

**கருத்தரங்குகள்**

இறுதிப் பரீட்சைக்கு மாணவரைத் தயார் படுத்துமுகமாக ஒழுங்கு செய்யப்படும்.

**சான்றிதழ்கள்**

சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்டவை.

மேலதிக விபரங்கட்கு:
Director
**Distant Education Service**
22D. Station Lane. Nugegoda. Tel: 856769

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஆகஸ்ட் 22 முதல் 27 வரை**
DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

**கல்முனையில் செப்டம்பர் 02,03 திகதிகள்.**
T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஆகஸ்ட்13, 14 திகதிகள்.**
(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.


# 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 ✻ 05 ✻ 1944



மறைவு 10 ✻ 07 ✻ 2000

**திருமதி.காமாச்சி அய்யாத்துரை**

அன்பின் பிறப்பிடமே! பாசத்தின் கடலே! பண்பின் குலவிளக்கே! எங்களின் இல்லற ஜோதியே! ஒப்பற்ற தெய்வமே! எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது உயிர்துடிப்பே! தீர்க்க சுமங்கலியே! உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி.

அன்பு கணவர்,மகள்மார்,
பேரப்பிள்ளைகள், மருமகன்மார்,
உற்றார் உறவினர், நண்பர்கள்.

தகவல்: திருமதி.வ.சந்திரன், விம்பில்டன், லண்டன்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நாடாளுமன்றத்துக்கு வரும் தீர்வுத் திட்டம் நடக்குமா காரியம்?

-நரன்-

தலை போகிற காரியம் என்பார்களே அப்படியான ஒரு காரியமாகிவிட்டது இன்று தீர்வு முயற்சி. அந்த முயற்சி நல்லதா கெட்டதா, பயனுள்ளதா, இல்லையா என்ற கேள்விகள் ஒரு புறமிருக்க அதனைக்கூட இந்த நாட்டில் நிறைவேற்ற முடியுமா, என்பதே பிரதான பிரச்சனை, யாக எழுந்துள்ளது. எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் கூட இந்த நாட்டில் உருவாக்க முடியாது என்ற மோசமான அரசியல் காடைத்தனம் இங்கு கோலோச்சுகிறது.

இப்போது சந்திரிக்காவினால் முன்னெடுக்கப்படும் இத் தீர்வுத் திட்டம் இந் நாட்டின் அழிவுகர யுத்தத்துக்குக் காரணமான இனப் பிரச்சனையின் பாத்திரவாளிகளான தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை முற்று முழுதாகச் தீர்த்து வைக்கப் போவதில்லை. தீர்வின் வழியில் இருக்கும் ஒரு சில தடைக் கற்களை நீக்கும் முயற்சி என்று வேண்டுமானால் அதிகபட்சம் சொல்லிக் கொள்ளலாம். ஆனாலும் அந்த முயற்சிகளிலிருந்து கூட எவ்வளவு பின்வாங்க வைக்க முடியுமோ அந்தளவு பின்வாங்க வைப்பதற்கான காரியங்களையே இதுவரை செய்து விட்டு கடைசியாக அதைக்கூட நிறைவேற்றாது செய்யக் கடும்பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளது இன்றைய எதிர்க்கட்சி.



எதிர்க்கட்சி இம் முயற்சிக்கு எதிராகத் திரும்பியுள்ள நிலையில், எப்போதுமே எந்தத் தீர்வையுமே வழங்க மறுத்து தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி ஆள நினைக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் பெரு முயற்சியொன்று இன்னோர் புறத்தில் உசுப்பிவிடப்பட்டுள்ளது. பல்வேறு துவேஷக் கருத்துக்களையும், சிங்கள மக்களுக்கு-அவர்களின் அதிகாரங்களும் சொத்துக்களும் பறிபோய் விடப் போகிறதென்ற பீதி உணர்வையும் ஊட்டி இத் தீர்வுத் திட்டத்தை முறியடிக்கத் தலைகீழாக நிற்கின்றனர் இனவாதிகள். வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கு உரிமையும் அதிகாரங்களும் கொடுத்தால் அவர்கள் தெற்கிற்கும் வந்து சிங்கள மக்களின் அதிகாரங்களையும் உரிமைகளையும் பிடுங்கி விடுவார்கள் என்ற அர்த்தமற்ற விஷமத்தனமான பிரசாரங்களை இவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இலங்கையில் நிலவும் பிரச்சனையின் ஆழம் தெரியாமல், அதைப் புரிந்து கொள்ளவும் சற்றேனும் விருப்பமில்லாமல், எல்லாம் தமது மனவிருப்பப் படியே நடத்தப் படவேண்டுமென்ற வரட்டுப் பிடிவாதம் கொண்டவர்களாகவே சிங்கள மக்களை வழிநடத்தும் பௌத்த பிக்குகள் இன்னும் விளங்குகின்றனர். அவர்கள் இங்கு வெறும் மத போதகர்களாக இல்லை. அரசியல்வாதிகளாகவே தோற்றமளிக்கிறார்கள். உண்மையில் பௌத்த மதத்தை ஸ்தாபித்த புத்தரோ தனது அரசியலைத் துறந்து போதி மரத்துக்கு வந்தவர். அவர் தனது மதப் பிரசாரங்களுக்குக்கூட தான் வகித்த அரச பதவியின் எந்த விதமான செல்வாக்கையுமோ அல்லது வசதி வாய்ப்புக்கள் சாதனங்களையோ பாவிப்பதற்கு நினைத்தும் பார்த்ததில்லை. ஒரு அரசராக இருந்து அவர் நினைத்திருந்தால் தனது கருத்துக்களை மிகச் சுலபமாக சட்டங்கள் மூலமும் அரச ஊடகங்கள் சாதனங்கள் மூலமும் பரப்பியிருக்கலாம். ஆனால் அவர் அப்படியன்றி அரசபோகத்தையே முற்றாகத் தலைமுழ்கிவிட்டு எந்தவித அரசியல் பலத்தையும் பயன்படுத்தாமல் தனது சிந்தனைகளை இதயசுத்தியுடன் போதித்தவர்.

ஆனால் இன்று அவரின் போதனைகளை முன்னெடுப்பதாகக் கூறும் இலங்கையின் பௌத்த பிக்குகளோ புத்தர் இறங்கிவந்த அரச பீடத்துக்கு மறுபடி ஏறும் ஆதங்கத்தைக் காட்டுகிறார்கள். புத்தர் அரசிலிருந்து விடுபட்டு மதத்தை மக்களுக்குக் கொண்டு வருதற்கு முனைந்திருக்க, இவர்கள் அரசாட்சியிலேயே மதத்தைப் புகுத்தி உயர் அந்தஸ்தில் பேண நினைப்பது மட்டுமல்லாமல் மற்றைய மதங்களுக்கும் சம அந்தஸ்துக்கு கொடுக்க மறுப்பவர்களாக இருக்கிறார்கள். அதனால்தான் இலங்கையின் அரசியல் சாசனத்தில் பௌத்த மதத்துக்கு மட்டும் அதி உயர் ஸ்தானத்தை வழங்க வேண்டுமென நிர்ப்பந்திக்கிறார்கள். அத்தோடு இவர்கள் மதத்தில் மட்டுமன்றி மொழியிலும் இனத்திலும் பாகுபாட்டைக் காட்டி வருகிறார்கள். ஆசையே துன்பத்துக்குக் காரணமென புத்தர் பற்றற்றவராக இருக்கப் போதித்திருக்க, இவர்கள் மொழிப் பற்று இனப்பற்று என்பவற்றையும் தாண்டி மொழி வெறி இன வெறி என்ற நிலைக்கு மக்களை உசுப்பித் தள்ளுபவர்களாக இருக்கிறார்கள்.

பௌத்த மதம்கூடப் பொதுவான மதமே. உலகில் பல்வேறு இன மக்களும் தழுவியுள்ள மதம். இந்தியாவில் தமிழர்களும் பௌத்த மதத்தவர்களாக, பௌத்த பிக்குகளாகக்கூட இருந்துள்ளார்கள். இருக்கிறார்கள். ஆனால் இலங்கையில் சிங்களவர்களின் நலனை மட்டும் பேணும் மதமாகவே பௌத்த மதத்தை இம்மதகுருமார் கருதுகிறார்கள்.

இப்போது இலங்கை நாடு மிக நெருக்கடி வாய்ந்த நிலைமையில் இருக்கும் தருணத்தில், இந் நெருக்கடிக்கு ஒரு குறைந்த பட்சத் தீர்வைத் தன்னும் காணாவிட்டால் பாரதூரமான அழிவுகள் தவிர்க்க முடியாததாகிப் போய்விடும் என்ற நிலையில் முன்னெடுக்கப்படும் இந்தத் தீர்வு முயற்சிகளையும் எப்பாடுபட்டாவது முறியடித்து விட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு இந்த புத்த பிக்குமார் தெருவில் இறங்கியுள்ளார்கள். அவர்கள் எந்தக் காலத்தில் எந்தவொரு தீர்வு முயற்சியாவது சற்றுத்தன்னும் கனிந்து வரும் போதும் அதைக் குழப்பியடிப்பதற்கு முன்னின்றவர்கள். பண்டா-செல்வா ஒப்பந்தமாயினும் சரி, டட்லி-செல்வா ஒப்பந்தமாயினும் சரி இவர்களின் ஆர்ப்பாட்டத்தாலேயே பின்வாங்கப் பட்டவை. அதிகம் சொல்லத் தேவையில்லை. தமது தலைவரான பண்டாரநாயக்காவைச் சுட்டுக் கொன்றவரும் ஒரு புத்த பிக்குவே.

இப்போதும் இவர்கள் வீதிகளில் இறங்கி பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்கள். உண்ணாவிரதங்களை மேற்கொள்கிறார்கள். எந்த அர்த்தமுமற்ற போலியான பயப் பீதியை சிங்கள மக்களுக்கு மத்தியில் பிரசாரம் செய்கிறார்கள். ஆபத்தான வதந்திகளைக் கட்டி விடுகிறார்கள். இவர்கள் இப்பிரச்சனைக்கு என்றென்றைக்கும் தீர்வு காணாமல், இலங்கையை வெறும் பௌத்த சிங்கள இனவாதத்தால் கட்டியாளக் கனவு காணுகிறார்கள்.

இவர்கள் இவ்வாறு கனவு ராஜ்ஜியத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்க, நிலைமையோ கைமீறி எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. யுத்தம் இந் நாட்டை மரணப் பிடிக்குள் தள்ளிவிட்டுள்ளது. மிக அண்மையில் தான் அதன் அதி உச்சக்கட்டமான அச்சுறுத்தலை இலங்கை அரசாங்கமும் இனவாதம் பேசும் சகல சிங்களத் தரப்பினரும் சந்தித்திருந்தனர். ஆனையிறவு முகாம் வீழ்ச்சியடைந்த அதிர்ச்சியைக் கூடத் தாங்கிக் கொண்டு யாழ்ப்பாணம் எந்தக் கணத்தில் விழுமோ, அங்குள்ள முப்பதாயிரத்துக்கும் அதிகமான படைவீரர்களின் கதி என்ன ஆகுமோ, யாரும் உதவிக்கு வர மாட்டார்களா எனப் பதைபதைத்து உலக நாடுகளின் காலடிகளைப் பிடித்துக் கெஞ்ச வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டது. அப்படிக் கெஞ்சும்போது, வெட்கம், மானம், சூடு, சுரணை எல்லாவற்றையும் தம் பன்சாலைக் கூரைகளுக்குள் சுருட்டி வைத்துவிட்டு. முன்னர் நாட்டைவிட்டு வெளியேறு! என்று கூக்குரலிட்டு தாம் விரட்டியடித்த அதே இந்தியாவினது தூதரகத்துக்கு உதவிப் பிச்சை கேட்டு திருவோடு ஏந்திச் சென்றவர்கள் இதே புத்த பிக்குகள்தான். அப்படிச் சென்ற கோலத்தை இரண்டாம் நாளே மறந்துவிட்டு, இப்போது மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய வேதாளம்போல் திரும்பத் தமது பழைய பரணியைப் பாடத தொடங்கிவிட்டார்கள்.

புத்தபிக்குகளின் கோலம்தான் இவ்வாறென்றால் இலங்கையின் நலனில் சம அளவு அக்கறை செலுத்த வேண்டிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இந்த நேரத்தில்தான் தனது அரசியல் சூதாட்டத்தை நடத்த விளைந்துள்ளது. இங்கு எரியும் பிரச்சனையாகவுள்ள இனப்பிரச்சனைக்குத் தீர்வு கண்டால்தான் தான் ஆட்சி பீடம் ஏறினால் கூட அமைதியாக ஆட்சி நடத்த முடியும் என்ற பக்குவமான சிந்தனை அதற்கு அறவே இல்லை என்பதையே அது திரும்பவும் வெளிக்காட்டியுள்ளது. அவர்களுக்குக் கிடைத்திருந்த 17 வருட ஆட்சிக் காலத்தில் மாறி மாறி வந்த ஒவ்வொரு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் விட்ட அதே தவறை இப்போது எதிர்க்கட்சியாகக் குறுகிவிட்ட நிலையிலும் எந்தவிதப் பட்டறிவும் பெற்றவர்களாக இல்லாமல் இன்றைய அதன் தலைவர்களும் செய்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில்தான் இந்த நாட்டின் தலைவிதியை மாற்றியமைத்த 1983 ஜூலைக் கலவரம் நிகழ்த்தப்பட்டு, தமிழ் மக்களை நோக்கி "போரென்றால் போர், சமாதானமென்றால் சமாதானம்" என்று ஜே. ஆரால் சவால் விடுக்கப்பட்டது. ஆனால் அதே ஜே.ஆர் தனது ஆட்சி முடிவுக்குள்ளேயே சமாதானத்துக்கு இறங்கி வந்து இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலை ஏற்பட்ட தென்பதே வரலாறு.

நாம் வரலாற்றிலிருந்து பாடங்களைக் கற்க வேண்டும். அன்று ஜே.ஆர். எந்த நாடுமே உதவிக்கு வராத நிலையில் எமக்கு நண்பர்கள் என்று எவரும் இல்லையெனக் கைவிரித்துப் புலம்பியபோது ஐ.தே.க.வின் இன்றைய இதே தலைவர்களும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். அதே போன்ற ஒரு நிலை அண்மையில்தான் இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டு அது பல்வேறு நாடுகளினதும் உதவிக்கரம் நாட வேண்டிய அந்தரித்த நிலைக்கு உள்ளாகியது. அதிலும் இந்தியாவின் உதவி இன்றியமையாத நிலையில் அதனைத் திருப்திகர மாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தனர். முன்னர் போலல்லாது வேறு சில நாடுகளது உதவிகளைப் பெற்று தனக்கு ஏற்பட்ட அபாயத்திலிருந்து சற்றுத் தப்பி தலையைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய தாக அரசாங்கத்துக்கு இருந்தாலும் இந்த நிலை நீடிக்கும் என்றோ, இதுபோல் எப்போதும் உதவிகள் கிடைக்குமென்றோ சொல்வதற்கில்லை. உண்மையில் இந்த உதவிகள் ஆபத்து உதவிகளாகவே வழங்கப்பட்டன. இவற்றைப் பயன்படுத்தி ஆபத்திலிருந்து மீண்டுகொண்டு பின்னர் ஒரு நிரந்தர தீர்வுக்கான வழியைக் காண வேண்டுமென்பதே உதவியளித்த நாடுகளினதும் எண்ணமாக இருந்தது. அவ்வாறு நிரந்தரத் தீர்வுக்கு வழிகாண்பதை விடுத்து ஆபத்திலிருந்து மீண்டதும் பழையதை மறந்து தொடர்ந்தும் அதே ஏமாற்று அரசியலையும் யுத்தத்தையும் தான் இலங்கை முன்னெடுக்குமானால் அது, உலக நாடுகளின் விசனத்துக்கு உள்ளாவது தவிர்க்க முடியாது போய்விடும்.

இந்த நிலையில்தான் ஏதோ ஓரளவு கொடுக்கக் கூடியதைக் கொடுத்தாவது தீர்வொன்றைக் கண்டுவிடவேண்டுமென்ற அவசியம் அரசாங்கத்துக்கு எழுந்துள்ளது. அதனால்தான் அது அக்கறையுடன் தீர்வுக்கான முயற்சிகளை முன்னெடுத்தது.

ஆனால் இதே அக்கறையும் அவசியமும் நெருக்கடியும் எதிர்க்கட்சிக்கு இருக்கவில்லை. மாறாக அது அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்குப் பதிலாக இந்நெருக்கடியைப் பயன்படுத்தி அரசாங்கத்தை எப்படிக் கவிழ்க்கலாமென்ற குறுகிய உள் அரசியலில் இறங்கிவிட்டது. உண்மையில் தற்போது ஓர் அருமையான சந்தர்ப்பம் வாய்த்திருந்தது. புலிகளுடன் ஒரு இணக்கத்துக்கான நிலமைகள் உருவாகாவிட்டாலும் கூட அரசாங்கமும் எதிர்க்கட்சியும் தமிழ்கட்சிகளும் ஒரு முதற்கட்ட இணக்கத்துக்கு வரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. ஆனால் அரசாங்கமும் தமிழ்க் கட்சிகளும் இணங்கிய விடயங்களைக் கூடத் தடுத்து நிறுத்தி மலினப் படுத்தும் வகையிலேயே ஐ.தே.க. பேச்சுவார்த்தைகளின்போது நடந்து கொண்டது. இதேவேளை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. தாம் "இனப் பிரச்சனைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணுவோம்" என்ற உறுதியை அளித்திருந்தது. ஆனால் பேச்சுவார்த்தைக்கு வந்த போதோ தீர்வைக் காணவிடாது தடுக்கும் வகையிலேயே நடந்து கொண்டது.

அதுமட்டுமல்லாமல் இறுதியில் இத் தீர்வுத் திட்டத்தை ஏற்க முடியாதென நிராகரித்தும் விட்டது. இவ்வாறே கடந்த காலங்களில் எதிர்க் கட்சிகள் நடந்து வந்து இப்பிரச்சனையை வளர்த்தன. ஆளும் கட்சி முன்வரும் போதெல்லாம் எதிர்க்கட்சி எதிர்ப்பதே இந் நாட்டின் சரித்திரமாகிவிட்டது. இப்போதும் அந்தச் சரித்திரம் விதிவிலக்கின்றி இலங்கையின் தரித்திரமென மறுபடி நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போது அதை எதிர்த்து உரையாற்றிய எதிர்க் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க கூறிய வழிதான் மிக நகைப்புக்கிடமானதும் விசனத்துக்குரியதுமாகும். அவர் கூறுகிறார், "பௌத்த சங்கத்தின் சம்மதத்துடனும் விடுதலைப் புலிகளின் சம்மதத்துடனும் தான் ஒரு தீர்வு நிறைவேற்றப்பட" வேண்டுமாம். அப்படியானால் முதலில் அவர்கள் எதற்கு என்ற கேள்வி எழுகிறது. அப்படியானால் நாம் ரணில் விக்கிரமசிங்கவிடம், 'ஏன் நீங்கள் விடுதலைப் புலிகளுக்கும் பௌத்த சங்கத்துக்கும் இடையில் ஒரு பேச்சுவார்த்தையை நடத்தி இப் பிரச்சனைக்குச் சுலபமாகத் தீர்வைத் தந்துவிடலாம்தானே?' என்றல்லவா கேட்க வேண்டும். பௌத்த சங்கமும் புலிகளும் ஒன்று சேர இணங்கக்கூடிய ஒரு தீர்வை ரணில் எங்கே கண்டார்? சாதாரணமாக, ஒரே சிங்களக் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐ.தே.க.வும் கூட இணக்கத்துக்கு வர முடியாத பிரச்சனையில் எப்படி அவர் அவ்வளவு தூரம் போய் பௌத்த பீடமும் புலிகளும் இணங்கக்கூடிய தீர்வுபற்றிய கற்பனையை, தீர்வுக்கான ஒரு வழியென இந் நாட்டின் புத்திபடைத்த மக்களுக்கு-அதுவும் பாராளுமன்றக் கூட்டத்திலிருந்து முன்வைக்கிறார்? இது ஒரு அப்பட்டமான ஏமாற்று என்பது புத்தி படைத்த எவருக்கும் புலப்படக்கூடிய விடயமென்பதே அந்தப் புத்திசாலி அரசியல்வாதியின் புத்தியில் படவில்லையே. இல்லை. அவர் தனது இப் பின்வாங்கலை தமிழ் மக்கள் தமக்கிழைத்த துரோகமாக அடையாளங் காணாதிருக்க ஒரு முகமூடி அணியவேண்டியிருந்தது. அதுவும் இது தேர்தல் காலமாகையால், அதனால் புலிகளின் சம்மதம் பற்றி தான் வலியுறுத்தியதை மட்டும் பார்த்துவிட்டு (பௌத்த சங்கத்தின் சம்மதம் பற்றிக் கூறியதைப் புரிந்து கொள்ளாமல்) தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் நடந்து கொண்டது போல் தன்னை ஆதரிப்பார்கள் என நினைத்துவிட்டாரோ தெரியவில்லை. இதேவேளை இது சிங்கள இனவாதிகளையும் திருப்திப்படுத்தி ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை விழுத்தி விடும் என அவர் கணக்குப் பார்த்திருக்கிறார்.

இதேவேளை தம்மை இடதுசாரிகளாகவும் சோஷலிஸவாதிகளாகவும் அடையாளப் படுத்திக் காட்ட முற்படுகின்ற ஜே.வி.பி.யும் இத் தீர்வுத்திட்டத்தை மூர்க்கமாக எதிர்க்கின்றது. அவர்கள் இது தமிழர்களுக்கு சமஷ்டி ஆட்சியை வழங்கி இந் நாட்டையும் மக்களையும் பிரித்துவிடுமெனக் கோஷமெழுப்புகிறார்கள். ஆனால் இந்தத் தீர்வுத் திட்டமோ உண்மையில் ஒரு முழுமையான சமஷ்டியை வழங்கவுமில்லை. அரை சமஷ்டி நிலையையே கொண்டிருக்கிறது. எனினும் சமஷ்டியென்பது ஒரு பிரிவினை ஏற்பாடு அல்ல; மாறாக பிரிவினையைத் தடுக்கும் ஏற்பாடே. வெட்டும் செயற்பாடல்ல; ஒட்டும் செயற்பாடே சமஷ்டி. இதை உலக நாடுகள் பலவும் தத்தமது நாட்டுக்குரிய வடிவில் அமுல் நடத்தி வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகின்றன. அமெரிக்கா, கனடா போன்ற முதலாளித்துவ நாடுகளிலன்றி சோஷலிச நாடுகளிலும் இம்முறை செயற்படுத்தப்பட்டுள்ளது. அப்படியிருக்க ஜே.வி.பி.இதனை ஒரு பிரிவினைக்கான ஏற்பாடாகத் திரித்துப் பிரசாரம் செய்வது அதன் சோஸலிசப் போலி முகத்தை அம்பலமாக்குகிறது. தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து வந்த நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ணவும் கூட இதே ஜே.வி.பி.யுடன் கூட்டமைத்துள்ளார். அவர் ஜே.வி.பி.யின் இந்நிலைப்பாட்டை எதிர்க்கத் துணியவில்லை.

சிங்களக் கட்சிகளிடையே இப் போக்குகள் நிலவும் அதே வேளை தமிழ்க் கட்சிகளிடையே ஒரு திரிசங்கு சுவர்க்க நிலைமை தோன்றியிருந்தது. இத் தீர்வுத் திட்டத்தில் உள்ள விடயங்கள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை முழுமையாகத் தீர்க்கக்கூடியவையாகவன்றி பகுதியானவையாக இருப்பதே இந் நிலைக்குக் காரணம். அதனால் ஏற்பதா விடுவதா என்ற சர்ச்சை இதில் எழுந்தது. ஏற்பதானால் முழுமையற்ற ஒரு தீர்வை ஏற்றவர்களாகிவிடுவர். விடுவதானால் ஒரு தீர்வு காண்பதற்குக் கிடைத்த, மறுபடி ஒரு முறை கிடைக்குமென்று எதிர்பாக்க முடியாத ஓர் அரசியல் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டவர்களாவார்கள். ▫

## செய்திச் சிதறல்

✪ பௌத்த சங்கத்தைச் சேர்ந்த பிரதான பீடாதிபதிகள் உட்பட ஏராளமான பௌத்த பிக்குகளினதும், முக்கியமாகன எதிர்க்கட்சியினதும் சிங்கள பேரினவாதிகளினதும், இவர்களைத் தவிர தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட வேறு சில தமிழ் அமைப்புகளினதும் எதிர்ப்புக்கு மத்தியில் கடந்த மூன்றாம் திகதி வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் அரசியல் திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது. 7ம் திகதி முதல் பாராளுமன்றத்தில் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் சட்ட மூலத்தின் மீதான காரசாரமான விவாதங்கள் பாராளுமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதேவேளை ஆளுங் கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்கும் எதிர்க் கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்கும் கட்சி தாவல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

✪ திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சட்டமூலத்தைப் பிரேதித்து முடிந்ததும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பாராளுமன்றத்தில் சட்டமூலத்தின் மீது தனது கருத்துக்களை இருமணிநேரமாக எடுத்துரைத்தார். இந்தவேளையில் எதிர்த்தரப்பிலிருந்த ஐ.தே.கட்சியினர் சட்டமூலத்தின் பிரதிகளையும் நிகழ்ச்சி நிரலையும் கிழித்தெறிந்தும் தீயிட்டுக் கொளுத்தியும் பலத்த ஆரவாரம் செய்தனர். இந்தக் காட்சியை நாட்டு மக்கள் அனைவரும் பார்க்கக் கூடிய வகையில் ரூபவாகினி நேரடியாக ஒளிபரப்பியது.

✪ அரசியல் திருத்தச் சட்டமூலத்தை வாபஸ் பெறக் கோரி ஹெண்டிகல விமலசாரதேரோ என்ற புத்த பிக்கு புறக்கோட்டையிலுள்ள பேருந்து நிலையத்துக்கு அருகாமையிலுள்ள அரச மரத்தடியில் அமர்ந்து சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இந்த புத்த பிக்கு ஏற்கனவே 'சிஹல உருமய' கட்சி நடத்திய ஆர்ப்பாட்டங்களில் தீவிர பங்கேற்றிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

✪ அரசியல் திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமது குடும்பங்களுடன் கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹொட்டல்களில் தற்காலிகமாக அடைக்கலம் புகுந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் அரசியல் திருத்த நகலுக்கு ஆதரவு காட்டியவர்கள் என்றும் அவர்களுடைய பாதுகாப்புக்காகவே இவ்வாறு அவர்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டு ஹொட்டல்களில் தங்கி இருப்பதற்கு அரசாங்கச் செலவிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

✪ புதிய அரசியல் யாப்புச் சட்டத் திருத்த மூலத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு என்னென்ன வழிவகைகளைக் கையாளலாம் என்பதையிட்டு ஆராய்வதற்காக கொழும்பு நாரஹென்பிட்டியிலுள்ள புத்தவிகாரையொன்றில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கடந்த ஞாயிறன்று இந்தக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது குண்டுத் தாக்குதலொன்று இடம் பெற்றது. அப்போது அக்கூட்டத்திலிருந்த எவரும் பாதிப்புக்குள்ளாகவில்லை. அக் கட்டடத்தின் கீழே தரையில் நின்றிருந்த மூவர் மட்டும் காயமடைந்தனர்.

✪ யாழ் குடாநாட்டில் ஆங்காங்கே விடுதலைப் புலிகளுக்கும் அரசப் படைகளுக்கும் மோதல்கள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது. செம்மணி பகுதியில் கடந்த 5ம் திகதியன்று சனிக்கிழமை புலிப் படையினர் இருவரை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றதாகத் தெரிய வருகிறது. அன்றைய தினம் புத்தூர், கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் இரு தரப்பினருக்கும் இடையில் இடம் பெற்ற மோதல்களில் 3 படையினர் கொல்லப்பட்டனர்.

✪ ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த துரைராஜா பாஸ்கரன், கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன் மற்றும் நடராஜா மதனராஜா ஆகிய மூவரும் கட்சியின் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களாக கடந்த திங்கட்கிழமை சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டுள்ளனர். கட்சியைவிட்டு ஏற்கனவே வெளியேற்றப்பட்ட இருவருக்குப் பதிலாகவும் கடந்த வருடம் நவம்பரில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட தினமுரசு ஆசிரியர் திரு.அற்புதராஜா ஆகியோரின் இடங்களுக்காகவே மேற்கூறப்பட்ட மூவரும் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

# அண்டை மண்டலத்தில்....

கானகன்

## நடிகர் ராஜ்குமார் கடத்தல் வீரப்பன் என்ன கோருகிறார்?

முதலில் யானை வேட்டை, பிறகு சந்தனமரக் கடத்தல், பிறகு மனிதர்களைக் கடத்துவது என்று முன்னேறிவிட்ட மாயாவி வீரப்பனின் கையில் இப்போது சிக்கியிருப்பவர் பிரபல கன்னட நடிகர் ராஜ்குமார்.

தமிழ்நாடு எல்லைக்குள் அமைந்திருக்கும் தொட்ட அஞ்சனூர் என்ற கிராமத்தில் தனது பண்ணை இல்லத்தில் அவர் ஜூலை 30ம் திகதி இரவு தனது குடும்பத்தினருடன் ரீ.வி. பார்த்துக்கொண்டிருந்த போது, வீரப்பன் குழுவினரால் கடத்தப்பட்டார்.

ஆகஸ்ட் 03 அன்று தன்னை வீரப்பன் குழுவினர் நல்ல முறையில் நடத்துகின்றனர் என்றும் பொலிசையோ, இராணுவத்தையோ பயன்படுத்தி தன்னை விடுவிக்க முயல வேண்டாம் என்றும், மாறாக வீரப்பனின் கோரிக்கையை பரிவுடன் பரிசீலிக்க வேண்டும் என்றும் கோரி ஒரு கசட்டை இருமாநில அரசுக்களுக்கும் அனுப்பியிருந்தார். ஆனால் அப்போது கூட வீரப்பனின் கோரிக்கைகள் என்னவென்று அவர் தெளிவுபடுத்தவில்லை. ராஜ்குமாரை கடத்தியபோதும் வீரப்பன் விட்டுச்சென்ற கசட்டில் தனது கோரிக்கைகள் என்ன என்று அவர் தெரிவிக்கவில்லை.

நக்கீரன் வாரமலர் பத்திரிகை ஆசிரியரும் வெளியீட்டாளருமான ஆர்.ஆர்.கோபால் இரு அரசுகளின் தூதுவராக வீரப்பனை சந்திக்கச் சென்றிருக்கிறார். அவரிடமிருந்தும் எந்தத் தகவலும் ஆகஸ்ட் 03 காலை வரை இல்லை. சந்திக்க வரலாமென்று கோபாலுக்கு வீரப்பனிடமிருந்து சமிஞ்ஞையே வந்ததாக தெரியவில்லை. எல்லாமே மூடு மந்திரமாகத்தான் இருக்கிறது.


ராஜ்குமாருக்கு ஏதாவது அசம்பாவிதம் நேர்ந்தால் கர்நாடகத்தில் வாழும் ஆயிரக் கணக்கான தமிழர்கள் வேட்டையாடப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை. காவிரிப் பிரச்சனை தொடர்பாக 1992ல் கலவரம் மூண்ட போது பலர் கொல்லப்பட்டனர். அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன, அலறி அடித்துக் கொண்டு தங்கள் தொழில் உடமைகள் எல்லாவற்றையும் அப்படியே விட்டு விட்டு தமிழ்நாட்டிற்கே திரும்பினர் பலர். அதைவிடவும் பயங்கரமான சம்பவங்கள் நடக்க வாய்ப்புண்டு இப்போது.

ராஜ்குமார் கடத்தப்பட்ட மறுநாட் காலையே அவரது இரசிகர்களும் காடையர்களும் தங்களது வெறியாட்டத்தைத் தொடங்கி விட்டார்கள். தலைநகர் பெங்களூரில் பேரூந்துகள் அடித்து நொருக்கப்பட்டன. சில தமிழ்த் தினசரி அலுவலகங்கள் தாக்கப்பட்டன. தீ கூட வைத்தார்கள். ஒருவர் கத்திக்குத்துப் பட்டு இறந்தார். மற்ற சில நகரங்களிலும் தமிழர்கள் தாக்கப்பட்டனர். இரண்டு நாட்கள் அவர்கள் எல்லாம் தங்கள் வீடுகளுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தனர். மாநிலமே ஸ்தம்பித்து போய் விட்டது போல ஒரு மயானத் தோற்றம் தெருக்களில். ராஜ்குமாரே ஒரு கன்னடத் தீவிரவாதி என்பது குறிப்பிடத்தக்கது. வாட்டால் நாகராஜ் என்ற வெறியருக்கு நெருக்கமானவர். காவிரி கலவரத்தில் ராஜ்குமாருக்கும் பங்கு உண்டு என்று கூறப்படுகிறது. வீரப்பன் விட்டுச் சென்ற கசட்டில் கூட சம்மந்திகளான பங்காரப்பாவும் ராஜ்குமாரும் ஆடிய ஆட்டம் எல்லாம் எனக்குத் தெரியாதா அதற்கு பதிலடியாகவே கடத்தல் என்ற ரீதியில் பேசியிருக்கிறார்.

அப்படியிருக்கையில் ராஜ்குமார் கடத்தப் பட்டால் கலவரம் மூளாதா என்ன? ஆனால் ஓரிரண்டு நாட்கள் கழித்துத்தான் வெறியர்களுக்கே உறைத்திருக்கிறது - தமிழர்கள் தாக்கப்பட்ட கோபத்தில் வீரப்பன் ராஜ்குமாரை கொலை செய்து விட்டால்? ராஜ்குமார் குடும்பமே கண்ணீர் மல்க அவரது இரசிகர்களை மன்றாடிக் கேட்டுக்கொண்டது, கலவரம் வேண்டாம், ராஜ்குமார் நலன் பொருட்டு அமைதி காக்க வேண்டும் என்று.

முதல் நாள் அசம்பாவிதங்களின் போது காணாமல் போயிருந்த காவல்துறையினர் தங்கள் பொறுப்பினை உணர்ந்தது போல் மெதுவாக சட்ட ஒழுங்கை நிலைநிறுத்த தொடங்கினர். அமைதியும் திரும்பியது. ஆனால் இன்னமும் பதட்டம் குறைந்த பாடில்லை.

ராஜ்குமார் ஒரு கன்னட சூப்பர் ஸ்டார் தான். வயது 60க்கு மேலாகி விட்டது. முன்னளவு அதிகப் படங்களில் அவர் நடிப்பதில்லை. ஆயினும் அவருக்கென்று பெரும் இரசிகர் குழாமொன்றிருக்கிறது. தமிழில் சிவாஜி கணேசன் போன்று தான் ராஜ்குமாராலும் சினிமா செல்வாக்கை வாக்குகளாக மாற்ற முடியவில்லை. எனவே அரசியல் தலைவராக அவரால் பரிணமிக்க இயலவில்லை. இருந்தாலும் கன்னட உலகின் முடிசூடாமன்னன் என்ற பெயர் பெற்றிருந்ததால் அவரது கடத்தல் அவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. மாநில முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா தகவல் அறிந்தவுடன் மற்ற வேலைளையெல்லாம் கிடப்பில் போட்டுவிட்டு ராஜ்குமார் குடும்பத்தினரைப் பார்த்து ஆறுதல் சொல்கிறார், பத்திரிகையாளர்களைச் சந்தித்து நடிகரை விடுவிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கிறார். தமிழ் நாட்டுக்குப் பறந்து வந்து முதல்வர் கருணாநிதியிடம் ஏதாவது செய்யுங்கள் எப்படியாவது ராஜ்குமாரை விடுவிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று மன்றாடுகிறார். நக்கீரன் ஆசிரியர் கோபால் மீது தேவையில்லாமல் கர்நாடக அரசு தொடுத்திருந்த வழக்கு வாபஸ் பெறப்படுகிறது. வீரப்பனுக்கு பொது மன்னிப்பு அளிப்பதில் ஆட்சேபனை இல்லை என்கிறார். வீரப்பன் பொதுவாக சென்று வணங்கும் மாதேஸ்வரன் மலைக் கோயிலுக்கே சென்று ராஜ்குமார் உருப்படியாகத் திரும்ப வேண்டும் என்று பூஜைசெய்கிறார். இவ்வாறு நிலைகொள்ளாமல் தவிக்கிறார் மனிதர், பாவம் அவர் பிரச்சனை அவருக்கு. ஏதாவது விபரீதம் நிகழ்ந்தால் கர்நாடகத்தில் இரத்தக் களரி தான். சினிமா வெறியும் மொழிவெறியும் எந்த அளவிற்கு மக்களை சீரழிக்கிறது என்பதற்கு இப்போது அரங்கேறும் காட்சிகளே நல்ல உதாரணம். இத்தனைக்கும் அம்மாநிலத்தில் தமிழ் நாட்டில் போன்று இன உணர்வின் அடிப்படையில் இயங்கும் கட்சிகளுக்கு அவ்வளவாக ஆதரவு இல்லை.



திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் இங்கே இன உணர்வு மங்கிப்போய் இருப்பதுதான்.

இது ஒரு புறமிருக்க வீரப்பனால் எப்படி ஆண்டுக் கணக்கில் பொலிஸை தாக்குப் பிடித்து தமிழ்நாடு-கர்நாடக எல்லைகளில் 6000 சதுர கிலோமீட்டர் அளவு பரந்து விரிந்திருக்கும் அடர்த்தியான காடுகளில் ஏக சக்ராதிபதியாக கோலோச்ச முடிகிறது என்று அகில உலக அளவில் எல்லோரும் அதிசயிக்கிறார்கள்.

ஒரு நண்பர் புலம்பினார்-என்னையா இது அக்கிரமமாயிருக்கிறது? பனிமலையின் உச்சிக்கே சென்று, உயிரைப் பணயம் வைத்துப் போராடி பாகிஸ்தானைத் தோற்கடிக்கிறது இந்தியா. கேவலம் ஒரு காட்டுவாசி, அந்தக் காலத்துத் துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு காலம் தள்ளிக் கொண்டிருக்கும் ஒரு நபரைப் பிடிக்க முடியவில்லையே.... சே வெட்கமாகயிருக்கிறது....

ஆனால் அவர் புரிந்து கொள்ளவில்லை. வேறொரு நாட்டுடன் போராடுவது வேறு. உள்நாட்டுக் கலகங்களை அடக்குவது வேறு. வீரப்பனைப் பிடிப்பதற்காக காடுகள் மீது ராக்கட் கணைகளை ஏவவா முடியும். அல்லது காட்டினையே அழித்துவிட முடியுமா?

அடர்த்தியான காடு பாறைகளே இருக்காது. அட்டைகளையும் காட்டு மிருகங்களையும் மீறி உள்ளே செல்ல வேண்டும். அங்கே குகைகள் இருக்கும், ஒதுங்கிக்கொள்ளவென்று இயற்கையாகவே அமைந்த இடங்கள் இருக்கும். உள்ளே இருப்பவர் வெளியே இருந்து வருவோரை கண்டறிந்து எளிதில் தப்பிக்கலாம்.

காடுகளோடு ஒன்றிப் போய் இருப்பவர் வீரப்பன். எழுகின்ற ஒலிகளை வைத்துக் கொண்டு எந்தப் பறவை எந்த மிருகம், எந்தத் திசை, எவ்வளவு தூரத்திலிருந்து வருகிறது என்றெல்லாம் துல்லியமாகக் கணிக்கும் வல்லமை பெற்றவர் அவர் என்று சொல்லப்படுகிறது. காடுகளையே பார்த்தறியாத பொலிஸ்காரர்கள் எங்ஙனம் அத்தகைய மனிதர்களை எதிர்கொள்ள முடியும்?

முறுக்கு மீசை வால்டர் தேவாரம் முண்டா தட்டினார் வீரப்பனை பிடித்துக் காட்டுகிறேன் என்று. என்ன ஆயிற்று? அப்பாவி கிராமத்து மக்கள் எல்லாம் தான் பொலிஸ் வெறிக்குப் பலியானார்கள். அக்கம் பக்கத்திலிருந்த ஏழை பாழைகள், வீரப்பனுடைய சந்தனக் கடத்தல் அல்லது யானைத் தந்தம் கடத்தல் தொழிலில் ஏதோ கொஞ்சம் காசு பார்த்தவர்கள், அடாவடி அதிகாரிகள் அல்லது கான்ட்ராக்டர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றுவதற்காக வீரப்பன் மீது அபிமானம் உள்ளவர்கள் மீது அவருடைய கொடூரத்துக்குப் பயந்து அவர் கட்டளையை நிறைவேற்றியவர் என்று பலதரப்பினர் கர்நாடக-தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரிடம் படாத பாடு பட்டார்கள். பல்வேறு சித்திரவதைக்குள்ளானார்கள். பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்குள்ளானார்கள். பலர் கொல்லவும் பட்டனர். கடந்த பத்தாண்டுகளாக கர்நாடக-தமிழ் நாடு எல்லைகளில் வாழும் மக்கள், குறிப்பாக தமிழர்கள் சொல்லொணாத் துயர் அனுபவித்து வருகிறார்கள். மனைவி முத்து லட்சுமி இப்போது தனது மகள் வித்தியாராணியுடன். மேட்டூர் பண்ணைப் பகுதியில் வாழ்கிறார் பரிதாப நிலையில், வாழ வாழியில்லை. வீரப்பனின் மனைவி என்பதால் அவருக்கு உதவி செய்யவே மற்றவர்கள் அஞ்சுகிறார்கள். பொலிஸ் தொந்தரவு வேறு. அவருக்கு யாரும் வேலை கொடுக்க மறுக்கிறார்கள். மகளை பள்ளியில் சேர்த்துக் கொள்ளவே அச்சப்படுகிறார்கள். அவருக்கு பொலிசார் இழைத்த கொடுமைகளைப் பற்றி கேட்டால் மனம் பதைபதைக்கும். இரத்தம் கொதிக்கும்.

ஓர் உயர் பொலிஸ் அதிகாரி நம்மிடம் கூறினார் காட்டைப் பற்றி எதுவுமே தெரியாத பொலிசார் காட்டுடன் ஐக்கியமாகி விட்ட ஒருவரை பிடிக்க வேண்டுமானால் காட்டுப் பாதையில் நன்கு பழகிய எல்லா அம்சங்களையும் நன்கு உணர்ந்திருக்கும் அந்தப் பகுதி மக்களின் ஒத்துழைப்பு வேண்டும். எப்படி முடியும்? தேவாரம் போன்ற அதிகாரிகள்தான் ஒட்டுமொத்தமாக எல்லோரையும் விரோதிகளாக பாவித்து கொடுமைகளுக்குள்ளாக்கி அந்நியப்பட்டு விட்டார்களே. எப்படி ஒத்துழைப்புக் கிடைக்கும்? கொஞ்சம் அரைகுறையாக காடுகளைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கும் வனத்துறை அதிகாரிகளும் வீரப்பன் பிரச்சனைக்குப் பிறகு அவர் உலவுவதாக அஞ்சப்படும் பகுதிகள் பக்கமே செல்வதில்லை. எதற்காக நாங்கள் உங்களை விட வேண்டும் சார். அந்தாளை தேடி நாங்கள் போனால் அவன் சுடுவது நிச்சயம். மக்களுக்கு வேண்டுமானால் அவன் ஒரு ராபின்ஹூட் போல் இருக்கலாம். ஆனால் அரசு அதிகாரிகளை குறிப்பாக காட்டிலாகா பொலிஸ் துறையைச் சார்ந்தவர்களை ஒளித்து விடுவதில் குறியாயிருக்கின்றான். அவனைச் சொல்லியும் குற்றமில்லை. ஒரு பக்கம் சளைக்காமல் இலஞ்சம் வாங்குவது, பெரும் புள்ளிகளை எல்லாக் கடத்தல் வேலைகளிலும் ஈடுபட்டு ஏதாவது பிரச்சனை வந்தால் அப்பாவிகளைத் தண்டிப்பது இப்படியே செய்து விட்டார்கள் எங்கள் ஆட்கள்.... எப்படியோ நாங்கள் போவதில்லை என்று முடிவு செய்து விட்டோம். பொலிஸ் பார்த்துக் கொள்ளட்டும் என்றார் ஒரு வனத்துறை அதிகாரி. இப்படிப் பட்ட சூழலில் தான் தந்தம், சந்தனமரம் ஆகியவற்றைக் கடத்துவதை கைவிட்டுவிட்டு மனிதர்களைக் கடத்தி பதிலுக்கு பிணைத் தொகை இலட்சக்கணக்கில் வாங்கி வீரப்பன்காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார். அவருக்கு வாழ்க்கை போரடித்திருக்கும். வயது ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆஸ்துமாவினால் அவஸ்தைப் படுகின்றார். என்று சொல்லப்படுகிறது. போதும் காட்டு வாழ்க்கை அல்லல் எல்லாம் என்று அவர் நினைப்பதாக கூறப்படுகிறது. இக்கட்டுரை எழுதி முடிக்கும் நேரத்தில் வீரப்பனிடமிருந்து அவரது கோரிக்கைகள் அடங்கிய கசட் தமிழக அரசை வந்தடைந் திருப்பதாக செய்தி வந்திருக்கிறது. ஆனால் கோரிக்கைகள் என்ன என்று தெரியவில்லை. ஜாக் பாட் போல ராஜ்குமாரைப் பிடித்திருக்கிறார். இம்முறை அவரது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படலாம். வீரப்பனின் கதைக்கு மகிழ்ச்சிதரும் நிம்மதியான முடிவு ஏற்படக் கூடும். ■

---

**வெளி நாடுகளுக்குச் சென்றவர்கள், அங்கு அவர்களுடைய தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுகின்றனர். அவ்வாறு இங்கு வருபவர்கள் படும் துயரம் தொடர்பாக மனித கௌரவத்துக்கான அமைப்பு விடுத்துள்ள அறிக்கையின் முதல் எட்டு பகுதிகளையும் கடந்த வாரங்களில் இங்கு தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.**

### மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு

## திருப்பி அனுப்பப்படுவோர் இங்குபடும் துயரங்கள் 09

வெளி நாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்படுவோர், அவர்கள் வசம் தேசிய அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும் என்பதை கடந்த வாரத்தில் இப்பத்திகளில் குறிப்பிட்டிருந்தோம். தேசிய அடையாள அட்டை மட்டுமல்லாமல் கொழும்பில் வசிக்கும் ஒவ்வொருவரிடமும் அவர்கள் பெயர்பட்டியல், அவர்கள் வசிக்கும் பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கான சான்றிதலும் அவர்களிடம் இருக்க வேண்டும்.

பொலிஸ் நிலையத்தில் வழங்கப்படும் விண்ணப்பப்படிவம் ஒன்றினைப் பெற்று, வீட்டின் உரிமையாளர் தன்னுடன் வீட்டில் தங்கியிருப்போர் அனைவரின் பெயரையும் பதிந்து குறிப்பிட்ட பிரதேச பொலிஸ் தலைமை அதிகாரிகளிடம் இரு பிரதிகள் ஒப்படைக்க வேண்டும். இவற்றைப் பரிசீலித்து அவ்வதிகாரி ஒப்பமிட்டபின், ஒரு பிரதியை பொலிஸ் நிலையத்தில் வைத்துக் கொண்டு அடுத்த பிரதியை வீட்டு உரிமையாளரிடம் கொடுப்பார்.

பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொருவருடைய சொந்த, ஊர், பெயர் போன்ற விபரங்களையும் பிரதம குடியிருப்பாளருக்கு அவர்கள் சொந்தமானால் அதற்கான விவரங்களையும், அந்த வீட்டில் தற்காலிகமாக வந்து தங்குபவராயின் அவ்வாறு தங்கியிருப்பதற்கான காரணம் என்ன என்பதையும் தெரிவித்திருக்க வேண்டும்.

பொலிஸில் பதிவு செய்ததற்கான ஆவணம் அநேகமாக தேசிய அடையாள அட்டையுடன் சாலைத்தடை நிலையங்களில் பரிசீலிக்கப்படும். அது சட்டப்படியான ஒரு தேவையல்ல. இருப்பினும் ஒவ்வொரு தமிழரிடமும் இது கட்டாயமாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. தமிழர்கள் பெருபாலும் பொலிஸ் பதிவுக்கான ஆவணம் தம்வசம் இல்லாமையினால் கைதாவது கண்கூடு.

### தழும்பு மற்றும் வடுக்கள்

திருப்பியனுப்பப்பட்ட தமிழர்கள் அல்லது வடகிழக்கில் இருந்து நேரடியாக கொழும்புக்கு வந்து சேரும் தமிழர்கள் தங்கள் உடம்பில் பழைய காயங்களின் தழும்போ அல்லது வடுக்களோ கொண்டிருந்தால், அவர்கள் புலிப்படையில் சேர்ந்து பயிற்சி பெற்றுள்ளனர் என்ற சந்தேகத்துக்கு இடமளிப்பதனால், அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவதற்கு வாய்ப்புண்டு. உடலில் எந்தவொரு சிறு காயமிருந்தாலும் அந்நபர் பொலிஸாரினாலோ இராணுவத்தினாலோ கைது செய்யப்படுவதற்குரிய வாய்ப்புகள் உண்டு.

கொழும்பில் தமிழர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவது தொடர்கிறது. மனித கௌரவத்துக்கான அமைப்பு தற்போது எடுத்துக் கொண்டுள்ள ஒரு சம்பவத்தை இங்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

கதிரவேலு கமலராஜன் (வயது 25) இவர் 1996-97 ஆகிய காலங்களில் கைது செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட இடமாகக் கருதப்படும். செம்மணிக்கருகிலுள்ள கைதடியில் வைத்து 25.5.96ல் முதன் முதலில் கைது செய்யப்பட்டார். இவர் கோப்பாயிலுள்ள முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். இவருடைய கைகளிலும் உடலின் வேறு பகுதிகளிலும் இவருக்கிழைக்கப்பட்ட சித்திரவதைகளின் போது ஏற்பட்ட காயங்களின் தழும்புகள் காணப்படுகின்றன. இவருடைய கைகளில் உள்ள காயத் தழும்புகளை மறைப்பதற்காகவே இவர் எப்போதும் நீளமான கையுள்ள சட்டைகளையே அணிந்து கொண்டு நடமாடுவது வழக்கம்.

தமிழர்களை பாலியல் ரீதியாகவும் ஏனைய வழிமுறைகளினாலும் துன்புறுத்துவது சில[illegible]சியைத் தருவதுண்டு. த[illegible] அங்கங்களில் எங்காவது [illegible]சயை மேற்கொள்ளும் போது ஏற்பட்ட காயங்களுக்கும் வேறு வகையில் பெற்ற காயங்களுக்குமிடையில் வித்தியாசம் காண்பதற்கு தமிழர்களைக் கைது செய்யும் அலுவலர்களுக்குத் தெரியாது.

### நடமாட முடியாத நிலையேற்படுத்தும் சந்தேகம்

தமிழர் ஒருவர் ஏதாவது நோய் காரணமாகவும் அல்லது பிறவியிலும் அங்கயீனராக இருக்கும் பட்சத்தில், அவரும் புலிப் படையில் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அங்கயீனப்பட்டிருக்கிறார் என்ற சந்தேகத்திற்கு இடமளிக்கிறார்கள். குறிப்பாக தமிழ்ப் பெண்கள் எவராவது அங்கப் பழுதுடையவராக இருப்பாரானால், அவர் தப்பிப்பிழைத்த தற்கொலை குண்டுதாரியாக இருக்கக் கூடும் என்ற சந்தேகத்துக்கிடமானவராகிறார். ஏனெனில் பெரும்பாலும் தற்கொலைக் குண்டுதாரிகளாக மாறுபவர்கள் பெண்களாக இருப்பதனால்தான்.

(மேலும் வரும்)

# பலமடைந்து செல்லும் பேரினவாத சக்திகள்!

அலசுவது - இராஜதந்திரி

**1977ம்** ஆண்டின் பின்னர் இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி அஸ்தமித்திருந்தது.

இதனையடுத்துப் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்குரிய ஒழுக்கம், நடத்தை என்பவை கூட கேலிக்குரியதாக மாறியிருப்பதையே கடந்த வாரம் இலங்கைப் பாராளுமன்றில் இடம் பெற்ற சம்பவங்கள் எடுத்தியம்பியிருந்தன.

ஜனாதிபதி சந்திகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேரடியாகவே பாராளுமன்றத்தில் தோன்றி புதிய அரசியலமைப்பு மசோதாவைக் கடந்த வாரம் சமர்ப்பித்திருந்தார்.

அச்சமயம் எதிர்க்கட்சி ஆசனத்திலிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிட்டுக் குழப்பம் விளைவித்ததுடன் உத்தேச அரசியலமைப்பு மசோதாவின் பிரதிகளையும் கிழித்தெறிந்தனர். கூடவே அப்பிரதிகளைத்தீயிட்டும் கொளுத்தியிருந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா எதிர்க்கட்சியினரது கூச்சல், குழப்பங்களைப் பொருட்படுத்தாது சுமார் இருமணிநேரம் தமது உரையை நிகழ்த்தியிருந்தார். இருந்தபோதிலும் ஒரு தேசத்தின் கௌரவத்துக்குரிய சபை, என்ற ஸ்தானத்தைப் பாராளுமன்றம் பெரிதும் இழந்திருந்த ஒரு சூழ்நிலையிலேயே ஜனாதிபதியின் உரை இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது.

காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா பதவியிலிருந்தபோது கூட ஒருதடவை பாராளுமன்றத்தில் இதுபோன்ற அமளி துமளி ஏற்பட்டிருந்தது. ஜனாதிபதி பிரேமதாஸா மீது அவரது அதிருப்தியாளர்களான காலஞ்சென்ற காமினி திசாநாயக்கா, லலித் அத்துலத் முதலி ஆகியோர் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவர எத்தனித்தனர். அச்சமயம் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா பாராளுமன்றத்தில் தோன்றி ஒரு நீண்ட உரையை நிகழ்த்தியிருந்தார்.

அப்போது இன்று ஆளுங்கட்சி உறுப்பினர்களாக இருக்கும் பலர் எதிர்க்கட்சி ஆசனங்களில் அன்று அமர்ந்திருந்தனர்.

திரு.பிரேமதாஸா தமது பேச்சை ஆரம்பித்த நேரம் முதற்கொண்டு, அது முடிவடையும்வரை கூச்சலிட்டுக் குழப்பியவர்களாகவே அவர்கள் இருந்தனர்.

எனவே சுமார் ஏழுவருடங்களுக்கு முன்னர் நடந்த அச்சம்பவத்தையொத்ததாகவே கடந்தவாரம் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் உரையையும் அன்றைய ஆளுங்கட்சினரான இன்றைய எதிர்க் கட்சியினர் குழப்பி விட்டிருந்தனர். பாராளுமன்றத்தினுள்ளே உத்தேச புதிய அரசியலமைப்பு மசோதாவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் குழப்பம் போட்ட அதே சமயம் கொழும்பில் பல்வேறு இடங்களிலும் புதிய அரசியலமைப்புக் கெதிராக ஆர்ப்பாட்டம், சத்தியாக்கிரகம் என்பவை நடந்தேறியிருந்தன.

ஜனதாவிமுக்தி பெரமுன (ஜே.வி.பி) கட்சியினர் வீதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர். அதேவேளை பௌத்த பிக்குமார்கள் கொழும்பு புறக்கோட்டையில் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டிருந்தனர்.

இன்றைய பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு இன்னும் ஓரிருவாரங்களே இருக்கும் தறுவாயில் ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி அடுத்துவரும் பாராளுமன்ற ஆட்சியைத் தனதாக்கிக் கொள்வதில் ஒரு பலப்பரீட்சைக்கே முகங்கொடுக்க வேண்டியதாகவுமிருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் ஆதரவினை இழந்தநிலையில் கண்டி நகருக்குச் சென்று அஸ்கிரிய, மல்வத்த பௌத்தபீடாதிபதிகளின் ஆசீர்வாதத்தைப் பெறமுயன்றார். ஆனால் அம்முயற்சியிலும் சந்திரிகா அம்மையாருக்குத் தோல்வியே கிடைத்திருந்தது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏற்றுக் கொள்ளப்படாதநிலையிலும், பௌத்தமகாசங்கத்தினராலும் ிராகரிக்கப்பட்டு அரசியல் அரங்கில் ஒரு முக்கிய சக்தியாக உருவாகிவரும் ஜே.வி.பியினரும் எதிர்த்துள்ள நிலையில் பொது ஜன ஐக்கிய முன்னணி தயாரித்துள்ள புதிய அரசியலமைப்பு கேலிக்குரியதாகவே மாறியுள்ளது.

கடந்தகாலங்களில் ஆளுங்கட்சிகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்துடன் அரசியலமைப்புக்களை நிறைவேற்றியிருந்தன.

இலங்கை சுதந்திரமடைந்தபின்னர் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியில் 1971ம் ஆண்டிலும், பின்னர் ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆட்சியில் 1978ம் ஆண்டிலும் இருதடவைகள் புதிய அரசியலமைப்புக்கள் கொண்டுவரப்பட்டிருந்தன.

அப்போதெல்லாம் எதிர்க்கட்சிகளின் ஆதரவைப்பெற ஆளுங்கட்சி பிரயத்தனங்களை மேற்கொண்டிருக்கவில்லை.

ஆனால் இன்றைய பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையே புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்காகப் பெரிதும் எதிர்பார்த்திருந்தது.

ஆயினும் மீளவும் பாராளுமன்ற ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்பதில் குறியாக இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, ஆளுங்கட்சியின் 'எடுப்பார் கைப்பிள்ளை'யாக இருக்க விரும்பவில்லை. இதன்காரணமாகவே தனக்குரிய தருணம் வரும்வரை காத்திருந்துவிட்டு, ஆளுங்கட்சியை ஐ.தே.க சங்கடத்திலாழ்த்தி விட்டிருந்தது.

எது எப்படியிருந்தபோதிலும் நாற்பது வருடங்களுக்கு முன்னர் காலஞ்சென்ற பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா, பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் பலத்த எதிர்ப்பைச் சந்தித்திருந்தார்.

ஏறத்தாழ அதனையொத்த, அல்லது அதனைவிட மேலான எதிர்ப்பையே இன்று எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் புத்திரி சந்திரிகா எதிர்கொண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஆளுங்கட்சியினர் புதிய அரசியலமைப்பின் மூலம் ஒரே கல்லில் இருகாய்களை வீழ்த்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளதையும் அறிய முடிகின்றது.



நாட்டில் புதிய அரசியலமைப்புக்கு வழியமைக்கும் அதேசமயம் வடக்கு கிழக்குப் பிரச்சனைக்கும் தீர்வொன்றைக் காணுவதையே சந்திரிகா அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆனால் தமிழ் அரசியல்கட்சிகள் மற்றும் வடக்கு-கிழக்கில் ஒரு முக்கிய அரசியல்-இராணுவ போராட்ட சக்தியாக இருந்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் தகுந்த வகையில் பேச்சுக்களை நடத்தாது, பொது ஜன ஐக்கிய முன்னணியினர் நடந்து கொள்ளும் முறை வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை விசனத்துக்குரியதாகவே இருக்கின்றது.

அதேசமயம் புதிய அரசியலமைப்பு விடயத்தில் தென்னிலங்கையின் பௌத்த மகாசங்கத்தினரும், பேரினவாதக் கட்சிகள், மற்றும் பிரதான எதிர்க்கட்சியும் எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ள நிலையில் வடக்கு-கிழக்கு மக்களும் புதிய அரசியலமைப்பையோ அல்லது அதில் இடம்பெறும் இனப்பிரச்சனைக்கான தீர்வுத் திட்டத்தையோ ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

ஏனெனில் புதிய அரசியலமைப்பும் அதனோடிணைந்த இனப்பிரச்சனைத் தீர்வுத் திட்டமும் வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் விதத்தில் தமிழீழவிடுதலைப் புலிகள் மற்றும் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளினதும் ஏகோபித்த சம்மதத்தைப் பெற்றிருக்கவில்லை.

இது தவிர தென்னிலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, மற்றும் ஏனைய பேரினவாத அமைப்புகள் புதிய அரசியல் அமைப்பை எதிர்த்துள்ள நிலையில், வடக்கு-கிழக்கு மக்கள் அதனை ஏற்கும் பட்சத்தில் தொடர்ந்து பிரச்சனைகளை எதிர் நோக்கியவர்களாகவே இருப்பர்.

எனவே சந்திரிகா அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்பு மசோதா பராளுமன்றத்தில் நிறைவேறினாலும் கூட அந்த அரசியலமைப்புச் சம்பந்தமாக தொடர்ந்து பிரச்சனைகள் இருந்து வருமென்றே கருதமுடியும்.

வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குரிய தீர்வு முயற்சிகள் என்ற ரீதியில், பண்டா-செல்வா ஒப்பந்தம் முதல் கொண்டு, இலங்கை இந்திய ஒப்பந்தம் வரை கையாளப்பட்ட அனைத்து முயற்சிகளுமே தோல்வி கண்டுள்ளன.

அத்துடன் ஜனாதிபதி சந்திரிக்கா தமது தீர்வு முயற்சி என்ற வகையில் புதிய அரசியலமைப்பு மசோதாவையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போது பலத்த எதிர்ப்பையே சந்தித்திருந்தார்.

இனப்பிரச்சனைத் தீர்வு என்ற விடயத்தை ஆராயும் போது வடக்கு கிழக்கு மக்களின் தனித்துவம், சுயநிர்ணயம், பிரதேசப்பரம்பல், போன்ற அடிப்படை அம்சங்கள் தொடர்பாக பேரினவாத சக்திகள் எப்போதுமே முட்டுக்கட்டைகளைப் போட்டு வருவதையே வழக்கமாகக் கொண்டுள்ளன.

சில மாதங்களுக்கு முன்னர் நோர்வே நாடு இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் விதத்தில் மத்தியஸ்த உதவிகளை வழங்கமுன்வந்திருந்தது.

அப்போது கூட பேரினவாதிகள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர். ஆயிரக்கணக்கான பௌத்த குருமார்கள் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தி நோர்வேயின் தேசியக் கொடியையும் எரித்து விட்டிருந்தனர்.

'வைக்கோல் பட்டறை நாய்'வைக்கோலைத் தானும் சாப்பிடாது. சாப்பிட வருவோரையும், அருகில் வர அனுமதிக்காது.

அதைப் போலவே நாட்டின் முக்கிய பிரச்சனையான இனப்பிரச்சனைக்கு தாமும் ஒரு தீர்வைக்காணாது தீர்வு முயற்சிகளையும் எதிர்த்து நிற்போராகவே பௌத்த மகா சங்கத்தினரும் ஏனைய பேரினவாதிகளும் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் புதிய அரசியலமைப்பு யோசனைகள் வடக்கு-கிழக்குப் பிரச்சனையையும் தீர்க்கும் விதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி சந்திரிக்கா குறிப்பிட்டதும், அதற்குரிய எதிர்ப்பு தமிழ்த்தரப்பைவிட தென்னிலங்கை பேரினவாதிகளிடமிருந்தே முதலில் வெளிப்பட்டுள்ளதென்பதை ஜனாதிபதி சந்திரிக்கா உணர வேண்டியவராகின்றார்.

அத்துடன் தமது தந்தையார் மேற்கொண்ட முதலாவது இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சி முதல், இன்று தாம் மேற்கொள்ளும் முயற்சிக்கும் எதிர்ப்பலைகள் உருவாகியுள்ள நிலையில், வடக்கு கிழக்கில் ஆயுதப்போராட்டம் வெடித்தமைக்கான காரணத்தைத் தற்போது ஜனாதிபதி சந்திரிக்காவினால் நன்கேயறிந்து கொள்ள முடியமென்றே எதிர்பார்க்க முடியும்.

ஜனாதிபதி சந்திரிக்கா தமது மேடைப்பேச்சுகள் பலவற்றில் இன்றைய இனப்பிரச்சனை தீர்க்கப்படாவிட்டால் மேலும், மேலும் பிரபாகரன்கள் தோன்றிக் கொண்டேயிருப்பர் என்று அடிக்கடி கூறுவதுமுண்டு.

எனவே தென்னிலங்கைப் பேரினவாதிகள் இனப்பிரச்சனைக்கு ஒரு சுமுகமான அரசியல் தீர்வு எட்டப் படுவதை மட்டும் விரும்பவில்லை. தினமும் வடக்கு கிழக்கு யுத்தத்தில் வாய் பிளந்து வானைப் பார்த்து உயிர் துறப்போரையும் துச்சமாகவே மதிக்கின்றனர் என்பதையே ஜனாதிபதி உணர வேண்டியவராகின்றார்.

இந்நிலையில் அப்பேரினவாதிகளின் கொட்டம் அடக்கப்படாத வரை இனப்பிரச்சனையும் தீரப்போவதில்லை என்பதையே அறியமுடிகின்றது. ○

## அதிரடி அய்யாத்துரை



**இரு வேறு** நூல் வெளியீடுகள் கடந்தவாரம் இடம்பெற்றிருந்தன. ஒரு நூலின் ஆசிரியர் பேனாவை ஆயுதமாகக் கொண்டவர். மற்றவர் துப்பாக்கி ஏந்தியவர். இவர்கள் யார் என்று கேட்கிறீர்களா? மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினமும், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சரத்முனசிங்காவுமே அவ்விரு வருமாவர். எஸ்.எம்.கோபாலரத்தினம் 'ஈழமண்ணில் ஒரு இந்தியச் சிறை' என்ற தமது இந்திய அமைதிப்படைக்கால அனுபவங்களை மட்டுநகரில் ஒரு நூலாக வெளியிட்டிருந்தார். மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க தமது வடக்கு கிழக்கு யுத்த அனுபவங்களை ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் இரு நூல்களாக கொழும்பில் வெளியிட்டுள்ளார். எமது வடக்கு கிழக்குப் பிரச்சனையை பெருங்காவியங்களாகக் கூட எழுதுமளவுக்கு நிறையவே விடயங்கள் இருக்கின்றன.

**நல்லைக்கந்தன் கொடி ஏற்றம்** சென்றவாரம் நடந்துள்ளது. யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரை ஆண்டுதோறும் நல்லூர்க்கோயிலின் 25 நாட்கள் உற்சவமே ஓரளவாயினும் துயரச் சுமைகளை மறக்க உதவுகின்றது.

**இந்திய இராணுவத்தளபதியாக** தமிழரான சுந்தரராஜன் பத்மநாபன் என்பவர் பதவியேற்றுள்ளார். ஜெனரல் கிருஷ்ணசாமி சுந்தர் ஜி என்பவருக்குப் பின்னர் இந்திய இராணுவத்தில்ஒரு தமிழினத் தளபதியாக ஜெனரல் பத்மநாபன் பதவியேற்கவிருக் கிறார். இந்தியாவின் பாரபட்சமற்ற துவேசங்களற்ற போக்கிற்கு தமிழரான புதிய தளபதியின் நியமனம் ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

**ஏரிக்கரைப் பத்திரிகை** நிறுவனத்தின் புதிய தலைவர் ஒரு பத்திரிகையாளர். இதனால் நிறுவனத் தலைவராக மட்டுமல்லாமல் அடிக்கடி செய்தியாளராகவும் அவர் ஏரிக்கரைப் பத்திரிகைகளில் கட்டுரைகள், செய்திகளை எழுதி வருகிறார். அரசின் நலன்களை முற்றுமுழுதாகப் பாதுகாத்து பத்திரிகையையும், நிறுவனத்தையும் நடத்தவேண்டுமென அவருக்கு மேலிடம் பணித்துள்ளது.

**இலங்கை இராணுவத்தின்** தலைமை விரைவில் மாறவிருக்கின்றது. இந்த மாற்றத்துடன் மிகவும் இளவயதான அதிகாரிகளைக் கொண்ட புதிய சந்ததி பொறுப்புக்களை ஏற்கவிருக்கிறது. இராணுவம் வளர்ச்சிகண்ட நிலையில் அதிகாரிகள் எண்ணிக்கையும் உயர்ந்தேயுள்ளது. ஆனால் அந்த உயர்வுகளின் தரங்கள்தான் குறிப்பிடத்தக்கதாக இல்லை என்கிறார்கள் விமர்சகர்கள்.

**பாராளுமன்றம் கூடும் நாட்களில்** இலங்கை வானொலியின் இரவு 9.00 மணி செய்தியைத் தொடர்ந்து, 'பாராளுமன்றத்தில் இன்று' என்ற தலைப்பில் ஒரு தொகுப்பு இடம்பெறுவதை அனைவரும் கேட்டிருப்பீர்கள். அவையில் உரையாற்றும் சகல உறுப்பினர்களும் மும்மொழிகளிலும் பேசும் கருத்துக்களை இரத்தினச் சுருக்கமாகவும் பாரபட்சமில்லாமலும் தொகுத்துத் தரும் ஒருவரைப் பாராட்டாமலிருக்க முடியாது.ங திரு.அன்ரனி இராசையா என்ற பெயருக்குரிய அவர் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளையும் தெரிந்திருப்பதனால் மட்டுமல்லாமல், உறுப்பினர் ஒவ்வொருவரினது பேச்சின் முக்கியமான அம்சங்களைப் பொறுக்கித் தொகுத்து எடுப்பதனாலும் இந் நிகழ்ச்சி பயனுள்ளதாகவும் தரமானதாகவும் அமைந்திருக்கிறது. 'தொகுத்துத் தருபவர் அன்ரனி இராசையா' என்று மட்டும் கூறுவதனாலும் அத் தொகுப்பினை வாசிப்பவரின் பெயர் அறிவிக்கப்படாமையினாலும் வாசிப்பவரும் அன்ரனி இராசையா தான் என்று பலர் ஏமாறுகின்றனர். ஒவ்வொரு நாளும் வாசிப்பவரின் குரல்களில் மாற்றம் இருப்பதனால் தான் கேட்போருக்கு நிலமை விளங்குகிறது. □

# அவள்தான் ஆனந்தி!

**மந்திரத்தால் மனுசனையும் கொல்லலாம். மங்கையரின் வனப்பையும் வெல்லலாம். வசதி படைத்த மந்திரவாதி நம்பூதிரியின் ஆசைகளுக்கு ஆப்பு வைக்க, ஆயத்தமானாள் அழகிய இளம் பெண்ணொருத்தி. அவள்தான் ஆனந்தி.**



இன்று ஆனந்தபுரியாக இருக்கும் இந்தக் கிராமத்தில் நாற்பது ஆண்டு களுக்கு முன் நடந்தது. இப்போது ஆனந்தி நரைத்துப் போன கிழவி.

ஆனால் அன்று-

கேசவபூமிக்குப் பஞ்சம். பிழைக்க வந்த ஓர் அழகுத் தேவதை, ஆனந்தி.

வேலை தேடிப் போன கணவர் வீடு வந்து சேரும் போது மிகவும் களைத்துப் போயிருந்ததைப் பார்த்தாள் மனைவி. அந்தக் களைப்பு வேலை கிடைக்காததால் மட்டுமில்லை; பகல் முழுக்கச் சாப்பிடாத தாலும் தான் என்றான் கணவன்.

சாப்பிட வீட்டில் எதுவுமில்லை, தண் ணீரைத்தவிர.

"இந்த ஊருக்கு நாம வந்திருக்கவே கூடாதுங்க... இது ஊரே இல்லை..." என்றாள் ஆனந்தி. உள்ளே போய்க் கண வருக்காக ஒரு மண் குவளைத் தண்ணீர் கொண்டு வந்தாள்.

"ஏன் நம்பூதிரி வயல்லே அறுவடை நடக்கலையா?"

"நடந்தது."

"அறுப்பு ஆளுக்க கூலி தரலியா"

"தந்தான் அரைப்படி நெல். தூக்கி அந்தக் களத்திலேயே போட்டுட்டு வந்துட் டேன்."

"ஒரு ஆளுக்கு இந்த ஊர்ல இவ்வளவு தானா கூலி?"

"கூலிக்கு அளக்கற நெல்லை அவ அவ பொடவை பொக்கி வாங்கணும். நான் மடியைக் காட்டினேன். அதனாலதான் அரைப்படி."

"இதென்ன அசிங்கமான பொழப்பு? வேலை பார்த்த கூலிக்கு, பொடவை தூக்கற மானங்கெட்டதனம்?"

"இந்த ஊரே இப்படித்தான் பிழைச் சுட்டிருக்கு... நமக்கு வேண்டாம்... நாளைக்கே போயிடுவோங்க!" சொல்லி விட்டு உள்ளே போனாள் ஆனந்தி. அவளுக்கும் பசித்தது.

"எனக்கு ரொம்பத் தாகமா இருக்கு ஆனந்தி!"

குடத்தோடு வெளியே வந்தாள் அவள். குவளை குவளையாக கோரிக் குடித்தான் கணவன் சந்திரன்.

ஆச்சரியப்பட்டாள் ஆனந்தி.

இது என்ன தாகமோ? தண்ணீர் மொத்தமும் தீர்ந்து விட்டது. ஆனந்திக்கு குடிக்க நீரில்லை. எழுந்து வெளியே போனாள். பக்கத்து வீட்டுக்கதவைத் தட்டினாள். தண்ணீர் கேட்டாள்.

உள்ளே போனவள் ஏமாற்றமாய்த் திரும்பி வந்தாள்.

"குடி தண்ணியே ஒரு சொட்டுக்கூட இல்லேம்மா! ஆச்சரியமா இருக்கு..." வியந்து சொன்னாள் அடுத்த வீட்டுக்காரி.

இவள் தான் கேசவன் நம்பூதிரி மூலம் ஏதாவது ஆபத்தும் வரலாமென்றவள். பயந்து போய் விட்டாள் ஆனந்தி. பரபரப் பாக வீட்டுக்குள் வந்தாள்.

அப்போது தான் கன்னங்கரிய பாம் பொன்று ஓரமாக நகர்ந்து வெளியேறிப் போயிற்று! ஆபத்து வந்து விட்டது ஆனந்தியின் வாழ்க்கைக்கு!

சந்திரன் தரையில் நுரைகக்கிக் கொண்டு துடித்தான். பார்க்கப் பார்க்க கண்களில் நீர் கோர்த்தது. அழுவதற்கு முடியவில்லை. அவலம் குரல்வளையை அடைத்தது! இது அந்த மாந்திரீகன் வேலைதான்!

முடிவெடுத்தவள் அப்புறம் அங்கே நிற்கவில்லை.

"ஒரு ஓலையைச் சுருட்டிப் பந்தமாக்கி னாள். வீடு வீடாகப் போய்க் கதவைத் தட்டினாள். ஊரையே கூட்டி நிறுத்தி னாள்.

"உங்க ஊருக்குள்ளே வந்ததுக்கு எங்களுக்கு இது தான் கதியா?" உரக்கக் கேட்டாள் ஆனந்தி.

ஒவ்வொருவரும் ஆளுக்கு ஆள் முகம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

களத்து மேட்டிலும் உடம்பில் ரவிக்கை போட்டுக் கொண்டு நின்றிருந்த வள் அவள் தான். அப்போது நம்பூதிரிக்கே சந்தேகம். துணுக்குற்றுப் போய்க் கூர்ந்து பார்த்தார்.

கூசிப்போயிற்று அவளுக்கு.

மாராப்புத் துணியால் உடம்பை மூடிய படி திரும்பிக் கொண்டாள் ஆனந்தி.

"ஆருடி நீ?"

கேட்டார் நம்பூதிரி.

"ஊருக்குப் புதுசு திருமேனி!" வேறு யாரோதான் பதில் சொன்னார்கள். அத்தனை பேரும் திறந்த மார்புகளோடு.... திருதிருவென்று விழித்தபடி. சிலர் கைகளைப் பெருக்கல் குறியாக்கி, தோள் களில் போர்த்துக் கொண்டு.

"அதான் ஊர் வழக்கம் தெரியலே!"

கேசவன் நம்பூதிரி சுட்டுவிரலால் களத்தில் நின்ற ஒரு கன்னங்கரியவனை அசைத்துக் கூப்பிட்டார். அவன் பணிவாக வந்து நின்றதுமே பல்லிளித்தான்.

"இவ ரவிக்கையைக் கிழியுடா... நாம ரசிக்கற எதையும் நமக்கு மறைக்கறது புடிக்காது!" உத்தரவிட்டார்.

வந்தவனை நிமிர்ந்து பார்த்தாள் ஆனந்தி.

"திருமேனி உத்தரவு...!"

"கையை என் பக்கத்திலே நீட்டினா வெட்டிப்புடுவேன்... என்னைத் தெரியாது உங்க யாருக்குமே!" சொல்லும், செயலும் ஒன்று போல் சுறுசுறுப்பாயிற்று. அவள் கையில் கறுக்கரிவாள் உயர்ந்து நின்றது.

"விட்டுடு... நீ!"

கையை அசைத்தார் திருமேனி.

"மற்ற எல்லாருக்கும் கூலியை அளந்து போடு! போ... போ..." போனான் அந்த வேலைக்காரன். ஒவ்வொரு பெண்ணும், தங்கள் புடவைகளை கணுக்காலிலிருந்து உயர்த்திக் நீட்டினார்கள். நெல்லை. அளந்து அளந்து போட்டான் களத்தில் நின்றவன்!

"புடவையிலே புடிக்கிறவரை போட் டுட்டே இரு...!

**இருகூரான்**

சொல்லிவிட்டுப் போய்ப் பூ முகத்தின் அருகே திண்ணையில் அமர்ந்தார் நம்பூதிரி. நெல் சுமந்தபடி போகிற பெண்களையே ரசித்துக் கொண்டிருந்தார் நம்பூதிரி.

"உங்களுக்கெல்லாம் அளக்கறதே நமக்கு ஏற்பட்ட ஒரு கருணையாலேதான்!" சொன்னார் அவர்.

அப்படித்தான் ஊரே நம்பிக்கொண்டிருந் தது. அவரது கருணை மட்டும் இல்லை என்றால் பிடிக் குறுணைக்குக்கூட அந்தக் கிராமம் நாதியற்றுப் போயிருக்கும்!அவரிடம் ஏவல் செய்கிற துஷ்ட மூர்த்திகளே கூடப் போதும். அறுவடை செய்யவும், களத்துக்குக் கதிர் சுமக்கவும், தாளடிக்கவும், தூற்றிக் கண்டு முதல் செய்யவும்! என்றாலும் ஏதோ ஒரு பரிதாபம் ஊர்ப்பெண்களின் மீது. அதனால் தான் அறுவடைக்கு அறுவடைஏழையர் வீடு களில் அரைக் கஞ்சிக்கு வழி கிடைத்திருக் கிறது.

எல்லாருக்குமே தெரியும் நம்பூதிரியை.

ஆனால், ஆனந்திக்குத் தெரியவில்லை.

அதனால் தான் எல்லாரும் போன பிறகும் நின்று கொண்டே இருந்தாள் புரியாமல்.

"திருமேனி! எனக்கு இனியும் அளக்கலே! எப்போ அளப்பீங்க?"

கேட்டாள் ஆனந்தி.

"ஏண்டா இவளுக்குக் குடுக்கலே...? குடுங்கடா!" உத்தரவிட்டார் நம்பூதிரி. போனாள் ஆனந்தி.

மாராப்புக்குச் சுற்றியிருந்த துண்டையே மடியாக்கிக் காட்டினாள். அளந்தும் போட்டான் அந்த ஆள். வெறும் அரைப்படி நெல்!

"திடிருமேனி!"

"அதுதாண்டி அளவு. மேல பொதிஞ்ச மாதிரியே மடியிலயும் பொதிஞ்சுகிட்டுப் போ...."

நம்பூதிரியின் வார்த்தைகளில் எத்தனை நீசத்தனம்?

கூசிப்போயிற்று ஆனந்திக்கு. திரு மேனியை முறைத்தாள் அவள்.

"இங்கே நாம வேலை குடுக்கிறதே உங்களை எல்லாம் ரசிக்கறதுக்குத்தான்! நீ மட்டும் மூடி வச்சிருந்தா எப்படி?" கேட்டார் நம்பூதிரி, கேட்ட வாய் மூடுமுன் அவர் முகமெல்லாம் எச்சில் துப்பினாள் ஆனந்தி. துவண்டு போனார் நம்பூதிரி.

அப்புறம்....? அவள் அங்கே நிற்கவில்லை.

"கேசவன் நம்பூதிரி வெறும் திருமேனி யில்லே. மாந்த்ரீகன் திருமேனி. நீ அவரை காறித்துப்பினது தப்பு. போய்க் காலடியிலே விழுந்துடு...! இல்லேன்னா உனக்கு மட்டு மில்லே..... எங்கேயோ போயிருக்கானே உம் புருஷன், அவனுக்கும் ஆபத்து வரலாம்...." என்று பக்கத்து வீட்டுக்காரி வந்து பரிதாபப்பட்டாள் ஆனந்தியிடம்.

"என்ன சொல்றீங்க? அவன் நம்மை எல்லாம் பார்த்து அசிங்கமாப் பேசறான். அதையும் கேட்டுட்டு நாம மான, வெட்கம் இல்லாம நிற்கணும்னா சொல்றீங்க?"

"நம்பூதிரிகள் பார்த்தாலும் பாவமில்லே. தொட்டாலும் தோஷமில்லே! அவுங்க எச்சில் நம்ம மேலபட்டாலே அதிஷ்டம்னு நம்பறோம், நீயும் நம்பு...!"

"எனக்கு அப்படி ஒண்ணும் அசிங்கப்பட்டு இந்த வயித்தைக்கழுவ வேண்டிய அவசியமில்லே!"

"அப்ப உனக்கு ஏதாவது ஆபத்து வரும்மா! எச்சரிக்கையா இரு....!"

"வரட்டும்!" இறுகிப்போய்ச் சொன்ன வள் அவள்!

வந்திருப்பது அதுவே தான்! கணவனின் காலைத் தீண்டி விட்டுப் போனது மாந்த்ரீகன் அனுப்பிய மந்திரமூர்த்தி!

உபாசகனின் ஏவலுக்குக் கட்டுப்பட்டு அவன் விதித்த உத்தரவுப்படி விஷத்தைக் கக்கி விட்டுப் போயிருந்தது! ஆனந்தியும் கேள்விப் பட்டிருக்கிறாள். இது போன்ற மாந்த்ரீக ஏவல்களை!

அதனால் தான் கூவிற்று நெஞ்சம்!

அவன் குடியைக் கெடுக்க என்ன வழி! யோசித்தது அவள் உள்ளம். கேட்டாள் ஊர் மக்கள் அனைவரிடமும்.

"பயப்படாதேம்மா! பாம்புக் கடிக்கு வைத் தியம் பார்க்க கேசவன் நம்பூதிரிமாதிரி ஒரு சக்தியுள்ள மாந்த்ரீகன் வேற எவனுமில்லே!"

"வருவாரா நம்பூதிரி?"

"வரமாட்டாரும்மா.... நாமதான் போக ணும். கொண்டு போய் உம் புருஷனைப் படுக் கப் போட்டால்.... இவனை எந்த பாம்பு கடிச்சதோ.... அந்தப் பாம்பையே வருவிச்சு கக்கின விஷத்தை அப்படியே குடிக்க வைப்பாரு...!" புகழ்ந்து சொன்னார்கள் பொது மக்கள். பூடகமாய் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள் ஆனந்தி!

"என்னொருத்தியாலே எப்படி-இவரைத் தூக்க முடியும்?"

பாவனை செய்தாள் ஆனந்தி.

சொல்லிக் கொண்டே அவள் தன்னிரக் கப்பட்டாள்.

"அட, ஏம்மா? நாங்கெல்லாம் எதுக்கு இருக்கோம்? ஒரு ஆபத்து நேரம் உதவற உதவிதானேம்மா மனுஷசிநேகம்?" கேட்டுக் கொண்டே வந்து சந்திரனின் கால்களைப் பற்றினார் ஒருவர். வேறு சிலர் அவன் உடம் பையும், தலையையும் தாங்கிக் கொண்டனர்.

எல்லாருக்குமே மனசுக்குள் இரக்கம் சுரந்தது.

காரணம்-தாங்களிடம் உதவி கேட்கிற வள், ஊரில்லயே எவருக்கும் இல்லாத பேரழகுடன்... ரவிக்கை போட்டுக் கொண்டி ருக்கிற வெளியூர்க்காரி.

அவளது வடிவும், வனப்பும் ஊருக்கே புத்தம் புதுசு.

இது தருகிற உற்சாகம் ஒவ்வொருத்தரை யும் உற்றுப் பார்க்க வைத்தது அவளை. ஆளுக்கு ஆள்தாங்கள் செய்கிற உதவியை மனப்பூர்வமாக அவள் அங்கீகாரம் பண்ணின தைப் போல் உணர்ந்து தான் வழியெல்லாம் அவளையே கவனித்தபடி வந்தார்கள்.

கேசவன் திருமேனியின் இல்லத்து முற்றத்தில் சந்திரனைக் கிடத்திய பிறகும் சிலர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

"கூப்பிடுங்கடா திருமேனியை!" ஒருவர் அதிகாரம் பண்ணினார்.

கூப்பிட்டார்கள் சிலர் கதவைத் தட்டி.

(வரும் வாரமும் வரும்)

## நவீன திரௌபதி



இந்தக் காலத்தில் இப்படி நடக் கிறது என்றால் காலத்தின் கோலம் போலும்.

உத்தரப்பிரதேசத்தில் உள்ள கோராக்பூர் என்ற ஊரில் வசிக்கு 30 வயதான சீதா, தான் பணிபுரியும் இடத்தில் 23 வயதான ராம்தேவைச் சந்தித்தாள். காதலித்தாள். இருவரும் திருமணமும் செய்து கொண்ட னர்.

இவர்கள் திருமணம் செய்த ஆறு மாதத்தின் பின் ராம்தேவின் அண்ணன் பாலிராம் (வயது 38) சீதாவைக் காதலிப்பது தம்பிக்குத் தெரியவந்தது. சர்ச்சை கிளம் பியது.

அதன் பின்னர் தம்பியின் தாராள மனத்தால் அண்ணனையும் மணந்து கொண்டார் சீதா. இப்போது இரண்டு கணவர்களுடன் வாழ்க்கை நடத்தி வருகிறார்.

இவர்கள் திருமணம் முடித்து 5 வருடங்களாகி விட்டன. பலவித போராட்டங்களைச் சமாளித்து இப்போது நிம்மதியாக வாழ்கின்றனர். இப்போது இவர்களுக்கு 3 குழந்தைகள் உள்ளன.

## மனைவியை வீசியவர்

எகிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோ வில் வசிக்கும் ஒருவர் தனது மனைவியை மூன்றாவது மாடியில் இருந்து தூக்கிக் கீழே வீசி விட்டார். அதனால் மனைவிக்கு முதுகெலும்பு முறிந்து விட்டது.

அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் கீழே விழுந்து காயப்பட்ட அந்தப் பெண்மணியை ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டார்கள். பொலிஸ் வந்து கணவரை கைது செய் தது.

'மனைவியை ஏன் தூக்கி வீசினாய்?' என்று கேட்டதற்கு அந்தக் கணவர் சொன்ன காரணம் என்ன தெரியுமா?

தனக்கு சின்ன இறைச்சித்துண்டைக் கொடுத்துவிட்டு, மகன்களுக்கு பெரிய இறைச்சித்துண்டுகளை கொடுத்து விட்டாராம். அதனால் தான் கோபத்தில் அவரைத் தூக்கிக் கீழே வீசினாராம்.

இப்போது சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கும் அந்தக் கணவருக்கு சிறைச்சாலையில் தினமும் இரண்டு இறைச்சித்துண்டுகள் வழங்கப்படுகிறதாம்.

## திருவிழாவில் ஏற்பட்ட ரகளை



பத்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் திரண்டிருந்த திருவிழாக்கூட்டத்தில் பெண்களை 'ணங் ணங்' என்று குத்து விட்டும், நகத்தால் கீறியும், இடுப்பில் கிள்ளியும், தலைமுடியைப் பிடித்து இழுத்தும், உடை களைக் கிழித்தெறிந்தும்.... இன்னும் சொல்ல முடியாத பாலியல் ரகளைகள் நடந்தேறி யிருக்கிறது.

இந்தச் சம்பவம் நடந்திருப்பது நாகரீக மோகத்தில் தலை சிறந்து விளங்கும் அமெரிக் காவில்.

நியூயோர்க் நகரில் சமீபத்தில் பியூர்டோ ரிகன் தின விழாவைக் கொண்டாட பத்து இலட்சத்திற்கும் அதிகமானோர் வந்திருந் தனர். நகரின் முக்கிய சுற்றுலாப் பகுதியான மத்திய பூங்காவில் விழா கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது.

ஆயிரத்திற்குமதிகமான பொலிஸார் துப்பாக்கிகளுடன் கடமையில் ஈடு பட்டுக்கொண்டிருந்தனர். விழாவுக்கு நவீன பாணி உடைகளுடன் இளம் பெண்கள் வந்திருந்தனர். விழாவை ஜாலியாகக் கொண்டாட வந்த 60க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மது உபயத் தால் போதையின் உச்சத்தில் இருந் தனர்.

இப்படி இருந்த வேளையில், 'இளம் பெண்களின் மேலாடைகளைக் கிழித்துச் சில்மிவும் செய்தால் எப்படி யிருக்கும்?' என்று இளைஞர் ஒருவர் சொன்னதுதான் தாமதம். மற்றவர்கள் செயலில் இறங்கி விட்டனர்.

சும்மா விளையாட்டுக்குத்தான் இப்படிச் செய்கின்றார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்த பலருக்கு சில நிமிடங்களுக்குப் பின்னர்தான் விபரீதம் புரிந்தது.

இவர்களின் வெறியாட்டத்தால் 47 பெண்கள் தங்களது உடைகளை இழந் தனர். பலருக்கு மார்பு மற்றும் ஏனைய இடங்களில் காயங்கள் ஏற்பட்டன. இதைத் தட்டிக்கேட்க வந்தவர்கள் தாக்கப்பட்டார்கள்.

பொலிஸாரிடம் முறையிட்டபோது மேலதிகாரிகளின் உத்தரவில்லாமல் தம் மால் எதுவும் செய்ய முடியாது எனக் கையை விரித்து விட்டனர். பொலிஸாரின் மெதன்தமான இச்செயல்களைப் பலர் கண்டித் தனர்.

அதன் பின் சம்பவதினத்தன்று பதிவு செய்யப்பட்ட ஒளிப்பதிவு நாடாமூலம் சில்மிஷங்களில் ஈடுபட்ட 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளர். இன்னமும் 40 பேர் வரை கைது செய்யப்படவுள்ளனர்.

## தனித்தனியாக காப்புறுதி

உலகின் முன்னணிக் கவர்ச்சி நடிகையாக வலம் வரும் ஜெனிஃபர் லோபார்ஸ் அண்மையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இவர் கை, கால், முகம், மார்பு, தொடை என்று அங்குலம் அங்குலமாக பிரித்து தனது உடல் உறுப்புகளுக்கு காப்புறுதி செய்திருக்கிறார். அமெரிக்க நாட்டின் காப்புறுதிக் கம்பனியென்று இவரை காப்புறுதி செய்துள்ளது. இவர் உடல் முழுவதற்கும் காப்புறுதி செய்த தொகை பத்துக் கோடி ரூபாய். ஜெனிஃபர் நடிப்ப துடன் இசை அல்பம் ஒன்றையும் தயா ரித்து வருகிறார்.

## புதிய காதல் கதை



இங்கிலாந்தின் அரச குடும்பத்திற்கும் காதல் விவ காரம் என்றால் அப்படி ஒரு ராசி. மறைந்த இளவரசி டயானாவை விவாகரத்துச் செய்த பின் (செய்ய முன்பும் தான்) கமீலாவுடன் காதல் லீலைகளில் ஈடுபட்டு வரு கிறார் சார்ள்ஸ்.

இந்த விவகாரம் இப் போது ஓரளவு ஓய்ந்து கொண்டிருக்கும் வேளையில் இளவரசர் சார்ள்ஸின் தம்பி அன்ட்ரூவின் காதல் விவகாரம் இங்கிலாந்தில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இளவரசர் அன்ட்ரூ, சாரா பெர்குசனை மணமுடித்தார். பின் இருவரும் விவாகரத்துச் செய்து கொண்டனர். அன்ட்ரூவுடன் புதிய காதல் தொடர்பை ஏற்படுத்தி இருப்பவர் பிரபல மொடல் அழகி காப்ரிஸ் பவரெட்டி. அன்ட்ரூவும் பவரெட்டி யும் இரவு நேரங்களில் இங்கிலாந்தின் இரவு விடுதி களில் ஜோடியாக வலம் வருகின்றனர்.

இவர்களைப் பின் தொடர்ந்து காதல் விவகாரங்களை வெளியிடும் முயற்சியில் இலண்டன் பத்திரிகைகள் முனைப்புக் காட்டுகின்றன.



## வறுமையின் கோரம்

சிதறிப்போனது சோவியத் யூனியன் மட்டுமல்ல; அந்நாட்டின் பொருளாதாரமும் தான். ஒரு காலத்தில் வல்லரசாகத் திகழ்ந்த இந்நாட்டில் இன்று வறுமையும் பஞ்சமும் தலைவிரித்தாடுகிறது.


அந்நாட்டுப் பெண்கள் நாடுவிட்டு நாடு சென்று விபசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள், அந்நாட்டின் வறுமையின் கோரத்தை.

வறுமை காரணமாகத் தான் வளர்த்த செல்லப்பிராணியான கரடியை மிருகக்காட்சிச் சாலையில் விற்பதற்காகத் தோளில் சுமந்தபடி செல்கிறார் ஒரு சோவியத் வாசி. அவருக்கு உதவியாக இன்னொருவரும் பின்னால் கரடியைப் பிடித்திருக்கிறார்.

## நெருப்பு விளையாட்டு

உடல் முழுவதையும் தீச்சுவாலை தழுவிக் கொள்ள-தன் உயிரைக்காக்க உதவி தேடி ஓடுகிறாரா இவர்-என்று நீங்கள் கருதினால் நிச்சயமாக அது தவறு. டென்மார்க்கின் கோப்பன் கேகன் நகரில், அந்நாட்டைச் சேர்ந்த ஸ்ரிக் கூந்தர் என்ற சாகசக்காரர், கடந்த வருடம் மார்ச் 13ம் திகதியன்று தன் உடலில் மண்ணெண்ணையை ஊற்றி தீ மூட்டிக் கொண்டு நடனமாடுகிறார். எமது நாட்டிலும் இதைப் போன்று தீமூட்டி நீர்த் தொட்டியில் பாயும் சாகசச் செயல் புரிவோர் உள்ளனர்.


ஸ்ரிக் கூந்தர் பிராணவாயு பெறாமல், 2 நிமிடம் 6 நொடிகள் நெருப்புடன் விளையாடி சாதனை புரிந்துள்ளார்.



## ஜன சமுத்திரம்

'ஜன சமுத்திரம்' என்பதற்கு உதாரணம் தான் இந்தப் படம். ஸ்பெயின் நாட்டின் தலைநகரான மட்றிட்டில் அண்மையில் இடம்பெற்ற வன்முறை எதிர்ப்புப் பேரணியில் திரண்ட மக்கள் வெள்ளம் தான் இது.

ஸ்பெயின் நாட்டில் பாஸ்க் என்ற இனமக்கள் தங்களுக்கென தனியான தாயகம் தேவை எனப் போராடி வருகின்றனர். ஈ.ரி.ஏ. என்ற இயக்கம் வன்முறைகளை அளவுக்கு மீறி நடத்தி வருகின்றது. இவ்வியக்கத்தின் வன்முறைப் போராட்டங்களை நிறுத்தக் கோரி அந்நாட்டின் பிரதமர் ஜோஜ் மாரியா அஸ்நார் இந்தப் பேரணிக்குத் தலைமை தாங்கினார். இவருக்கு முன்னர் பிரதமர் பதவி வகுத்த முன்னாள் பிரதமர்கள் இருவர் மரியா அஸ்நாருடன் இணைந்து இப்பேரணியில் சென்றனர். இவ்வாறு இப் பேரணியில் கலந்து கொண்ட தொண்டர்களின் தொகை என்ன தெரியுமா? மொத்தம் ஒரு கோடி 10 இலட்சம் பேர்.




## கவர்ந்து 'இழுத்த' சிற்பம்

உலகிலேயே மக்கள் தொகை அதிகம் உள்ள நாடு சீனா. அந்த நாட்டில் வடிக்கப்பட்ட சிற்பம் தான் இது.

சீனாவின் ஸீஜியாங் மாகாணத்தில் வருடந்தோறும் 'மணல் சிற்பக் கண்காட்சி' நடந்து வருகிறது.

இம்முறை நடந்த மணல் சிற்பக் கண்காட்சி பலரையும் கவர்ந்து 'இழுத்த' சிற்பம் இதுதான்.



# காதோடு சொல்லுகிறோம்

இதுவரை கௌரவ வேடத்தில் நடிக்க மறுத்து வந்த கண்ணழகி நடிகை முதல் முதலாக சூப்பர் நடிகரின் படத்தில் மட்டும் நடிக்க சம்மதித்தது ஏனாம்? வெளிநாட்டில் அவர் சம்பந்தப்பட்ட பாடல் காட்சியைப் படமாக்கலாம் என்று சொன்னதும் உடனடியாகச் சம்மதித்து விட்டாராம்.

காதல் திருமண பந்தம் முறிந்து போய் விவாகரத்துக்கு விண்ணப்பித்திருக்கும் நட்சத்திர தம்பதியின் பிரிவுக்குப் பின்னால் ஒரு பழைய நடிகை மறைந்திருக்கிறாராம். மலையாள இயக்குநர் ஒருவரை மணம்புரிந்திருக்கும் அந்த இரண்டெழுத்து நடிகைதான் இவர்களின் பிரிவுக்குக் காரணமாம்.

அந்த வாரிசு நட்சத்திர நடிகரை, உற்சாகபானம் அருந்துவது மற்றும் 'அந்த' விஷயத்தில் முன்பு போல் கரடுமுரடாக இருக்கக் கூடாதென எச்சரிக்கை விடுத்திருக்கிறார்களாம் மருத்துவர்கள். ஆனால் நடிகரோ இவற்றையெல்லாம் ஒரு காதால் வாங்கி மறுகாதால் விட்டு விடுகிறாராம்.

பக்திப் படம் ஒன்றை எடுத்திருக்கும் கனேஷனின் பெயரைத் தனது பெயரின் பின் பாதியாகக் கொண்ட இயக்குநரும் நடிகருமானவர் அதில் நடித்த 'வாலி' நடிகைக்குப் பேசிய சம்பளத்தைக் கொடுக்கவில்லையாம். பலமுறை கேட்டுப்பார்த்த நடிகை, அடியாட்கள் மூலமாக சம்பளத்தைப் பெற்றுக் கொண்டாராம்.

## சத்யராஜ்–கௌசல்யா மறுபடி இணையும் 'குங்குமப்பொட்டுக் கவுண்டர்'

சத்யராஜ்-கௌசல்யா ஜோடியாக நடிக்கும் 'ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ' விரைவில் வரவுள்ளது. இப்படம் வெளிவருவதற்கு முன் இந்த ஜோடி மறுபடி இணைந்து நடிக்கும் புதிய படம் 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்'.

சத்யராஜை வைத்து 'பொண்ணு வீட்டுக்காரன்' தோல்விப் படத்தைத் தயாரித்த கங்கா கௌரி புரொடக்ஷன்ஸ் நிறுவனம் இப்படத்தைத் தயாரிக்கிறது.

இப்படத்தை இயக்குகிறார் புதிய இயக்குநர் சாய்சுரேஷ். இவர் சுந்தர்.சியிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர்.

சத்யராஜ்-கௌசல்யா ஜோடியுடன், இன்னொரு நாயகியும் நடிக்கவுள்ளார். இவர்களுடன் கவுண்டமணி, ரமேஷ் கண்ணா உட்பட பலர் நடிக்கின்றனர்.

சிற்பி இப்படத்திற்கு இசையமைக்கிறார்.

## மீண்டும் விஜய்

விஜய் நடித்த 'குஷி' வெற்றிப்படத்தை தயாரித்த எம்.எம்.ரத்னம் ஷங்கர் இயக்கும் 'நாயக்' (தமிழ் 'முதல்வன்') இந்திப்படத்தைத் தயாரித்து வருகிறார். அத்துடன் தமிழ்ப்படம் ஒன்றையும் தயாரிக்கவுள்ளார். இப்படத்தில் 'குஷி' நாயகன் விஜய்தான் ஹீரோ.



சரத்குமார்-மந்த்ரா
படம்: மாயி

## ஸ்ரீதேவிக்காக கஜோல்

தன் கணவர் அஜய் தேவகனுடைய படங்களைத் தவிர ஏனையோரது படங்களில் நடிக்க மாட்டேன் என்று கூறி வந்த கஜோலின் இந்த முடிவில் சிறு மாற்றம்.

ஸ்ரீதேவியின் கணவர் போனிகபூர் தயாரிக்கும் படத்தில் நடிக்க சம்மதித்து விட்டார் கஜோல். எப்படி?

இந்தப் படத்தில் ஸ்ரீதேவி தான் முதலில் நடிப்பதாக இருந்தது. ஸ்ரீதேவி கர்ப்பமாக இருப்பதால் அவரால் நடிக்கமுடியவில்லை. அதனால் ஸ்ரீதேவி நடிப்பதாக இருந்த வேடம் என்றவுடன் உடனே ஓ.கே. சொல்லிவிட்டார் கஜோல்.

## பட்டப்பெயர்

பள்ளிக்கூட, கல்லூரி நாட்களில் பட்டப்பெயர் சொல்லிப் பெயர் வைப்பதெல்லாம் சகஜம். அந்த வகையில் சில நட்சத்திரங்களின் பட்டப் பெயர்கள் இதோ.

ரொட்டிராஜ்- விஜயகாந்த்

குல்லு- ஐஸ்வர்யாராய்.

வால்- கார்த்திக்

கிளி மூக்கு- நாசர்

சோனா- சிம்ரான்

## சிம்ரானின் பாணி

ஒரு படத்தில் நடிக்க விருப்பமில்லையென்றால் அதிக சம்பளம் கேட்டு அந்தப் படத்தை நாசுக்காகத் தவிர்ப்பதைச் சில நட்சத்திரங்கள் வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

சிம்ரானும் இப்போது இதே பாணியினைத் தான் பின்பற்றி வருகிறார். குறிப்பிட்ட படத்தில் நடிக்க விருப்பமில்லையென்றால் அதிக சம்பளம் கேட்டு அதிலிருந்து நழுவிக் கொள்கிறார்.

## ஜோதிகாவுக்குப் பதிலாக பூமிகா

விஜய்-ஜோதிகா நடித்த 'குஷி' தெலுங்கில் 'செப்பாலனி உந்தி' என்ற பெயரில் தயாராகி வருவது தெரிந்ததே.

விஜய் வேடத்தில் பவன் கல்யாணும் ஜோதிகா வேடத்தில் ஜோதிகாவே தெலுங்கில் நடிப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஜோதிகா தமிழில் பிஸியாக இருப்பதால் ஜோதிகாவுக்குப் பதிலாக தெலுங்கில் பிரபலமாகி வரும் பூமிகா நடிக்கிறார்.

## படமாகும் பிரியங்கா கதை

அடுத்த வருடம் கனடாவில் நடைபெறவிருக்கும் அனைத்துலக திரைப்பட விழாவில் திரையிடுவதற்காக ஆங்கிலம்-இந்தி ஆகிய இரு மொழிகளில் படமொன்றைத் தயாரிக்கிறார் அட்லி பிரார் என்பவர்.

இப்படத்தின் கதை நேரு குடும்ப வாரிசான பிரியங்கா வதேராவைக் கொண்டு உருவாக்கப்படுகிறது.

இதில் பிரியங்காவாக நடிப்பவர் யார் தெரியுமா?

பிரபல மொடல் அழகியும் இந்தி நடிகையுமான பூஜா பட்ரா.



திரையுலக மறுபக்கம் 160

தமிழ்நாட்டிலிருந்து மயன்

## இயக்குநரை மிரளவைத்த முன்னாள் நாயகனும் காதலியைப் பார்க்காமல் தவித்த இளம் நாயகனும்

பண்டங்களைச் சேமித்து வைக்கும் இடத்தின் பெயரைக் கொண்டவர் அந்த இயக்குநர். இவர் முதல் முறையாக சொந்தப் படம் எடுக்கிறார். படம் தயாராவது வேறொருவர் பெயரில்.

இயக்குநர் படத்தின் நாயகனாக 'திலக' வாரிசு நடிகரையும், இன்னொரு வளர்ந்த நடிகரையும் வைத்துப் படத்தை இயக்குகிறார். படத்தின் நாயகனுக்குத் தந்தையாக சில காட்சிகளில் நடிக்க, ஒரு முன்னாள் நாயகனை அணுகினார் அந்த இயக்குநர்.

சில வருடங்களுக்கு முன் தொடர்ந்து 3 வெற்றிப் படங்களில் நடித்தவர் அந்த நாயகன். வேட்டியைத் தொடை வரை உயர்த்திக் கட்டியபடி முரட்டு ஹீரோவாக வலம் வந்தவர். அவர் ஒரு படத்திற்கு சுமார் ஒரு கோடி ரூபாய் வரை சம்பளம் வாங்கியவர்.

இயக்குநர் அந்த முன்னாள் நாயகனிடம் தனது படத்தின் கதையைப் பற்றியும் நடிக்கும் வேடத்தைப் பற்றியும் கூறினார். இவற்றைக் கேட்ட அந்த முன்னாள் நாயகன் இயக்குநரிடம்,

"இங்க பாரு தம்பி, அப்பா கேரக்டரோ, தாத்தா கேரக்டரோ நடிச்சுப்புடறேன் ஆனா 35 லட்சம் சம்பளமா குடுத்துப்புடணும். ஏன்னா நான் கோடி வரைக்கும் வாங்கிப் பழக்கப்பட்டவன். இன்னைக்குத் தெருகட கோடியில் நடிக்கிறேன்னு நினைச்சு அஞ்சுக்கும் பத்துக்கும் நடிங்கன்னு மட்டும் கேட்டுப்புடாத" என்று சொன்னார்.

இதைக்கேட்டு மிரண்டு போன இயக்குநர் பிறகு வருகின்றேன் என்று சொல்லி விட்டு வந்து விட்டார். பிறகு போகவேயில்லை. "படத்தின் மெயின் ஹீரோவுக்கே அவ்வளவு சம்பளம் கொடுக்கல. இந்தாளு நெனப்புத்தான் பொனப்பக் கெடுக்குது" என்று தனது உதவியாளருக்குச் சொன்னார் அந்த இயக்குநர்.

### ஸ்நேகிதியே..... ரகசிய ஸ்நேகிதியே.....

'ஸ்நேகி'தியே 'ஸ்நேகி'தியே ரகசிய 'ஸ்நேகி'தியே என்று ஒரு இளம் நாயகன் இரகசியமாகப் பாடிக்கொண்டிருக்கிறார்.

புதுமுக நாயகியாக அந்த நடிகை அறிமுகமாகும் படத்தில் அந்த இளம் நடிகர் தான் நாயகன். படப்பிடிப்பின் போது ஏற்பட்ட பழக்கம் இப்போது காதல் வரை நெருக்கம் கண்டுள்ளது.



மன்சூரலிகான்-அபிதா-விக்னேஷ்
படம்: ஆனா அந்தமடம் ஆகாட்டி சந்தமடம்

காதல் ஆரம்பக் கட்டத்தில் இருக்கும் நேரத்தில் நடிகர் சம்பந்தப்பட்ட படப்பிடிப்புக்கள் முடிந்து விட அவர் சென்னை திரும்ப வேண்டியதாயிற்று. நடிகை மட்டும் படப்பிடிப்புக்காக திண்டுக்கல்லில் இருந்தார்.

இதனால் காதலியைப் பார்க்காமல் தவித்தார் அந்த நடிகர். காதலியின் பிரிவைத் தாங்கமுடியாத அந்த நடிகர் திடீரென சென்னையில் இருந்து மதுரைக்கு விமானத்தில் பறந்து அங்கிருந்து திண்டுக்கல்லுக்கு காரில் சென்று பார்த்திருக்கிறார். பேசியிருக்கிறார்.

மத்திய கிழக்கில் இருந்து வந்த அந்த நடிகையின் பெயர் சுகாசினி. படத்திற்காக தமிழக வார இதழ் போட்டி நடத்தி இவருக்கு பெயர் சூட்டியது.

'மணி'யான இயக்குநரின் சீடரது படத்தில் இணைந்து நடிக்கும் போதே இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் 'விரும்ப' ஆரம்பித்தார்கள்.

## பிஸியான சுவலட்சுமி

சில காலம் புதிய படவாய்ப்புக்களே இல்லாமல் இருந்த சுவலட்சுமி திடீரென பிஸியாகி விட்டார். இப்போது அவர் 6 புதிய படங்களில் நடித்து வருகிறார்.

'மாயி', 'ஆண்டான் அடிமை', 'உன் விழியில் நான் இருந்தால்', 'கண்ணால் பேசவா', 'பொட்டு அம்மன்', 'கண்ணா உன்னைத்தேடுகிறேன்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

இவை தவிர நான்கைந்து கன்னடப்படங்களிலும் நடித்துவருகிறார்.

## வீடு தேடும் மும்தாஜ்

'மோனிஷா என் மோனாலிஸா' படம் மூலம் அறிமுகமான மும்தாஜ் 'குஷி' படத்தில் நடிக்கும் வரை ஹொட்டலில் தான் வாசம் செய்தார். இப்போது பல படங்களில் நடித்து வருவதால் ஹொட்டலில் வாசம் செய்வதை விட்டுவிடத் தீர்மானித்துள்ளார். இப்போது மும்தாஜ் வீடு தேடி வருகிறார்.

## தெலுங்கில் 'சே…

தேசிய விரு…
'சேது' தெலுங்கில் …
ரில் தயாராகி …
விக்ரம்-அபிதா …
தெலுங்கில் டாக்டர் …
சம்யுக்தா வர்மா …
இப்படத்தை …
தெலுங்கு இயக்கு…
பினிஷெட்டி இயக்…

## விஜயகா…
## சென்டி…

'வல்லரசு', 'வா…
'வ' வரிசையில் …
படங்களும் பெரு…
தொடர்ந்து, விஜய…
தனது படங்களுக்கு…
என்று விரும்புகிற…
இதனால் மலை…
கைலாஷ் இயக்கத்தில்…
படத்திற்கு 'வாஞ்சி…
பட்டுள்ளது.

**சினி விசிட்**

# அர்ஜுன் நடிக்கும் பக்திப் படம் 'ஸ்ரீ மஞ்சு நாதா'

முதன்முறையாக அர்ஜுன் நடிக்கும் பக்திப்படம் 'ஸ்ரீ மஞ்சு நாதா'. சின்னி ஃபிலிம்ஸ் சார்பில் ஸ்ரீஜெய் ஸ்ரீதேவி தயாரிக்கும் இப்படத்தை திரைக்கதை அமைத்துத் தயாரிக்கிறார் கே.ராகவேந்திரராவ். இவர் இதற்கு முன் நாகார்ஜுன் நடித்த 'அன்னமைய்யா' என்ற பக்திப்படத்தை இயக்கியுள்ளார்.

சிரஞ்சீவி, சௌந்தர்யா, ஆனந்த், காசன் கான் ஆகியோருடன் பிரபல பின்னணிப்பாடகர் பி.வி.ஸ்ரீனிவாஸின் பேரன் ஆனந்தவர்தன் என்ற சிறுவனும் முக்கிய வேடத்தில் நடிக்கிறான்.

தமிழ்-கன்னடம்-தெலுங்கு ஆகிய 3 மொழிகளில் உருவாகும் இப்படத்திற்கு அம்சலேகா இசையமைக்கிறார்.





சூர்யா-ஜோதிகா படம்: உயிரிலே கலந்தது

## இரட்டை வேடத்தில் சுரேஷ் கோபி

'நாகவல்லி', 'தேவி' உட்பட பல மொழிமாற்றுப் படங்களைத் தயாரித்த தேவிசித்ரம் என்ற படநிறுவனம் தயாரிக்கும் புதிய மொழிமாற்றுப் படம் 'சின்னமாரி'.

மலையாளத்தில் சுரேஷ் கோபி இரட்டைவேடத்தில் நடித்து வெளியான படமொன்று தான் 'சின்னமாரி' படம் தமிழில் மொழிமாற்றப் பட்டு வருகிறது. இதில் சுரேஷ் கோபியுடன் பூர்ணிமா மோகன், லேனா, தேவன், திலகன், நெடுமுடிவேணு, பிஜுமேனன், விஜய் சக்கரவார்த்தி, ஸ்ரீவித்யா ஆகியோர் நடிக்கின்றனர்.

காதல் மதியின் பாடல்களுக்கு வித்யாசாகர் இசையமைத்துள்ளார். டாக்டராகவும் ரவுடியாகவும் இரண்டு வேடங்களில் சுரேஷ் கோபி நடித்திருக்கும் இந்த அடிதடிப்படத்தை காஜ் ஜோஸ் என்பவர் இயக்கியுள்ளார்.

## கமலின் அடுத்த படம்

'தெனாலி' படத்தின் படப்பிடிப்புக்கள் யாவும் முடிவடைந்து விட்டன. இறுதிக்கட்ட வேலைகள் மட்டும் நடைபெற்று வருகின்றன. 'தெனாலி' படத்தை அடுத்துக் கமல் நடிக்கவிருக்கும் படம் 'ஆளவந்தான்'.

வி.ஐ.பி., 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' வெற்றிப்படங்களைத் தயாரித்த கலைப்புலி தாணு இப்படத்தைத் தயாரிக்கிறார். கமலின் 'மகளிர் மட்டும்' படத்தில் செந்தமிழ் பேசி தையல்காரர் வேடத்தில் நடித்துள்ளார் தாணு.

'ஆளவந்தான்' படத்தை இயக்குபவர் 'பாட்ஷா' புகழ் சுரேஷ் கிருஷ்ணா. 'சத்யா' படம் மூலம் சுரேஷ் கிருஷ்ணாவை இயக்குநராக்கிய கமல் அதன் பின் சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் 'இந்திரடு சந்திரடு' (தமிழில், இந்திரன் சந்திரன்) என்ற தெலுங்குப் படத்தில் நடித்தார். 'ஆளவந்தான்' கமல்-சுரேஷ் கிருஷ்ணா இணைந்து பணியாற்றும் மூன்றாவது படமாகும்.

## பிரபு படத்திற்கு எதிர்பார்ப்பு

மலையாலத்தில் தொடர்ந்து 5 வெற்றிப் படங்களைக் கொடுத்தவர் இயக்குநர் வினயன். இவர் தற்போது இயக்கி வரும்படம் 'வார் அன்ட் லவ்'. இதில் பிரபு நாயகனாக நடிக்கிறார். 'காலாபானி' (தமிழில் 'சிறைச்சாலை') படத்தின் மூலம் பிரபுவும் மலையாள இரசிகர்களுக்குப் பரிச்சயமானதால், படத்திற்கு கூடுதல் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

இப்படத்தை வெளியிடும் உரிமையை அங்கு போட்டி போட்டுக் கொண்டு வாங்கியுள்ளார்கள். இதைத் தொடர்ந்து பிரபு மலையாளப் படங்களில் தொடர்ந்து நடித்தாலும் நடிக்கக்கூடும்.

## ராஜ் டி.வி.க்காகத் தயாராகும் படங்கள்

'ராஜகாளியம்மன்' வெற்றிப் படத்தைத் தயாரித்தது ஆதிபகவன் ஃபிலிம்ஸ் நிறுவனம். இந்நிறுவனம் கே.பாலச்சந்தரின் கவிதாலயா படநிறுவனத்தின் இணைநிறுவனமாகும்.

இப்போது ஆதி பகவன் ஃபிலிம்ஸ் நிறுவனம் ராஜ் டி.வி சார்பாக இரண்டு படங்களைத் தயாரிக்கின்றது. அவற்றில் ஒன்று 'சிகாமணி ராமாமணி'. இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் விசு.

இப்படத்தில் எஸ்.வி.சேகர், ஊர்வசி, ஆர்.சுந்தர்ராஜன், கிரேஸிமோகன், அனுமோகன், மனோரமா, ஸ்ரீவித்யா, நித்யா மற்றும் பலர் நடிக்கின்றனர். சந்திரபோஸ் இசையமைக்கும் இப்படம் நகைச்சுவை கலந்து குடும்பக் கதையாக உருவாகி வருகிறது. அடுத்தது 'சின்னச் சின்ன கண்ணிலே'. அமிர்ஜான் இயக்கத்தில் மர்மப் படமாக உருவாகி வரும் இப்படத்தில் பிரகாஷ்ராஜ், நாசர், குஷ்பு, வடிவேல், சார்லி, தலைவாசல்விஜய், டாக்டர் ஷர்மிளா மற்றும் பலர் நடிக்கின்றனர்.

## மினி சினி

- 'பாலைவன ரோஜாக்கள்', 'சின்னத்தம்பி பெரிய தம்பி', 'அண்ணா நகர் முதல் தெரு', 'சிவசக்தி' ஆகிய படங்களில் இணைந்து நடித்த சத்யராஜ்-பிரபு மீண்டும் புதிய படமொன்றில் இணைந்து நடிக்கவுள்ளனர்.
- அர்ஜுன்-மீனா நடிக்கும் 'ரிதம்' படத்தில் முக்கிய வேடமொன்றில் நடித்த விந்தியாவை நீக்கி விட்டு சங்கவியை ஒப்பந்தம் செய்தார்கள். இப்போது சங்கவியையும் நீக்கி விட்டு அந்தவேடத்தில் ஜோதிகாவை நடிக்கவைத் துள்ளனர்.
- 'இதயம் உள்ளவன்' படத்தில் வில்லனாகவும், நல்லவராகவும் நடித்த சரத்குமார் மறுபடி வில்லனாகவும் நாயகனாகவும் இரட்டை வேடத்தில் நடிக்கும் படம் 'ஸ்ரீராம ஜெயம்'. இது 'ரிஷி' என்ற பெயர் மாற்றத்துடன் தயாராகி வருகிறது.
- 'காதல் கோட்டை' படத்தை இந்தியில் 'ஸிர்ப் தும்' என்ற பெயரில் இயக்கினார் அகத்தியன். அது வெற்றி பெறவே, இப்போது 'கோகுலத்தில் சீதை' படத்தை இந்தியில் இயக்குகிறார்.
- ரசிகா தனது பெயரை சங்கீதா என்று மாற்றிக் கொண்டதைத் தொடர்ந்து 'பத்ரா' பட நாயகியும் துண்டு துக்கடா வேடங்களில்நடித்து வருபவருமான உமா தனது பெயரை ஸ்ரீதேவி என்று மாற்றியுள்ளார்.
- 'யப்பா யப்பா ஐயப்பா' என்ற பெயரில் தொடங்கப்பட்டு தற்போது 'ஷக்கலக்க பேபி' எனப் பெயர் மாற்றப்பட்டிருக்கும் படத்தில் இரண்டாவது நாயகியாக மும்தாஜ் நடிப்பதாக இருந்தது. இப்போது இதில் மும்தாஜ் நடிக்கவில்லை.
- நட்சத்திர இயக்குநர் பி.வாசு இயக்கத்தில் 'இது நம்ம பூமி' படத்தில் நடித்துள்ள கார்த்திக மீண்டும் வாசு இயக்கத்தில் படமொன்றில் நடிக்கவுள்ளார். இப்படத்தில் முக்கிய வேடத்தில் வாசுவும் நடிக்கவுள்ளார்.
- 'பெண்ணின் மனதைத் தொட்டு' படத்தில் பிரபுதேவாவுக்கு ஜோடியாக நடித்த ஜெயாசீல் இப்போது விக்ரமிற்கு ஜோடியாக 'சாமுராய்' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை பாலாஜி என்ற புதியவர் இயக்கி வருகிறார்.



பாபுகணேஷ்-பிருதிவிராஜ் படம்: நாகலிங்கம்

...ரான் படம்: பார்த்தேன் ரசித்தேன்

## தயாரிப்பாளராக்கும் அஜித்

'வாலி' படத்தின் மூலம் வித்தியாசமான அஜித்தை வெளிக்கொணர்ந்தவர் இயக்குநர் எஸ்.ஜே. சூர்யா. இதற்கு நன்றிக்கடனாக எஸ்.ஜே.சூர்யாவைத் தயாரிப் பாளராக்கியுள்ளார் அஜித்.

சூர்யா கதை, திரைக்கதை, வசனம், எழுதித் தயாரித்து இயக்க அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தின் அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

'ரட்சகன்', 'ஜோடி' படங்களை இயக்கிய பிரவீன் காந்த் இயக்கத்தில் அஜித்குமார் 'அபூர்வன்' என்ற படத்தில் நடிக்கவிருந்தார். படத்தை அஜித்தின் நண்பர் தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டது. என்ன காரணத்தாலோ அப்படத்தை அஜித்தின் நண்பவரால் தயாரிக்க முடியவில்லை.

உடனே படத்தின் இயக்குநர் பிரவீன் காந்தையே இயக்குநராக்கி விட்டார் அஜித். இப்போது 'அபூர்வன்' படத்தை பிரவீன் காந்த் தயாரித்து இயக்கி வருகிறார்.

**முகப்பில்**

பிரசாந்த்-ஷாலினி
படம்: பிரியாத வரம் வேண்டும்

## புரிந்தது...!

நான்....
அவளைக்
காதலித்தேன் அவளும்...
என்னை...?
***
என்....
இதயத்தைப்...
பறித்தாள்,
எங்கே
வைத்தாள்...?
***
அவளின்
நண்பிகள்...
நடக்கும் போது...
"டப்,,, டப்..." எனும்
சத்தம் கேட்கிறது!
ஆனால்....
***
அவள் மட்டும்
நடக்கும் போது
'லப்,,, டப்,," எனும்
சத்தம் கேட்கிறதே...!
***
இப்போது
புரிந்தது.. என்
இதயத்தை அவள்
பாதணியில்
செருகிவைத்துள்ளாளென்று...!

ந.பாலுமகேந்திரா-
காரைதீவு.



## கொடிது...!

கொடிது கொடிது
தமிழராய்
கொழும்பில் வசிப்பது கொடிது!
***
கொடிது கொடிது
நெற்றியில் பொட்டிட்டு
வெள்ளவத்தையில்
திரிவது கொடிது!
***
கொடிது கொடிது
அடையாள அட்டையின்றி
அலைவது கொடிது!
***
கொடிது கொடிது
நாடுகடத்தப்பட்டு
கட்டுநாயக்கா
வந்திறங்குவது கொடிது!
***
கொடிது கொடிது
அமைதி வருமென
ஏங்குவது கொடிது!
***
கொடிது கொடிது
தமிழராயிங்கு
பிறத்தல் கொடிது!

ஹப்புத்தளையூர்
எப்.லெனாட்குமார்.

## பெண்மைக் குண்டு பெருமை

திருமதி எனும்
பட்டம்-எங்கள்
நிம்மதி கெடுக்கும்
சட்டமென்றால்-அது
வெகுமதியாய்க்
கிடைத்தாலும்
வேண்டாம் அந்தப்
பட்டம்!
***
மனைவி என்பவள்
மாடாய் உழைத்து
மனைக்கு மட்டுமே
மகாராணியாய்-இருக்க
வேண்டுமென்றாலும்
வேண்டாம்-அந்தப்
பட்டம்!
***
இம்மண்ணில்,
பெண்மைக்குண்டு
பெருமை!
இதைக் காப்பது
எங்கள் கடமை!
இதற்கு
எங்களுக்குண்டு
உரிமை!
இவற்றை,
ஏற்பவர்க்குண்டு
திறமை!
இவை
சிறுமையென்றால்
வேண்டாம்-அந்தப்
பட்டம்!

சி.நிதாஜினி-
பெரியகல்லாறு-02.



## வேண்டி நிற்பது....

யாரையும்
சந்தேகப் படுங்கள்-
நினைத்த மாத்திரத்தில்
எல்லோரையும்
குற்றவாளியாக்கி
விடாதீர்கள்!
***
கைரேகைகளை
பரீட்சித்துப் பாருங்கள்-
எல்லாக் கைகளுக்கும்
எடுத்த எடுப்பில்
விலங்குகளைமாட்டாதீர்கள்!
***
நாய்களை
மோப்பம் விடுங்கள்-
கண்டதுமே
கடிக்கச் சொல்லி மட்டும்
கட்டளை இடாதீர்கள்!
***
முட்களை
முறியுங்கள்
தவறியும்
பூக்களையும் சேர்த்து
புண்படுத்தி விடாதீர்கள்!
***
இத்தனையும் செய்யுங்கள்
நன்றி சொல்கிறேன்:
ஆனால்
'நாயாகி விடணும்' என்று
எதிர்ப்பார்க்காதீர்கள்!
ஏனென்றால்-
நான் வேண்டி நிற்பது..
என் விருப்பங்களல்ல
உரிமைகள்!!!

மடவளை அம்ஷியா.

தேன் கிண்ணம்

## உனக்கு வேண்டுமா?

உலக அழகி....
ஐஸ்வர்யா ராய்
வேண்டுமா....
சாஜகானின்
காதலி மும்தாஜ்
வேண்டுமா....?
அலியின்...
மகள் லைலா
வேண்டுமா...?
எகிப்தின் எழிலரசி
கிளியோப்பட்ரா
வேண்டுமா....?
குயில் பாட்டு
சித்ரா வேண்டுமா....?
ஹிலாரியின்
மகள் செல்சியா
வேண்டுமா....?
இப்போது...
இளைஞர்களையே
மயக்கிக் கொண்டிருக்கும்
ரம்பா வேண்டுமா...?
இல்லை-என்
தங்கை தான்
உனக்கு வேண்டுமா....?
என்னை...
ஆக்ஷன் கிங்காக
பார்க்க வேண்டுமா...?
புரட்சி கலைஞனாகப்
பார்க்க வேண்டுமா?
உனக்கு யார் வேண்டும்?

தம்பிலெவ்வை நஸீம்-
கிண்ணியா-01.

## உலகம்

ஆழ்கடல் மீதினில்,
ஐம்பூதங்களால் இணைக்கப்பட்டு,
இரு சுடர் ஒளி தரும்,
விண்மீன்கள் அழகுசெய்யும்,
கார்மேகம் பூத்தூவும்,
இயற்கையாம்-

மலைகளும்; நதிகளும்,
மரங்களும்; மலர்களும்,
விலங்குகளும்;
பறவைகளுமுடைய
அழகிய நாடகமேடை!

இங்கு,....
உள்ளம் வைத்து,
உதிரம் பாய்ச்சி,
ஊன்குழைத்துருவாக்கப்பட்ட
மனிதர்களெனும் நடிகர்கள்!
இவர்களுள்,....
ஆண் என்றும்; பெண்ணென்றும்
இருவடிவங்கள்!

அரசியல் வாதிகள்!
அம்சமான நடிகர்கள்!
அரங்கேறும் அற்புத நாடகம்
அரசியல்!
அரங்கேற்றப்பட்டிருக்கிறது,

விழிகளை குருடாக்கி,
செவிகளை செவிடாக்கி,
உண்மைகளை முடமாக்கி,
அழிவுகளை மட்டுமே பலனாகக்
கொண்ட
'இனவாத யுத்தம்' எனும்
இராட்சச நாடகம்!

சு.கமலகாந்தன்-வவுனியா.

## எம் தேசம் அழுகின்றது

பயிர் செய்த நிலமெல்லாம்
பாழாய்க் கிடக்க.
பள்ளி சென்ற பாலகர்கள்
முள்ளில் தலைவைத்துறங்க,
நிரம்பி வழிந்த குளம் கூட
நிர்க்கதியாய்ப்போக,
வளைந்தோடிய வைகை நதி
வழியின்றி வற்றிப் போக,
கொடியில் பூத்த கொத்து மல்லி-
நிலத்தில்
கிடையாய்க் கிடக்க,
பால் கறக்கும் பசுக்கள் எல்லாம்
பாதை மாறிப் பயணிக்க,
நாதம் கேட்கும் நல்வழிபாட்டுத் தலங்கள்
மீதமின்றிப் போக,
உண்ண உணவின்றி மனித குலம்
பட்டினிச் சாவை எதிர்நோக்கி
நடைப் பிணமாய் நாதியற்றுத் திரிய-எம்
தேசம் அழுகின்றது'

ப.அம்பிகாபதி-மன்னார்.

## ஓ.. மாமா.. மாமி..

ஓ...மாமா...மாமி
என் இதயராணியை என்னுள்
இருந்து பிரிக்க வேண்டாம்....!
அவள் நினைவை என்னுள் இருந்து
பிடுங்க வேண்டாம்....!
என உயிர் கொண்ட
பிணைப்பின் வளையத்தை பிரிக்க
வேண்டாம்!
என் உயிரில் திரண்ட கொடியாய்
இருக்கும் அவளை.... நினைவில் விட்டு
பிரிக்க வேண்டாம்...!
என் இதய காந்தியை என்னுள் இருந்து
பிரித்த 'பிசாசுகள்' என்ற பட்டம்
உங்களுக்கு வேண்டாம்...!
அவள் பூத்திருப்பை பறிகொடுத்து.... நான்
உயிர் கொண்டு வாழமாட்டேன்...!
ஓ...மாமா...மாமி
என் இதய ராணியை
என்னுள் இருந்து பிரிக்க வேண்டாம்....!

ஐ.என்.பிரியா-கித்துள்.

## பேனா நண்பர்கள்



பெயர்:
எஸ். வசந்தராஜன்
வயது: --
முகவரி:கூசைப்பிள்ளையார்
குளம், வவுனியா.
பொழுது போக்கு:
பத்திரிகை.
தொலைக்காட்சி.



பெயர்: என். புஷ்பமலர்,
வயது: 25
முகவரி:
36, நீர்கொழும்பு வீதி,
வெலிசர, ராகம.
பொழுது போக்கு:
வழமையானவை.

## இந்தவாரம் உங்கள் பலன்

13.08.2000 முதல் 19.08.2000வரை

ஜோதிடர் 'கானா'

**மேடம் :**
மனதில் உற்சாகம். எடுத்த கருமத்தில் வெளியோரும் உதவிகள் புரிவர். நோய்துன்பமற்ற வெற்றி, கல்வி பரீட்சைகள் என்பன வெற்றியாகத் தொடரும். முக்கிய பணிகள் அச்சுவினிக் காரருக்குத் தொடரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 07
அதிஷ்ட திகதிகள்: 14, 16.

**இடபம் :**
பலநாட்கள் தடைப்பட்ட மருந்துவ சிகிச்சை தொடரும். வெளியாட்களுடன் சண்டைச்சச்சரவுகள் ஏற்படும்; உறவினர் நண்பர்களால் கெடுதல்கள் நேரிடும். தொழில் பணவசதிகள் சேரமாட்டாது. ரோகினி நட்சத்திரர் அவமானத்துடன் நோய் துன்பமும் வாட்டும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 08
அதிஷ்ட திகதிகள்: 17, 13.

**மிதுனம் :**
பணச்சேர்க்கையும் பெண்களால் வெற்றியும் உண்டாகும். திருமண சுபகரும முயற்சிகள் வெற்றி பெறும். மாற்றமான நிலையுடன் இரும்புத்துறை சம்பந்தப்பட்ட தொழில் செய்வோர் பலமாற்றத்தை அடைவர். புனர்பூச நட்சத்திரர் சுபகரும நிகழ்வை எதிர்கொள்வர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 07
அதிஷ்ட திகதிகள்: 16, 18.

**கடகம் :**
சுபகருமவிடய வளர்ச்சியுறும், தடுமாற்ற நிலை நீங்கும், தூரதேச உறவினர்களின் வருகையும் சந்தோஷமும் பணப், பொருள் வசதிகள் பெறுவர். விவசாய, தொழில் செய்வோருக்கு பணப்பெருக்கத்தை கொடுக்கும். ஆயிலிய நட்சத்திரப் பெண்களுக்கு மகிழ்ச்சியானவாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03
அதிஷ்ட திகதிகள்: 15, 18.

**சிங்கம் :**
முக்கிய பணிகள் நடைபெறும் பணம் வந்து சேரும். பிரயாண வெற்றிகள் ஏற்படும். நாட்பட்ட செயற்பாடுகள் முடிவடைவதுடன் கடன் பிரச்சனைகள் விலகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 05
அதிஷ்ட திகதிகள்: 14, 15.

**கன்னி :**
குடும்பத்தில் கவலைகள் வரப்பெறும். மனமாற்றமும் பணச்சிக்கலுடன் தடைகள் பல வரப்பெறும். கல்வி, தொழில் முயற்சிகள் சீராக இருக்காது. உத்தர, அத்த பெண்கள் கவனமாக இருந்து வருதல் முக்கியம்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 06
அதிஷ்ட திகதிகள்: 15, 16.

**துலாம் :**
நீண்ட நாட்கள் திட்டம் வெற்றியாக அமையும். கணவர், காதல், விடயங்கள் நடைமுறைக்கு வரப்பெறும். பலநாட்கள் சிக்கலாக உள்ள பிரச்சனைகள் தீரப்பெறும். முக்கியமாக தொழில் வசதிகள் உயர்வாகத் தொடரும். சிங்கராசிக்கரரால் உதவிகள் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மரூண் வர்ணம்; எண்: 01
அதிஷ்ட திகதிகள்: 19, 15.

**விருச்சிகம் :**
கடன் கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகள் தீரப்பெறும். இருப்பிட நிலைமாறப்பெறும். பல வசதிகள் பெருகும். பிள்ளைகளின் முன்னேற்றம் சீராக அமையும். புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். வெளிநாட்டுப் பயணம் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 07
அதிஷ்ட திகதிகள்: 14, 16.


**தனுசு :**
கல்வி உயர்வாக அமையும். உடலில் நோய்துன்பமும் பல பேர்களையும் சந்திக்கும் நிலையும் ஏற்படும். பரீட்சைகள் வெற்றியாக அமையும். மாமன் வழி உறவினர்களால் பிரச்சனைகள் வரப்பெறும். மூல நட்சத்திர பெண்களுக்கு தொழில், நல்ல விடயம் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : ஓரேஞ்சு வர்ணம்; எண்: 09
அதிஷ்ட திகதிகள் : 18, 19.

**மகரம் :**
எடுத்த தொழில் முயற்சிகள் சீராக அமையும். வாய்ப்புக்கள் உயர்வைக் கொடுக்கும். பொன் பொருட்கள் சேரும். பெண்களுக்கு சுபகருமமும் சுப செய்திகளும் நடைபெறும். பல மாற்றங்கள் இவ்வாரம் வர உள்ளது. திருவோணக்காரர் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 02
அதிஷ்ட திகதிகள் : 17, 19.

**கும்பம் :**
குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். பயணநிலை ஏற்படும். புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரப் பெறும். பல நாட்கள் தடைகளாக இருந்த பிரச்சனைகள் குறையும். தொழில், கல்விமுயற்சி நன்னிலை பெறும். வாகன விடயம் கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : கபிலம்; எண்: 09
அதிஷ்ட திகதிகள்: 16, 18.

**மீனம் :**
முக்கிய பிரச்சனைகள் தீரும். பரீட்சைகள் வெற்றியாக அமையும். உறவினர்-தந்தை வழியால் உதவிகள் கிட்டும். தடைகள் பல விலகும். வெளியிடப்பயணம் வெற்றியாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 05
அதிஷ்ட திகதிகள்: 15, 19.

## நில்—கவனி—முன்னேறு



**சொ**த்து, பணம், பதவி போன்றவைகளை விட ஆரோக்கியம்தான் முக்கியமானது. ஆரோக்கியத்தை இழந்தவனுக்கு தன்னிடம் இருக்கும் சொத்து, பணம், உயர் பதவி போன்ற எதையும் அனுபவிக்க முடியாது. தான் கஷ்டப்பட்டு உழைத்து வளர்த்துக் கொண்ட அறிவு, திறமை போன்றவைகளைத் தன் முன்னேற்றத்திற்காகவும் சந்தோஷமாக வாழ்வதற்கும் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போய் விடும். வாழ்க்கை என்ற போராட்டத்தில் குதித்து வெற்றிவாகை சூடுவதற்கு தேவையான சக்தி அவனிடம் இருக்காது.

'ஆரோக்கியம் என்பதுதான் முழு வெற்றியாகும்' என்று டி.கார்லைல் என்ற அறிஞர் கூறியிருக்கிறார்.

ஆரோக்கியமின்மை சந்தோஷத்தை முற்றிலும் அழித்து விடும். ஆரோக்கியத்தை இழந்து விட்டவர்கள் மிகவும் பெரிய பணக்காரர்களாக இருந்த போதிலும் கூட, பிச்சைக்காரர்களை விட அவலமாக வாழ்ந்து வருவார்கள். சுயகௌரவம், மானம் போன்றவைகளை முற்றிலும் இழந்த பிச்சைக்காரர்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று பிச்சை கேட்பதைப் போன்று, பணக்கார நோயாளிகள் நிறைய மருத்துவ நிபுணர்களிடம் சென்று, "என்னால் நோய்கள் தரும் வேதனையை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனக்கு நல்ல ஆரோக்கியம் கிடைப்பதற்கு தேவையான மருந்துகளை கொடுங்கள்" என்று பரிதாபமாகக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

தவறாக வாழ்ந்து வருபவர்கள் அனைவரும் கட்டாயம் நோயாளிகளாக மாறி அவதிப்பட வேண்டியிருக்கும். ஏதோ சில தொற்று வியாதிகளைத் தவிர, பெரும்பாலான வியாதிகளை ஒருவன் தவறான வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுவதின் மூலம், வரவழைத்துக் கொண்டு அவதிப்பட்டு வருகிறான். குறித்த நேரங்களில் சுத்தமான உணவை சரியான அளவில் சாப்பிடாமலிருப்பது, சரியான நேரங்களில் படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளாமல் அடிக்கடி இரவு நேரங்களில் நிறைய நேரம் கண்விழித்திருப்பது, சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது, போதைப் பொருள்களை உட்கொள்ளுவது, தேவையில்லாத கவலைகளை வரவழைத்துக் கொண்டு அமைதியில்லாமல் வாழ்ந்து வருவது போன்று தவறாக வாழ்ந்து வருபவன் தன் ஆரோக்கியத்தை கட்டாயம் இழக்க நேரிடும். பொறாமைப்படுவது, பயப்படுவது, ஏமாற்றுவது, உணர்ச்சிகளுக்கு அடிமையாகி செயல்படுவது போன்ற தவறான பழக்கங்கள் தீராத வியாதிகளை வரவழைக்கும். சீராக கட்டுப்பாடுகள் நிறைந்த நியாயமான வாழ்க்கை வாழ்ந்து வருபவர்களுக்குத் தான் ஆரோக்கியமான வாழ்க்கைக்கிட்டும்.


'பணம், சொத்து, புகழ், பெரிய பதவி போன்றவைகளைவிட ஆரோக்கியம்தான் முக்கியமானது. ஆரோக்கியம் ஒன்று தான் முழு வெற்றியாகும். ஆரோக்கியம்தான் பெரிய செல்வம். ஆரோக்கியம் என்ற மாபெரும் செல்வத்தை அடைந்தவர்கள் வரி எதுவும் கட்டவேண்டியதில்லை' என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிறார்.

வாழ்வில் எதிர் வரும் பிரச்சனைகளைக் கண்டு பயப்பட்டுக் கொண்டிருப்பவன் விரைவில் நோயாளியாக மாறிடுவான். தீராத பல பயங்கரமான வியாதிகளினால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர்களினால் எப்படி சந்தோஷமாக சிரித்துக்கொண்டு வாழ முடியும்? ஆரோக்கியத்தை இழந்தவர்கள் தலைமுடி நரைத்து, கன்னங்களில் குழிவிழுந்து நெற்றியில் சுருக்கங்கள் தோன்றி இளம் வயதிலேயே கிழவர்களைப் போன்று காட்சி தருவார்கள். அதற்கு மாறாக எப்போது பார்த்தாலும் மகிழ்சியுடன் காணப்படும் முதியவர்கள் கூட கண்களில் ஒளி மிகுந்து களையுடனும் கவர்ச்சியுடனும் கம்பீ ரத்துடனும் காட்சி தருவார்கள்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## அவசியமான ஆபரணக் குறிப்புக்கள்



இங்கே சில ஆபரண டிப்ஸ் உங்களுக்காக!

★ காதில் அணியும் கம்மல்கள் பெரிதாக இருப்பதை விட சிறியஅளவே அழகாக காட்சி தரும்.

★ அதிக வேலைப்பாடு நிறைந்த மோதிரங்களை விட குறைந்த வேலைப்பாடு கொண்ட, கெட்டியான மோதிரமே அழகு தரும்.

★ பெரிய சிறிய வளையல்களை விட நடுத்தர வளையல்களே பிறரைக் கவரும்.

★ கல் வைத்த நெக்லஸ் அணியும் போது தகுந்த புடவையை தேர்ந்தெடுத்து அணிய வேண்டும். சில புடவைகள் கல் நெக்லஸ் அழகை மறைத்து விடும்.

★ வெள்ளிக் கொலுசுகள் எடை 100 கிராமுக்கு மிகாமல் இருப்பது நல்லது. வெள்ளியில் 2 வகை இருக்கிறது. முதல் தரமா? என்று கேட்டு வாங்க வேண்டும்.

★ நகைகளின் 'பளிச்' தன்மையை வைத்து நல்ல தங்கமா? கெட்ட தங்கமா? என்று எடை போட முடியாது. பொலீஷ் மூலம் எவ்வளவு வேண்டுமானாலும் பளிச் என்று ஆக்கலாம்.

★ கற்கள் பதித்த நகைகள் வாங்கும் போது தங்கம் எடை எவ்வளவு? கற்கள் எடை எவ்வளவு என்பதைக் கேட்டு வாங்க வேண்டும்.

★ நகைகள் பாதுகாக்கும் போது தனித் தனி பெட்டிகளில் போட்டு பாதுகாக்க வேண்டும். அனைத்து நகைகளையும் ஒரே டப்பாவினுள் போடக் கூடாது.

★ முத்து, வைடூரிய ஆபரணங்களை வெல்வெட் அல்லது துணியில் வைத்து பாதுகாக்க வேண்டும்.

கற்கள் பதித்த நகைகளை சுடுநீரில் போட்டு கழுவுவது தவறு.

## தாய்ப்பாலை நிறுத்துவது எப்போது?

குழந்தைக்கு தாய்ப்பாலை எப்போது- எப்படி நிறுத்துவது?



பொதுவாகக் குழந்தை பிறந்து 8 மாதங்களுக்குப் பிறகு தாய்ப்பால் குழந்தைக்குத் தரும் நன்மையானது குறைந்து விடுகிறது. எனவே 9வது மாதத்தில் இருந்து மெது. மெதுவாக தாய்ப்பாலை நிறுத்தலாம்.

இப்படி தாய்ப்பாலை நிறுத்தும் காலம் தாய்-சேய் இருவருக்கும் சற்று நெருக்கடியான நிலையை உண்டாக்கும். ஆகவே இத்தகைய கால கட்டத்தை மிகப் பொறுமையாகக் கையாள வேண்டும்.

5 நாட்களுக்கு ஒரு வேளை தாய்ப்பாலை நிறுத்தி, அதற்கு பதில் பசும்பால் கொடுத்து அப்படியே படிப்படியாக மாற்ற வேண்டும்.

ஆரம்ப கட்டங்களில் பசும்பால் கொடுக்கும் போது ஆரோக்கியம் என்று நினைத்து கெட்டியான பால் கொடுக்கக்கூடாது. இது ஜீரணமாக கஷ்டப்படலாம்! எனவே நன்கு தண்ணீர் கலந்தே கொடுக்க வேண்டும். இரவில் கொடுக்கும் தாய்ப்பாலை கடைசியாகத் தான் நிறுத்த வேண்டும். முன்னதாக தாய்ப்பால் கொடுப்பதற்கு பதில் வேறு உணவு கொடுக்கும் போது தாய் கண்மறைவாக இருந்தல் நன்று.

தாய்ப்பாலை நிறுத்த, நீங்கள் ஒரு மாதம் முதல் 3 மாதம் வரை கால அவகாசம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

முன்னதாக குழந்தை உடல் நலம் இல்லாமல் இருந்தாலோ அல்லது கடும் கோடை காலமாக இருந்தாலோ அந்த காலகட்டத்தில் தாய்ப்பாலை நிறுத்த முயற்சிக்காதீர்கள். அவை முடிந்த பிறகு தொடங்குங்கள்.

குழந்தைக்கு உணவளித்து வரும் போது ஒவ்வொரு வேளையாக தாய்ப்பாலை நிறுத்த தொடங்குங்கள்.

மாவு வகைகள், கூழ்வகைகள், கஞ்சி வகைகள் ஆகியவற்றை குழந்தைக்குக் கொடுக்கும்போது இவற்றை முதலில் கொஞ்சம், கொஞ்சமாக கொடுத்து குழந்தையின் உடலுக்கு படிப்படியாக ஏற்க வைக்க வேண்டும்.

தாய்ப்பால் கொடுக்கும் கால கட்டங்களில் குழந்தையை அரவணைத்து, அன்பு செலுத்தி, விளையாட்டு காட்டி வளர்க்க வேண்டும் என்பது அவசியம் ஆகும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IA

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-08-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 50 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

மோனிக்கா, ஜனாதிபதி கிளின்ரனுக்கு ஜூலை 3ம் திகதியன்று எழுதிய கடிதத்தில் சிறிதளவு காரமும் கலந்திருந்தது. தனக்கு மீண்டும் வெள்ளை மாளிகையில் ஒரு வேலை பெற்றுத்தருவதாகத் தனக்கு வாக்குறுதி அளித்துவிட்டு, இன்று பாராமுகமாக இருப்பது ஒரு வேதனைக்குரிய ஏமாற்றம் என்றும் குறிப்பிட்டிருந்தாள். அத்துடன் தான் வெள்ளை மாளிகையில் பணிபுரியும் போது 'ஒரு நல்லபிள்ளையாகவே நடந்து,' எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்காமல் பென்டகன் சென்ற தனையும் குறிப்பிட்டிருந்தாள்.

இத்தகைய ஏமாற்றத்தினால், தான் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேற்றப் பட்டமைக்கு, அவர் (கிளின்ரன்) தன்னுடன் நடந்து கொண்ட நெருக்கமான உறவுதான் காரணம் என்ற உண்மையை தனது தாயாரிடம் கூறிவிடப் போவதாகவும் குறிப்பிட்டிருந்தாள். இதனை ஏதோ ஒரு உணர்ச்சிவசப்பட்டு எழுதி விட்டாள்.

கடிதத்தை எழுதி, ஒரு பெரிய உறையிலிட்டு 'Mr.P' என்று மட்டும் எழுதி பெட்டி கியூரியிடம் கையளித்திருந்தாள். இந்தக் கடிதம் உடனடியாக கிளின்ரனிடம் கொடுக்கப் பட்டமையினால், அடுத்த நாளான ஜூலை 4ம் திகதி-அமெரிக்க தேசியதினமான அன்று- எத்தனையோ பணிகள் இருந்த போதும், மோனிக் காவை ஒவல் அலுவலகத்தில் கண்டு பேச முடிவு செய்தார்.

குறிப்பிட்ட நேரத்துக்கு மோனிக்கா பெட்டி கியூரியின் அலுவலகத்தில் நின்றாள். கியூரி அவளை அழைத்துக் கொண்டு ஒவலின் பின்புற வாயிலினூடாக அழைத்துச் சென்று, மெதுவாக மோனிக்காவிடம், "எக்காரணம் கொண்டும் கண்ணீர் விடக் கூடாது!" என்று மோனிக்காவை எச்சரித்துவிட்டு அகன்றாள்.

மோனிக்காவைக் கண்டதும் அவளை கிளின்ரன் உச்சி முதல் உள்ளங்கால் வரை உற்றுப் பார்த்தார். அவருடைய முகத்தில் பழைய குறும்புத்தனமான சிரிப்பை அவளால் காணமுடியவில்லை. அவளுக்கு இது ஒரு வகைப் பீதியை அளித்தது.

தனது ஆடு நாற்காலியில் அமர்ந்திருந்த கிளின்ரன் எதிரிலிருந்த இருக்கையில் மோனிக் காவை அமரும்படி சைகை காட்டினார். அவள் அமர்ந்ததும், "உன்னிடம் நான் மூன்று விடயங்கள் பற்றிக் கூறவேண்டும்!" என்றார். அவளுடைய முகத்தைப் பாராமலே, "முதலாவது, அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியை எவரும் எச்சரிக்க முடியாது என்பதை நீ அறிவாயா?" என்று கேட்டார். இதற்கு எத்தகைய பதிலை அளிப்பது என்று தெரியாமல் திகைப்புடன் இருந்தாள். "இக்கடிதத்தை நீதானே எனக்கு எழுதினாய்?" என்று இரண்டாவது விடயத்தைக் கூறினார்.

இடைமறித்த மோனிக்கா, தனது கடிதத்தை முழுமையாக அவர் வாசித்தாரா? என்று கேட்டாள். முதல் வரியைப் படித்ததுமே அக்கடிதத்தை தூர வீசி விட்டதாகக் கூறிய கிளின்ரன் "எனக்கு இப்படி ஒரு கடிதத்தை எழுதலாமா? உண்மையில் உனக்கு நான் உதவி செய்யத்தான் முயற்சிக்கிறேன். அதனை நீ உணர வேண்டும்!" என்று குட்டிப் பிரசங்கமே செய்தார்.

கிளின்ரனின் வார்த்தைகளில் தெறித்த உஷ்ணம் மோனிக்காவை வெகுவாகப் பாதித்தது. பெட்டி கியூரி விடுத்த எச்சரிக்கையை மறந்து அழ ஆரம்பித்தாள். விம்மி விம்மி அழுதாள். கிளின்ரன் எழுந்து சென்று மோனிக் காவை இருக்கையிலிருந்து தூக்கி தன்னுடன் அணைத்துக் கொண்டார். அவருடைய தோளில் சாய்ந்த வண்ணம் விசும்பினாள். அவர் அவளுடைய கண்ணீரைத் துடைத்து விட்டார் "அழவேண்டாம்" என்று பலமுறை கூறி அவளுடைய தலையைத் தடவி விட்டார். இதனைத் தொடர்ந்து இருவரும் உள்ளறைக்குச் சென்று பழையபடி மகிழ்ச்சியாக இருந்தனர்.

"உங்களுடன் நான் என் வாழ்நாளில் பெரும்பகுதியைச் செலவிடத் தயாராயுள்ளேன்!" என்று அவள் கூறியதும், ஜனாதிபதி "ஆமாம்-இன்னும் சில வருடங்களில் எனக்கு எழுபத்தைந்து வயதாகி, கிழவனாகிவிடுவேன். அப்போது நீ என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டார்.

அவள் உடனடியாக, "உங்களுக்காக நான் எதையும் சமாளித்துக் கொள்வேன்!" என்றாள்.

இருவரும் பல சம்பவங்களையிட்டும் உரையாடினர். தேசிய தின நிகழ்ச்சிகள் பலவற்றிலும் கலந்து கொள்ள வேண்டிய நிலையில் கிளின்ரன் இருந்தமையினால் இருவரும் மீண்டும் சந்திப்பதாகக் கூறிக்கொண்டு விடைபெற்றனர்.

இருவரும் உரையாடிக் கொண்டிருந்த போது, ஒரு யன்னலினூடாக ஒரு தோட்டக்காரர் பணியாற்றிக் கொண்டிருப்பதை அவ



தானித்தனர். தங்களுக்கிடையிலான உறவு பற்றிய கதைகள் எதுவும் எவருக்கும் தெரிந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கிளின்ரன் மோனிக்காவிடம் எச்சரிக்கை செய்தார்.

கிளின்ரனைச் சந்தித்துவிட்டு வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறிய மோனிக்கா முதல் வேலையாக லிண்டா ட்றிப்பைத் தொடர்பு கொண்டு, அவரைச் சந்திக்க விரும்புவதாகக் கூறினாள். வழமையாக இருவரும் சந்திக்கும் சிற்றுண்டி விடுதியில் சந்தித்தனர். தன்னுடன் கிளின்ரன் கூறிய வார்த்தைகள் எதையும் விட்டு வைக்காமல் முழுவதையும் லிண்டாவிடம் கூறினாள்.

'நியூஸ் வீக்' வார சஞ்சிகையின் எழுத்தாளரான கத்லீன் வில்லி என்ற பெண்மணியும் வெள்ளை மாளிகை விவரங்களை பத்திரிகையில் வெளியிடுவதற்கு உரிய தகவல்களை சேகரித்து வருவதாக கிளின்ரன் மோனிக்காவிடம் தெரிவித்திருந்தார். இத்தகைய எவருடைய வலைகளிலும் மோனிக்கா வீழ்ந்து விடலாகாது என்று, அன்றைய உரையாடலின் போது குறிப்பிட்டிருந்தார். மோனிக்கா அதே பத்திரிகையின் மற்றுமொரு எழுத்தாளரான மைக்கேல் இசிகோ.ப் என்பவரும் வெள்ளை மாளிகை விவகாரங்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டி வருவதாக தான் தெரிந்து கொண்டதாக கூறியிருந்தாள்.

லிண்டா ட்றிப்புடன் உரையாடியபோது, இந்தத் தகவல்களையும் அவளிடம் கூறினாள். அப்போது லிண்டா, "என்னுடைய பெயர் எச்சந்தர்ப்பத்திலாவது பிரஸ்தாபிக்கப்பட்டதா?" என்று வினவினாள். அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்று மோனிக்கா கூறி னாள்.

இச்சம்பவம் நடைபெற்று சில நாட்களில் வட 'அத்திலாண்திக் பாதுகாப்பு உடன்படிக்கை' (NATO) அமைப்பின் மாநாடொன்று ஸ்பெயின் நாட்டின் தலைநகரான மட்ரிட்டில் நடைபெற்றது. இதில் பென்டகனிலிருந்து சென்ற பிரதிநிதிகளுள் மோனிக்காவும் இடம் பெற்றிருந்தாள். இம்மாநாட்டில் ஜனாதிபதி கிளின்ரனும்பங்கேற்றார். ஸ்பெயினிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் ஜனாதிபதி கிளின்ரனையும் அமெரிக்கத் தூதுக்குழுவினரையும் கௌரவிக்கும் முகமாக இரவு விருந்தொன்று ஏற்பாடாகி இருந்தது. நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்ட இவ்விருந்தில் எப்படியோ கிளின்ரன் மோனிக் காவைக் கண்டு கண்களினாலும் கைகளினாலும் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

மட்ரிட் நகரில் மோனிக்காவுக்கு லிண்டா ட்ரிப்பிடம் இருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. வாஷிங்டனிலுள்ள பிரத்தியேக இணையமொன்றில் கதலீன் வில்லியின் கிசுகிசு கட்டுரையொன்று பிரசுரமாகி இருப்பதாகவும் அதில் கிளின்ரனின் பெயர் அடிபட்டிருப்பதாகவும் தெரிவித்தாள்.

ஐரோப்பிய நாடுகளான ஹங்கேரி, உக்ரைன், பல்கேரியா போன்ற நாடுகளுக்கு தனது சக பிரதிநிதிகளுடன் சென்று விட்டு வாஷிங்டன் திரும்பிய மோனிக்காவுக்கு பெட்டி கியூரியிடமிருந்து ஓர் அழைப்பு வந்திருந்தது.

ஜூலை 14ம் திகதியன்றுகிளின்னுடனான சந்திப்புக்கு ஏற்பாடாகியிருந்தது. 10 நாட்களுக்கு முன்னர்-ஜூலை 4ம் திகதியன்று இருவரும் சந்தித்தபின்னர் மீண்டும் தன்னை கிளின்ரன் சந்திக்க வருமாறு அழைப்பு

## ஐயப்பாட்டின் ஆரம்பம்



விடுத்தமையினால், கிளின்ரன் தன்னிடம் ஏற்கனவே கூறியது போல் அவளுடனான தொடர்புகளைக் கத்தரித் துக் கொள்ள எடுத்த முடிவில் கிளின்ரன் தனது வைராக்கியத்தைத் தளர்த்தி விட்டதாக மோனிக்கா கருதினாள்.

குறிப்பிட்ட நேரத்துக்கு வெள்ளை மாளிகைக்குச் சென்ற மோனிக்காவை உடனடியாகவே வெள்ளை மாளிகையில் இருந்த நான்ஸி ஹெர்ன்ரீச் என்பவருடைய அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றாள் பெட்டி கியூரி. கிளின்ரன் இருக்கும் ஒவல் அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லாமல் வேறோர் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்கிறாரே என்று மோனிக்கா தயங்கினாள். இருப்பினும் அந்த அலுவலகத்தின் முன்கதவைத் திறந்ததும் அதற்குள் கிளின்ரன் அமைதியாக அமர்ந்திருப்பதைக் கண்டாள். புடாபெஸ்ட் நகரில் கிளின்ரனுக்காக தான் வாங்கி வந்த பரிசுப் பொருளை அவரிடம் நீட்டினாள். அதன் பொதியை அகற்றாமலே அதனை வாங்கி அருகிலிருந்த மேசை மேல் வைத்துவிட்டார். அவருடைய முகத்தில் வேதனையின் அறிகுறி நன்றாகத் தெரிந்தது. அடிக்கடி தனது வலது கையால் தனது முதுகைத் தடவிய வண்ணம் இருந்தார்.

பழையபடி அவருக்கு முதுகு உபாதை ஏற்பட்டிக்க வேண்டும் என்று மோனிக்கா கருதினாள்.

வேறு எந்தவிதமான உரையாடலும் தொடங்குவதற்கு முன் கிளின்ரன் மோனிக்காவிடம் "அன்றைய தினம் நீ என்னிடம் குறிப்பிட்ட பெண் லிண்டா ட்ரிப் தானே?" என்று கேட்டார். இந்தக் கேள்வியால் மோனிக்கா சற்றுப் பதற்றமடைந்தாள். இருப்பினும் அதனை மூடி மறைக்க அவள் விரும்பவில்லை. "ஆமாம்?" என்று கூறினாள்.

'நியூஸ் வீக்' பத்திரிகையின் எழுத்தாளர் இசிகோ, வெள்ளை மாளிகையின் பல சம்பவங்களையிட்டு தகவல்கள் சேகரிப்பதில் ஈடுபட்டு வருவதாகவும் அவருக்கு லிண்டா ட்ரிப் என்ற பெண்மணியே பல தகவல்களைக் கூறி வருவதாகவும் தனக்கு செய்திகள் கிட்டியுள்ளதாக கிளின்ரன் குறிப்பிட்டார்.

(வருவாள்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**பொலன்னறுவ வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**ஏ.எல்.எப். நிரோசா,**
94/1, ஹிஜ்ரா மாவத்த, கதுருவெல, பொலன்னறுவ.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பாப்பா முரசு சிறுகதை

# பீர்பால் சொன்ன பதில்

அக்பர் சக்ரவர்த்தி அன்று மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தார். முக்கிய அலுவல்கள் முடிந்து விட்டதால் சற்று மனம் திறந்து அமைச்சர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது வழக்கம் போலவே அவருக்கு ஒரு சந்தேகம் வந்தது. அதை உடனே தீர்த்துக் கொள்ள ஆசைப்பட்டார்.




அமைச்சர்களைப் பார்தது "ஒவ்வொரு வருடமும் வஸந்தருது. க்ரீஷ்மருது, வர்ஷருது, சாத்ருது, ஹேமந்தருது, சிசிரருது என்ற ஆறு பருவங்களும் மாறி மாறி வருகிறன்றன. அதனதன் காலங்களில் அந்தந்தப் பருவங்களுக்குரிய பலனை கொடுத்து வருகிறது. இந்த ஆறு பரு வங்கள் மூலம் நமக்கு எவ்வளவோ நன்மைகள் கிடைக்கிறன்றன. இருப்பினும் இந்த ஆறு பருவங்களில் மிகவும் சிறந்த பருவம் எது?" என்றார்.

ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு பருவத்தின் பலன்களைக் கூறி "இதுவே சிறந்தது" என்றனர். ஆனால், ஒருவர் பதிலும் சிறந்த பதிலாக அக்பர் மனதிற்கு படவில்லை. எதையாவது ஒன்றை சிறந்ததாகக் கூற வேண்டும் என்பதற்காகவே அவர்கள் சொன்னதைப் போன்று நினைத்தார் அக்பர்.


கடைசியாக எந்த பதிலும் சொல்லாமல் அமைதியாக உட்கார்ந்திருக்கும் பீர்பாலை பார்த்தார் அரசர். "என்ன பீர்பால் வாயைத் திறந்து எதுவும் சொல்லவில்லை. உங்கள் கருத்து என்ன?" என்றார்.

"அரசே! எல்லாருக்கும் வயிறு என்று ஒன்று உள்ளது. அந்த வயிற்றிற்கு திருப்தியாக உணவு கிடைக்கும் காலம் நல்ல காலம் என்றும், கஷ்டப்பட்டு உழைத்தும் பணம் இல்லாமல், வறுமையால் வாடி குடும்பத்தினரின் பசியைப் போக்க முடியாமல் வறுமையில் வாடுபவர்களுக்கு கஷ்டகாலம் என்றும் உள்ள இந்த இரண்டு காலங்களே பிரதானமானது என்பது என் கருத்து," என்றார் பீர்பால்.


அரசரும், மந்திரிகளும் பீர்பாலின் பதிலைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தனர். அவரது அறிவை எண்ணி வியந்தனர்.



எந்தப் பாதையால் பறந்து சென்றால் இந்தப் பறவையால் மரத்தை அடைய முடியும்.




## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **19.08.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **355**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 353

பரிசுக்குரியவர்:
பொன்னம்பலம் கமல்ராஜ்,
அக்/கோ/விநாயகர் மகா வித்தியாலயம், கோளாவில்-01.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பி.பி. பிரவீண் ப்ரகாஷ், கண்டி திருத்துவக் கல்லூரி, கண்டி. | தெ. துவாரகா, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா. |
| எம். கார்த்திகா, க/ஒல்ட் பிக்கோத் தமிழ் வித்தியாலயம், புஸ்சல்லாவ. | எம். சாஜாத் முகம்மத், மட்/மெத்தைப் பள்ளி வித்தியாலயம், காத்தான்குடி. |
| எஸ். தவக்குமார், விஜரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | ச. பிரமிளா, தம்பட்டை-02, தம்பிலுவில். |
| எ.ஃப். நிசியா நம்ஸானி, அல்-அக்ஸா தேசிய பாடசாலை, கல்பிட்டி. | எ.ஃப். நிஸ்கா, வராகஸ்ஹின்ன, அக்குறணை, கண்டி. |
| ஃபாத்திமா நிஷ்மா நஜீம், சென் எக்னஸ் கொன்வென்ட், பலாங்கொடை. | பே. ஜயகணநாதன், அக்/கோளாவில் விநாயகர் ம.வி., அக்கரைப்பற்று. |

## தமிழ் இலக்கியம் தொடர்பானவை

**பத்துப்பாட்டு நூல்கள்:-**
1. திரு முருகாற்றுப்படை
2. பொறுநராற்றுப்படை
3. முல்லைப்பாட்டு
4. குறிஞ்சிப்பாட்டு
5. பட்டிணபாலை
6. சிறுபணாற்றுப்படை
7. பெரும்பணாற்றுப்படை
8. மதுரைக்காஞ்சி
9. நெடுநல்வாடை
10. மலைபடுகடாம்

**எட்டுத் தொகை நூல்:-**
1. நற்றினை
2. ஐங்குறுநூறு
3. பரிபாடல்
4. அகநாநூறு
5. புறநாநூறு
6. பதிற்றுப்பத்து
7. கலித்தொகை
8. குறுந்தொகை

**ஐம்பெரும்காப்பியம்:-**
1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. குண்டலகேசி
4. வலையாபதி
5. சீவக சிந்தாமணி

**ஐஞ்சிறுக்காப்பியம்:-**
1. சுளாமணி
2. உதயனின் கதை
3. நீலகேசி
4. நாககுமார காவியம்
5. இயசோதர காவியம்

தொகுப்பு: மு. சக்திலேந்திரன், கொழும்பு-12.

## மெய்காப்பாள நாய்

பர்மா நாட்டைக் கடைசியாக ஆண்ட துய்பா என்ற மன்னன் தனது மெய்காப்பாளனாக யாரை நியமித்திருந்தான் தெரியுமா?

ஒரு வேட்டை நாயை.

பிச்சைக்காரன் ஒருவன் அந்த நாயை மன்னனுக்கு வழங்கியிருந்தான்.

இந்த நாய் இறந்தபோது இதற்கு அரச மரியாதைகளுடன் இறுதிக்கிரியைகள் செய்தான் என்பது வியப்பான விஷயம்.


## பாம்புக் காது



பாம்புகள் ஒரு வருடத்தில் நான்கைந்து தடவைகள் தங்கள் தோலை உரித்துக் கொள்கின்றன. பாம்புகளுக்குக் காதும், கண்புருவமும் கிடையாது. அவை கேட்கும் சக்தியற்றவை.



மகுடி ஊதும் போது அந்த இசைக்கேற்ப நாகபாம்புகள் ஆடுகின்றன என்று சொல்லப்படுகிறது. இது தவறு ஆகும்.



பாம்பின் தலை வெட்டப்பட்ட பிறகும், அதன் இதயம் பலமணி நேரத்திற்குத் துடித்தபடி இருக்கும். பாம்பானது தன் வாயின் அளவை விடப் பலமடங்கு பெரிய இரையைக் கூட விழுங்கி விடும்படி அதன் தாடையமைப்பு அமைந்துள்ளது.



விறு விறு தொடர்

08

பரத் அதை வாங்கி சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தவன், "இன்னிக்கு ஈவினிங் ரிசப்ஷனை வீடியோ கவரேஜ் செஞ்சது யாரு?" என்றான்.

"ரிதம் வீடியோஸ்னு மைலாப்பூர்ல இருக்காங்க. மறுபடி நாளைக்குக் காலைல ஆறு மணிக்குத்தான் வருவாங்க. ஏன்?" என்றான் விஷால்.

"இந்தப் பார்சலை ரஞ்சித்தே நேரடியாகக் கொண்டாந்து தீபிகா கைல கொடுத்திருக்க முடியாது. அப்படிச் செஞ்சிருந்தா தான் செத்துப் போய்ட்டதா நினைச்சிட்டிருக்கிற ரஞ்சித்தை நேர்ல பார்த்து தீபிகா அதிர்ச்சி அடைஞ்சிருப்பாங்க. இப்போ விஷால் விசாரிச்சப்போ அதைச் சொல்லியிருப்பாங்க. அதனால ரஞ்சித் இந்தப் பார்சலை வேற யார் மூலமோ கொடுத்தனுப்பியிருக்கணும். இல்லைன்னா ரஞ்சித் ரகசியமா வந்து மேடையில ஏறாம பார்சலோட பார்சலா வெச்சுட்டுப் போயிருக்கணும். இப்போ நமக்கு ஒரு ஆரம்பம் வேணும். வெறும் பேர் மட்டும் வெச்சிக்கிட்டு எதுவும் செய்ய முடியாது. இந்தப் பார்சலைக் கைல வெச்சிக்கிட்டு ரிசப்ஷனுக்கு வந்தவன் ஏதாவது ஒரு வீடியோ கேமிரால சிக்கியிருக்கலாம். வந்தவனை அடையாளம் காட்ற ஒரே விஷயம் இந்த டிசைன் பேப்பர்தான். ரிதம் வீடியோஸ்ஸுக்கு ஃபோன் செய் விஷால். இப்பவே அவங்க கவரேஜ் முழுக்க பார்த்தாகணும். இங்க வேணாம், அவங்க ஸ்பாட்டுக்குப் போயிடலாம்."

செல்ஃபோனில் எண்களைத் தொட்ட விஷால், "என்ன காரணம்னு கேட்டா?" என்றான்.

"அது ஏதாச்சும் பொய் சொல்லிக்கலாம். ஜோதி, நீங்க தீபிகா வேலை செய்ற அதே ஹோட்டல்ல வேலை செய்றதாச் சொன்னீங்க இல்லை?"

"ஆமாம்!" என்றாள் செயின் டாலரைக் கடித்துக் கொண்டிருந்த ஜோதி.

"நெருக்கமான ஃபிரண்டா?"

"ஆமாம்"

"தன்னோட கோவைக் காதல் பத்தி தீபிகா...."

"சொன்னதில்லை சார்."

"ஜஸ்ட் பரத்! சார் வேணாம். நீங்க எப்பவும் இப்படித்தான் பதட்டத்தில செயின் கடிப்பீங்களா?"

"ஸாரி!" என்று அவசரமாக விடுவித்தாள்.

"இதுக்கெல்லாம் போய் எதுக்கு ஸாரி சொல்றீங்க? போஸ் அழகாத்தான் இருந்திச்சி. உங்கப்பா பேர் என்ன?"

"ஷர்மா."

"நீங்க ஜோதி ஷர்மான்னு யார் கிட்டயும் சொல்லுங்க. அதான் இப்ப ஃபேஷன். வெறுமனே ஜோதின்னு நீங்க ஃபோன்ல சொன்னா, 'பொற்காலம்' தங்கச்சி ஞாபகம் வரும். ஜோதி ஷர்மான்னு சொன்னா, 'உள்ளத்தை அள்ளித்தா' ரம்பா ஞாபகம் வரும்."

"பரத்!" என்றாள் சுசீலா, "இப்போ இந்த டிப்ஸ் ரொம்ப முக்கியமா?" என்று பற்களுக்குள் பேசினாள்.

"பரத், பேசிட்டேன். நல்ல வேளை. தே ஆர் வொர்க்கிங் நவ். அங்கே குணான்னு ஒருத்தன்தான் இன்-சார்ஜ். போலாமா?"

"விஷால், நீ வர வேணாம். அட்ரஸ் சொல்லு. என்ன டெவலெப் மெண்ட் கிடைச்சாலும் உன்கிட்ட சொல்றேன். டென்ஷன் இல்லாம நீ கல்யாண வேலைகளைப் பாரு."

"ஏன் பரத், முகூர்த்தத்துக்குள்ளே அவனைப் பிடிச்சிட முடியுமா?"

"பார்க்கலாம்."

"ஒரு வேளை முடியலைன்னா...."

"அதைப்பத்தி அப்புறம் பேசுவமே." என்றான் பரத்.

மைலாப்பூரில் நான்கு மாடிக் கட்டிடமொன்றில் மூன்றாவது மாடியில் இருந்தது ரிதம் வீடியோஸ். ஆபீஸ், ஸ்டோர் ரூம், என்று பெரிதாகவே இருந்தது. முரட்டுத் துணியில் பேண்ட் அணிந்த இன்றைய இளைஞர்கள் நான்கைந்து பேர் இரவுக்கு மரியாதை தராமல் சிகரெட் ஊதியபடி உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

குணா மேற்கத்திய பாப் பாடகன் போல தலையை டிசைன் கட் செய்து அங்கங்கே சில கொத்துகள் மட்டும் பிரௌனாக டை அடித்து, ஒரு காதில் மட்டும் ஒற்றைக் கல் கடுக்கன் அணிந்திருந்தான்.

பரத் தன்னை தமிழில் அறிமுகப் படுத்திக் கொண்டபோதும், அவன் ஆங்கிலத்தை விட்டு வெளியில் வர மாட்டேன் என்று அடம் பிடித்தான். வலுவில் சுசீலாவின் கையை எடுத்துக் குலுக்கினான்.

ஒரு வியாபார எதிரி மானபங்கம் ஏற்படுத்தும் விதமாக மர்மப் பார்சல் வைத்துச் சென்று விட்டதாகவும், அவனைக் கண்டு பிடித்து உடனே மான நஷ்ட வழக்கு போட வேண்டுமென விஷால் தனக்கு பொறுப்பு தந்திருப்பதாகவும் ரீல் சுழற்றினான் பரத்.

குணா எடிட்டிங் அறையில் அவர்களுக்கு நாற்காலிகள் அமைத்து தன் உதவியாளர்களை ஏவினான். "டீ?" என்று சுசீலாவைப் பார்த்துக் கேட்டான்.

மொத்தம் மூன்று கேமிராக்கள் ரிசப்ஷனை கவர் செய்திருந்தன.

அதில் பரத் மண்டப வாசலில் உள்ளே நுழைபவர்களை கவர் செய்த கேஸட்டை முதலில் போடச் சொன்னான்.

மானிட்டர் திரையில் ஒவ்வொருவராக மேட்டுக்குடியினர் பரிசுப் பார்சல்களுடன் வரத் துவங்கினார்கள்.

பரத்-சுசீலா அவர்கள் கையில் வைத்திருந்த குறிப்பிட்ட அந்தப் பார்சல் காகிதத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டார்கள்.



"ஸோ?" என்றான் புகைக்கு நடுவில்.

"......"

"சரி, நான் பார்த்துக்கிறேன். நோ பிரப்ளம்!" என்றான்.

ரிசீவரை வைத்துவிட்டு ஜன்னல் ஓரமாக வந்தான். கயிறு இழுத்து திரையை நகர்த்தியதும் பிரபஞ்சத்தின் கறுப்பு நெற்றியில் வைக்கப் பட்ட நிலாப் பொட்டு தெரிந்தது. பொட்டு கொஞ்சம் பிசகியிருந்தது.

கீழே பார்த்தான். அந்த நட்சத்திர ஹோட்டலின் செவ்வகநீச்சல் குளத்தின் நீரலைகளோடு நிலவொளியும், தென்றலும் விளையாடிக் கொண்டிருந்தன.

ரஞ்சித் புகையை ஆழமாக உள்ளிழுத்து நீளமாக வெளியேற்றியபடி யோசித்தான். ஏதோ முடிவெடுத்தவன் போல தலையை அசைத்துக் கொண்டான்.

கல்யாண மண்டபத்தில் மணவறைக்குப் பின்புறம் அமைப்பதற்காக 'ஆகாஷ்-தீபிகா' என்ற தெர் மாக்கோலில் எழுத்தெழுத்தாக வெட்டிக் கொண்டிருந்தார்கள்.

பெண்கள் சேர்ந்து உட்கார்ந்து அரட்டையடித்தவாறு ரங்கோலி கோலங்கள் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

டென்ஷனாக இங்கும் அங்கும் உலவிக் கொண்டிருந்த விஷால் மண்டப வாசலில் பரத்தின் கார் வருவதைப் பார்த்ததும் வாசலுக்கு கிட்டத்தட்ட ஓடி வந்தான்.

பரத் இறங்கும் முன்பாக, "என்ன ஆச்சு?" என்றான்.

பரத் தன் பாக்கெட்டிலிருந்த புகைப் படத்தை எடுத்தான். வீடியோவில் கிழ வேடத்தில் கையில் பரிசுப் பார்சலுடன் வந்த ரஞ்சித்தின் உடனடி புகைப்படம்!

"இவன்தான் பார்சல் எடுத்துட்டு வந்திருக்கான்!."

"வயசானவரா இருக்காரே!"

"உத்துப் பாரு விஷால்! வேஷம்னு தெரியலையா?"

"அப்படீன்னா இது...."

"சந்தேகமே இல்லாம ரஞ்சித் தான் இது! ரஞ்சித் வேற யார் மூலமாவது பார்சலை அனுப்பறதாயிருந்தா அந்த வேஷம் போட்டுக்கிட்டு வர வேண்டிய அவசியமில்லை. தீபிகா தன்னை அடையாளம் கண்டு பிடிச்சிடக் கூடாதுன்றதுக்காக இப்படி மாறு வேஷத்தில வந்திருக்கான். ரஞ்சித் என்னதான் வேஷத்துல இருந்தாலும் பழகினவங்களால அடையாளம் சொல்ல முடியும். நாளைக்குக் கல்யாணம் முடிஞ்சதும் தீபிகாகிட்ட இந்தப் புகைப்படத்தைக் காட்டிக் கேட்டுக்கலாம்.!"

"சரி, இப்போ அடுத்த நட வடிக்கை என்ன பரத்?"

"ரஞ்சித் இப்படி எச்சரிக்கையா வேஷம் போட்டுகிட்டு வந்திருக்கான். அதனால அவன்கிட்ட சொந்தமா கார் இருந்தாகூட எச்சரிக்கைக்காக தன் கார்ல அவன் வந்திருக்கமாட்டான்றது என் யூகம்!"

"அபபோ?"

"அவன் வர, போக டாக்ஸி இல்லை ஆட்டோவைதான் பயன் படுத்தியிருக்கணும்!" என்றாள் சுசீலா.

"இந்த மண்டபத்துக்குப் பக்கத்தில இருக்கிற ஆட்டோ, டாக்ஸி ஸ்டாண்டுகள்ல இந்த ஃபோட்டோவைக் காட்டி விசாரிக்கப் போறோம். நமக்கு அதிர்ஷ்டமிருந்தா இவனை ஏத்திட்டுப் போன வண்டி டிரைவர் கிடைக்கலாம். கிடைச்சுட்டா அவன் மூலமா இவன் இப்போ எங்கே இருக்கான்ற தகவல் கிடைக்க வாய்ப்பிருக்கு.!"

விஷால் வாட்ச் பார்த்து, "மணி ஒண்ணாகப் போகுதே!" என்றான்.

"இன்னிக்கு சிவராத்திரிதான்!" என்று சிரித்தான் பரத். (தொடர்ந்து வரும்)

மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

கொஞ்சம் வேகத்தைக் கூட்டி, சந்தேகம் வரும் போது வேகத்தைக் குறைத்து நார்மலாக்கிப் பார்த்துக் கொண்டிருந்த பரத்.

"ஹோய்! இதோ பாரு!" என்று சுட்டிக் காட்டினான்.

கையில் அந்தப் பார்சலுடன் கிழ ரஞ்சித் வந்து கொண்டிருந்தான்.

அந்த ஃபிரேமை உறைய வைத்தான்.

"இதேதான். இல்ல?"

"ஆனா-ரொம்ப வயசானவரா இருக்காரே பரத்!"

"பார்சல் சைஸ் பாரு. ஒரு புடவையோட அட்டைப் பெட்டியைச் சுத்தின மாதிரி அதே செவ்வக சைஸ்! அதே பேப்பர்!"

"இதே பேப்பர் எங்கயும் கிடைக்கும் பரத்."

"ஓகே. இன்னும் யாராவது இதே மாதிரி பேப்பர்ல இதே மாதிரி சைஸ்ல பார்சல் எடுத்துட்டு வர்றாங்களான்னு பார்க்கலாம். அதுக்கு முன்னாடி.. மிஸ்டர் குணா... இந்த போர்ஷன் மட்டும் வேற ஒரு 'வி ஹெச் எஸ்'ல மாத்திக் கொடுங்க. தவிர இந்த ஃபிரேமை மட்டும் இன்ஸ்டண்ட் ஃபோட்டோ எடுத்துத் தர முடியுமா?"

இதற்கு குணா செல்லமாகச் சிரித்து, "ரிதம் வீடியோசில் முடியாததே கிடையாது!" என்றான் சுசிலாவைப் பார்த்து.

நிற்க. ஹோட்டல் ஜெம்மில் தன் அறையில் ஆனந்தமாக உறங்கிக் கொண்டிருந்த ரஞ்சித் ஃபோன் ஒலியில் கலைந்து 'எவண்டா அவன் இந்த நேரத்தில' எரிச்சலுடன் ஃபோனை எடுத்தான்.

"அப்படியா?" என்றான்.

நள்ளிரவில் உறக்கம் கலைக்கப்பட்ட ரஞ்சித் ஃபோனில், "நல்லாத் தெரியுமா?" என்றான். ரிசீவரை தோளில் இறுக்கிக் கொண்டு சிகரெட்டுக்கு நெருப்புவைத்துக் கொண்டான்.

எதிர்முனை பதில் அவன் முகத்தில் எந்தப் பதட்டத்தையும் ஏற்படுத்தவில்லை.

# மறுபக்கம்

01

## எம்.ஆர்.ராதா



இம்பாலா கார் அப்போது தான் இந்தியாவில் அறிமுகமாகி இருந்தது.

அந்தக் கார் வைத்திருப்பதே ஒரு ஸ்டேடஸ் ஆகக் கருதப்பட்டது. எம்.ஜி.ஆர்., சிவாஜி ஆகியோரிடம் மட்டும் அந்தக் கார் இருந்தது.

அந்தக் காரில் அவர்கள் ஸ்டுடியோவிற்கு வந்தாலே தெருவெல்லாம் கூடி, "அதோ வருகிறதே, அதுதான் இம்பாலா," என்று பேசுவார்கள்.

ஒருநாள் ராதா என்னிடம், "என்னடா, சிலபேர் இம்பாலாவை வைச்சுகிட்டு ஊருக்கு 'பயம்' காட்றான். உடனே நாமளும் ஒரு இம்பாலா வாங்கணும்," என்றார்.

அதுபோலவே சொந்தமாக ஒரு இம்பாலா வாங்கினார்.

*சிறிய வயதிலேயே எம்.ஆர். ராதாவிடம் ஒப்பனைக் கலைஞராக ('மேக்-அப் மேன்') பணியாற்றியவர் கஜபதி. எம்.ஆர்.ராதாவின் மறைவிற்குப்பின் அவரது மகன் ராதாரவிற்கும் ராதாவின் பேரன் வாசு விக்ரமிற்கும் (இவர் எம்.ஆர். ஆர்.வாசுவின் மகன்) ஒப்பனைக் கலைஞராகப் பணியாற்றிவருகிறார்.*

*எம்.ஆர்.ராதாவுடன்பணியாற்றிய காலத்தில் அவரிடம் கண்ட-கேட்ட விஷயங்களை சில வருடங்களுக்கு முன் தமிழகப் பத்திரிகை ஒன்றின் வார இணைப்பில் பகிர்ந்திருந்தார். அவற்றில் இருந்து சிலவற்றை உங்களுக்குத் தருகிறோம்.*

கார் வந்ததும் அதை எடுத்துக் கொண்டு, எக்மோர் ஆஸ்பத்திரியில் உடல் சுகமில்லாமல் 'அட்மிட்' ஆகி இருந்த பெரியாரைப் பார்க்கப் போனார். பெரியாரிடம் கார் வாங்கிய விஷயத்தைச் சொல்லி, பத்தாயிரம் ரூபாய் பணத்தையும் அவரிடம் நிதியாகக் கொடுத்தார்.

பெரியார் கூட, "ஏனய்யா, காரிலே போய் இவ்வளவு பணத்தைப் போடறே? அதுக்கு ஏதாவது ஒரு வீடு தோட்டம், துறவுன்னு வாங்கினாலும் -'யூசாக' இருக்குமே?" என்றார்.

பெரியாருக்கு எப்போது உடல் சுகம் இல்லையென்றாலும், ராதா அவரைப் போய் சந்தித்து, பணம் கொடுப்பார். "உங்க உடம்புக்கு மருந்து கொடுத்துட்டேன். இனிமே நீங்க சுகமாயிடுவீங்க," என்று சொல்லுவார். பெரியாரும் சிரித்துக் கொள்வார். பெரியார் எப்போதும் பணத்திலே குறியாக இருப்பதைத் தான், ராதா அப்படி கிண்டலாகச் சொல்வார்.

இந்த இம்பாலா காரிலே கொஞ்சநாள் போய் வந்து கொண்டிருந்த ராதாவுக்கு, பிறகு இந்தக் கார் அலுத்துப் போய்விட்டது.

தன்னிடம் பணிபுரிந்து கொண்டிருந்தவர்களிடம் அதை கொடுத்து, "இனிமே, நீங்க உங்க வேலைக்கு இதைப் பயன் படுத்திக்குங்க," என்றார்.

எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்டத்துக்கு எதிரேதான், எம்.ஆர்.ராதாவின் வயல், தோட்டம் போன்றவை இருந்தன. அந்த விவசாய வேலைகளுக்கும் இந்தக் கார் பயன்படுத்தப் பட்டது.

ஒருமுறை, தோட்டத்திலிருந்து கொஞ்சம் வைக்கோல், விறகு, கயிறு, போன்றவைகளை இந்தக் காரில் தூக்கிப் போட்டு எடுத்து வந்தனர். அடிக்கடி இப்படி நடக்க ஆரம்பித்தது. இதே காரை வைத்திருந்தவர்களுக்கு, என்னவோ போல் ஆகிவிட்டது. 'இந்த ஆள் இம்பாலா காருக்கு இருந்த மதிப்பையே கெடுத்துவிட்டார்,' என்று எண்ணி தங்களது இம்பாலா கார்களை விற்று விட்டனர்.

ராதாவின் இம்பாலா கார், காங்கிரஸ் அமைச்சராக இருந்த ஜோதி வெங்கடாசலத்திற்கு (கேரள கவர்னராகவும்இருந்து சில ஆண்டுகளுக்கு முன் காலமானவர்) விற்கப் பட்டது. இன்னமும் அந்த அம்மையார் வீட்டில் இந்தக் கார் இருக்கின்றது.

'ரத்தக் கண்ணீர்' படத்தின் காமிராமேன் ஆர்..ஆர்.சந்திரனும், டைரக்டர் கிருஷ்ணன் பஞ்சுவும் சினிமாவிற்கு ஏற்ற மாதிரி நடிக்கும் விதத்தை ராதாவிற்கு அடிக்கடிச் சொல்லிக் காடுப்பார்கள். 'ரத்தக்கண்ணீர்' தான் ராதாவிற்கு முதல் படம் என்று கூட சொல்லலாம். 'ரத்தக் கண்ணீருக்கு' முன்னால் ராதா ஏதோ ஒரு படத்தில் நடித்திருந்தாலும் அந்தப்படம் ஓடாததால், ராதா மீண்டும் நாடக உலகிற்கே போய்விட்டு, பதினான்கு ஆண்டுகள் கழித்து தான், இரண்டாவதாக 'ரத்தக் கண்ணீரி'ல் நடித்தார்.

'ரத்தக் கண்ணீர்' படப்பிடிப்பில் ஒரு 'ஷாட்'டின் போது காமிராமேன் ராதாவிடம், "அண்ணே.... நீங்க குறிப்பிட்ட மார்க்கை விட்டு தள்ளிப்போய் நடிக்கிறீங்க. அப்படி தள்ளிப் போனா காமிராவில் போகஸ் மாறிடும். படம் வூராது. 'மார்க்'கைத் தாண்டிப் போகாதீங்க," என்றாராம்.

ராதா கோபத்துடன், "என் நடிப்பை படம்பிடிக்கிறதுக்கு தான்யா, உன் காமிரா! உன் காமிராவுக்கு தகுந்த மாதிரி என்னால நடிக்க முடியாது. நான் நடிக்கும் போது எமோஷனிலே அங்கே இங்கே போவேன். அதுக்கு தகுந்த மாதிரி நீயும் காமிராவோடு என் பின்னாலேயே வா," என்றாராம்.

வேறு வழியில்லாமல், ராதா இஷ்டப்படியே நடிக்க விட்டார்களாம் காமிராமேனும், டைரக்டரும்.

'கைராசி' என்றொரு படம். ஜெமினி கணேசன் நடிக்க, கே.சங்கர் டைரக்ட் செய்தார். இதில் ராதா வில்லன்!

அக்காலத்திய நடிகர்கள் பெரும்பாலும் மது சாப்பிடும்பழக்கம் உள்ளவர்கள் தான். ராதாவுக்கும் அந்தப் பழக்கம் உண்டு. 'கைராசி' படத்தின் படப்பிடிப்பு நடந்த இரவில், ராதா ரொம்ப சோர்வாக இருந்ததால், கொஞ்சமாக 'ஒரு பெக்' மது சாப்பிட்டார்.

கே.சங்கர், என்னிடம் வந்து, "இன்றைக்கு எடுக்கப் போவது மிக அருமையான சீன். ராதாவை சிறப்பாக நடிக்கச் சொல்லுங்கள்," என்றார்.

நானும், ராதாவிடம், "அண்ணே! இன்றைக்கு சீன் ரொம்பப் பிரமாதமாம், ஜோரா பண்ணுங்க," என்றேன்.

ராதா நடித்தார். அவர் சற்று போதையில் இருந்ததாலோ என்னவோ, அந்தக் காட்சியில் அவர் சரியாகவே நடிக்கவில்லை. ஆனாலும், என்னென்னவோ முயற்சி பண்ணினார். நடிப்பு சிறப்பாக இல்லை. டைரக்டர் சங்கருக்கு கொஞ்சம் வருத்தம் தான். ஆனாலும், "ஒ.கே..., ஒ.கே.," என்று கூறி சமாளித்து, ஒருவழியாக அந்தக் காட்சியை எடுத்து முடித்தார்கள்.

படத்தின் தயாரிப்பாளர் வாசு மேனன் என்பவர்.

மறுநாள் காலையில் வேறு படத் தின் ஷூட்டிங்கிற்கு கிளம்பிய ராதா, உடனே வாசுமேனனை அழைத்து வரச் சொன்னார்.

அவரிடம், "நேற்று நான் உங்கள் படத்தில் சரிவர நடிக்கவில்லை என்று நினைக்கிறேன். அந்தக் காட்சியை மீண்டும் எடுக்க வேண்டும்," என்றார்.

வாசுமேனன், "இல்லை, இல்லை... நன்றாகத்தான் நடித்தீர்கள்," என்றார்.

"எனக்குத் தெரியும் மேனன். மீண்டும் அந்தக் காட்சியை எடுக்க என்ன செலவு ஆகிறதோ, அது முழுக்க என்னைச் சேர்ந்தது. ஸ்டூடியோ வாடகை, யூனிட், போட்டோ பிலிம் செலவு அனைத்துக்குமான பில்லை என்னிடம் கொடுங்கள். கண்டிப்பாக அந்த சீனை மீண்டும் எடுத்தாக வேண்டும்," என்றார். அதுபோலவே மீண்டும் அந்தக் காட்சி எடுக்கப்பட்டு விட்டது. தயாரிப்பாளர் எவ்வளவோ மறுத்தும் கூட, ராதா அன்றைய செலவு என்ன ஆனதோ அந்தப் பணத்தை தன் கையிலிருந்து தயாரிப்பாளரிடம் கொடுத்தார்.

(தொடர்வார்)

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 15

மேடையின் அருகிலுள்ள மூடு திரையின் மறைவில் துப்பாக்கியை உடைத்து பார்த்துவிட்டுத் திகைத்துப் போய் நின்ற என்னை, நாடகத்தில் காக்கை வன்னியன் பாத்திரமேற்று நின்று கொண்டிருந்த அறப்போர் அணித் தலைவர் அரியநாயகம் அவர்கள் அதே வேளையில் பார்த்தார். நான் அதிர்ந்து போய் நின்றுகொண்டிருந்ததை அவதானித்த அவர் மெல்ல நடந்து என்னருகில் வந்து நின்று கொண்டு, "என்ன பத்மன், என்ன நடந்தது?" என்று மிக மெதுவாகக் கேட்டார். துப்பாக்கியினுள் இரண்டு தோட்டாக்கள் செருகப்பட்டிருந்ததை அவரிடம் காண்பித்தேன். அவரும் பதற்றமடைந்தார். என்கையிலிருந்ததுப்பாக்கியைப் பறித்தெடுத்து இரு தோட்டாக்களையும் கழற்றி கையிலெடுத்தார்.

அவையிரண்டும் ஒரு வேளை வெற்றுத் தோட்டக்களாக இருக்கலாமோ என்று அவர் சந்தேகப்பட்டது போல் அதுவரை நானும் சந்தேகப்பட்டுக் கொண்டுதானிருந்தேன். ஆனால் அவை இரண்டும் புத்தம் புதிய SG ரகத் தோட்டாக்கள்.

சங்கிலியன் இராசதுரை, ஆக்கிரமக்காரர்களின் அக்கிரமங்களையும் அவதூறுகளையும் எதிர்த்து ஆக்ரோஷமான வசனங்களை அப்போது பேசிக் கொண்டிருந்தார். 'மனோகரா' திரைப்படத்தில் மனோகரனாக நடித்த சிவாஜி கணேசன் எவ்வாறு அடுக்கு வசனங்களில் உணர்ச்சி ததும்ப வசனம் பேசினாரோ அதே நிலையில் இராசதுரை அவர்கள் வசனங்களைப் பேசிக் கொண்டிருந்தார்.

அரியநாயக அண்ணனும் நானும் எந்நிலையில் இருந்தோம் என்பதை இராசதுரை அவர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை. மேடையில் இருந்தவர்களுக்கும் மண்டபத்தில் குழுமியிருந்த பார்வையாளர்களுக்கும் கூட இந்தச் சம்பவம் தெரியவே தெரியாது.

சங்கிலியனை துப்பாக்கியால் சுடும் சந்தர்ப்பம் வந்தபோது, துப்பாக்கியை எடுப்பதற்காக வெள்ளைக்காரத்துரை வேடம் புனைந்திருந்த திரு.ஜோசப் என்னிடம் ஓடி வந்தார். தோட்டாக்கள் நீக்கப்பட்ட வெறும் துப்பாக்கியை அவரிடம் நீட்டினேன். அப்போது என் கைகள் நடுங்கிக் கொண்டிருப்பதை திரு.ஜோசப் அவர்களும் அவதானித்து என் முகத்தைப் பார்த்தார். அவருடைய புஜத்தைப் பிடித்து தள்ளி அவருடைய நாடகக் கடமையை உணர்த்தினேன். என்னுடைய முதுகில் அன்பாகத் தட்டிவிட்டு "அமைதியாக இரு பத்மன்!" என்று கூறிவிட்டு அரியநாயகம் அண்ணன் அவர்களும் மேடைக்குச் சென்றார்.

ஜோசப் அவர்கள் இராதுரை அவர்களை துப்பாக்கியை நீட்டி சுடுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில்- குறிப்பிட்ட நேரத்துக்கு இரு நிமிடங்களுக்கு முன்னதாகவே மேடையின் பின்புறம் நின்றிருந்த கதிர்காமத்தம்பி அவர்கள் பட்டாசைக் கொளுத்தி விட்டார். இதனால் இறுதி வசனம் சிலவற்றைப் பேசுவதற்கு முன்னரே இராசதுரை அவர்கள் கீழே சாய்ந்தார். என்ன தான் நடைபெற்று இருக்கிறது என்பதை நன்றாக அறிந்திருந்தபோதும் என் பதற்ற நிலை அப்போதும் அடங்கவில்லை. திரையிறக்கப் பட்டதும் ஓடிச்சென்று இராசதுரை அவர்களின் மார்பைத் தொட்டுப் பார்த்தேன். அவருடைய இருதயம் சற்று வேகமாக அடித்துக்கொண்டிருந்ததை அவதானித்தேன். என்னைப் போல் அரியநாயக அண்ணன்

## தோட்டாக்கள் எங்கிருந்து வந்தன?

அவர்களும் ஓடி வந்து இராசதுரை அவர்களை உற்றுப் பார்த்த அவ்வேளை, இராசதுரை அவர்கள் எதுவும் நடவாதது போல் எழுந்து நின்றார். அரியநாயகம் அண்ணன் அவர்களும் நானும் கண்களால் பேசித்





திருப்தி அடைந்து கொண்டோம்.

மேடைக்கு எடுத்து வரப்படும் பொருட்களை ஒன்றுதிரட்டி, அப்போது வன்டிங் ஒழுங்கையிலிருந்த திரு.இராசதுரை அவர்களின் வீட்டு முன் மண்டபத்தில் வைத்து விட்டு அவற்றுக்குப் பொறுப்பாக ஒருவரை (அவர் யார் என்பது இப்போது நினைவில் இல்லை) பாதுகாப்பாக வைத்து விட்டுத்தான் அன்று பகல் நகர மண்டபம்' சென்று ஏனைய ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தேன். அன்று புறப்படுவதற்கு முன்னர் கடைசியாக மேடைக்காட்சிப் பொருட்களைப் பரிசீலனை செய்தபோது, துப்பாக்கியை நன்றாகச் சோதனையிட்டேன். அப்போது தம்பி ஈழத்து இரத்தினமும் காரைதீவு மாணிக்கவாசகரும் கூடவேயிருந்தனர்.

அப்போது அத்துப்பாக்கியில் தோட்டாக்கள் எதுவும் இல்லையென்பதை நாங்கள் மூவரும், பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த அந்த நபரும் உறுதி செய்து கொண்டோம். அவ்வாறிருந்தும் அத்துப்பாக்கிக்குள் இரு உயிர் கொல்லித் தோட்டாக்கள் எவ்வாறு குடியேறின என்பது அப்போதும் புரியாத புதிராகவே இருந்தது. இன்றுவரை அது ஒரு பெரும் புதிராகவே எங்கள் மத்தியில் நிலவுகிறது.

சங்கிலியன் நாடகம் மிகச் சிறப்பாகவே நடந்து முடிந்தது. துப்பாக்கிச் சம்பவம் பற்றி இராசதுரை அவர்களிடம் பல நாட்கள்வரை எவரும் கூறவே இல்லை. நாடகம் வெற்றிகரமாக நடைபெற்றமையினால், நாடகத்துக்கு-காட்சி அலங்காரங்களை செய்வதற்காக திரைச்சீலைகள், காட்சி ஜோடனைகள் ஆகியவற்றுடன் யாழ்ப்பாணத்திலிருந்து பிரத்தியேகமாக வந்திருந்த யாழ்ப்பாணம் 'ரோஸ் ஆர்ட் ஸ்டுடியோ' நிர்வாகியான திரு.ஜோசப் இந்நாடகத்தை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவந்து, குடாநாட்டின் பல இடங்களிலும் மேடையேற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இரண்டொரு வாரங்களில் இந்நாடகத்தை கல்முனையில் மேடையேற்றுவதற்கு ஒப்பந்தம் பேசுவதற்காக ஒருவர் இராசதுரை அவர்களின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அவருக்குச் சாதகமான பதிலை இராசதுரை அவர்கள் கூறிவிட்டார். ஆனால் 'வாமனுக்கு மாமவலிச் சக்கரவர்த்தி ஓரடி நிலம் கொடுப்பதற்குச் சம்மதமளித்து கமண்டலத்தில் இருந்து நீரை ஊற்றி சத்தியம் செய்து கொடுக்கும் போது, சுக்கிராச்சாரியார் வண்டு உருவெடுத்து கமண்டலத்திலிருந்து நீர் வரும் குழாயுள் புகுந்து தடுக்க முயன்றது போல்' நான் தடுத்து விட்டேன். இதனால் இராசதுரை அவர்கள் என்னுடன் சற்று கோபமடைந்தார். ஒப்பந்தம் பேச வந்தவர் என்னைத் திட்டித் தீர்த்துவிட்டு வெளியே சென்றபின் இராசதுரை அவர்கள் நான் தடுத்தமைக்கான காரணத்தை என்னிடம் கேட்டார். அப்போது தான் துப்பாக்கி மூலம் நடைபெற்ற கொலைச் சதிபற்றி அவரிடம் சொன்னேன். ஆரம்பத்தில் என் கூற்றை இராசதுரை அவர்கள் நம்பவில்லை. அரியநாயகம் அண்ணன் அவர்கள் அப்போது அவருடைய ஊரான திருக்கோவில் சென்றிருந்தார்.

ஒருவாரம் கழித்து அவர் திரும்பி வந்தபின்னர் தான் அவர் வாய்மொழிமூலம் துப்பாக்கிச் சதிபற்றிய உண்மையைக் கேட்டறிந்தார் இராசதுரை. இந்தத் தகவல் தெரிந்ததும் எந்தவகையிலும் அவர் உணர்ச்சி வசப்பட்டவராகத் தெரியவில்லை.

### இரா.பத்மநாதன்

### கிருஷ்ணக்குட்டி

தமிழரசுக் கட்சியின் தேசிய மகாநாடுகள் பல திருகோணமலையில் தான் நடைபெற்றன. 1955ம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டின் போது கவிஞர் தாசி வில்வராஜ் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் பிரபலமான பொதுவுடமைவாதியாக இருந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் திருகோணமலை அலுவலகம் நெல்சன் படமாளிகைக்கு அருகிலிருந்தது. வில்வராஜ் அவர்கள் சிறுவனாக இருந்த போது மட்டக்களப்பில் எனது வீட்டுக்கு அருகிலேயே இருந்தமையினால் இருவரும் அண்ணன் தம்பிபோல் பழகியிருந்தோம்.

நெருக்கமான இந்த அறிமுகத்தின் பயனாக அவர் என்னை தன்னுடன் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றிருந்தார். என்னுடன் நண்பர் ஏ.எம்.ஏ.அஸீஸ் அவர்களும் வந்திருந்தார்.

மெலிந்த சற்று உயரமான ஒரு தோழரை திரு.வில்வராஜ் எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். கே.வி.கிருஷ்ணக்குட்டி என்பது அவர் பெயர். கம்யூனிஸ்ட் கட்சி அலுவல்கள் அனைத்தையும் 'திருகோணமலை நகரத் தொழிலாளர்களின் பலதரப்பட்ட பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருபவர் திரு.கிருஷ்ணக்குட்டி' என்று வில்வராஜ் எங்களுக்கு அவரை அறிமுகப்படுத்தி வைத்தார்.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரி வீதியில் மத்திய வீதி வந்துதொடும் இடத்தில் ஒரு சிறு வீட்டில் பகுத்தறிவு இயக்கத்தின் வாசிகசாலையை தொடங்குவதற்கு ஆயத்தங்கள் செய்திருந்தோம். இந்த இடத்திற்கு எதிரிலுள்ள ஒரு மாடி வீட்டில் தொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் அமைந்திருந்தது. இதில் ஜோசப் என்ற நண்பர் பணிபுரிந்து வந்தார். இரவு வேளைகளிலும் அவர் அப்பணிமனையிலேயே தங்குவார்.

பகுத்தறிவு இயக்க வாசிகசாலையைத் திறந்து வைப்பதற்கு குறிப்பிட்டிருந்த நாளன்று காலையில் திருகோணமலையிலிருந்து தோழர் கிருஷ்ணக்குட்டி அவர்கள் வந்திருந்தார். என்னைப்போய் சந்திக்கும்படி தம்பி வில்வராஜ் அவர்களே அவரை அனுப்பியிருந்தார். வாசிகசாலையை முறைப்படி திறந்து வைப்பதற்கு நாங்கள் ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தபோது திரு.ஜோசப் அவர்களே கிருஷ்ணக்குட்டி அவர்களை அழைத்துக் கொண்டு வந்து எம்மிடம் சேர்த்தார். பகுத்தறிவு இயக்கத்தின் தலைவராக அப்போதிருந்தவர் கல்லடி உப்போடை தபால் நிலைய அதிபராகக் கடமைப்பார்த்த கதிர் காமத்தம்பி அவர்கள். வாசிகசாலையைத் திறந்து வைத்துவிட்டு அவர் போய் விட்டார். அப்போது மணி இரண்டிருக்கும். கிருஷ்ணக்குட்டி அவர்களுடன் பாலா (பாலசுப்பிரமணியம்) அவர்களும் நானும் உரையாடிக் கொண்டிருந்தோம். உள்ளே நூற்றுக்கணக்கான நூல்களும் இலங்கை, இந்திய பத்திரிகைகளும் வைக்கப்பட்டிருந்தன. கிருஷ்ணக்குட்டி அவர்களும் அவருக்கான தனியானதோர் ஏற்பாடு செய்யப்படும்வரை இயக்க வாசிகசாலையிலேயே தங்கியிருக்கலாம் என்று ஏற்பாடு செய்திருந்தோம்.

கட்டடத்தின் வெளிப்புறத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குரிய கறுப்பு சிவப்பு கொடி ஒன்று பறக்க விடப்பட்டிருந்தது.

மத்திய தெருவினூடாக மிக வேகமாக சைக்கிளில் வந்து கொண்டிருந்த ஒருருவம் வாசிகசாலையின் முன்புறமாக வீதியில் தனது சைக்கிளைக் கிடத்திவிட்டு அதே வேகத்தில் வந்து முன்புறமிருந்த கொடியை இழுத்துக் கிழித்து எறிந்துவிட்டு பலவகையான அர்ச்சனைகளை உதிர்த்த வண்ணம் வாசிகசாலையின் உள் நுழைந்து கதவு நிலையோடு நின்றிருந்த என்னை தனது முரட்டுத்தனமான வலது கையால் அடித்துத் தள்ளி விட்டது அந்த உருவம்.

கதவு நிலையில் எனது தலையின் பின்புறம் அடிபட்டதும் நான் மயங்கிக் கீழே விழுந்து விட்டேன். தொடர்ந்து என்ன நடைபெற்றதென்று எனக்கு அப்போது தெரியாது.

(இன்னும் வரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 69**

# அரங்கம் அந்தரங்கம்



**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

உடனே போலீஸ் அதிகாரி யாருக்கோ டெலி:போன் போட்டார். அந்தப் பக்கம் யார் பேசினார்கள் என்பதும் தெரியவில்லை. என்ன பேசினார்கள் என்பதும் கேட்கவில்லை. "வக்கீலோடு அவர் வந்திருக்கிறார்!" என்று அதிகாரி சொன்னது கேட்டது.

பிறகு அந்தப் பக்கத்திலிருந்து என்ன உத்தரவு வந்ததோ தெரியவில்லை. "மன்னிக்க வேண்டும்; நீங்கள் கோர்ட்டிலேயே ஜாமீனில் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று கூறிவிட்டார்.

கோர்ட்டிலே எடுப்பதென்றால் மறுநாள்தான் எடுக்க வேண்டும்.

எழுந்து நின்றபடியே என்னுடைய வக்கீல் சொன்னார்: "இவள் இன்றிரவு இந்த ஸ்டேஷனில் தங்கியாக வேண்டும். நாளை இவளைக் கோர்ட்டுக்கு கொண்டு வந்ததும், இன்றிரவு நீங்கள் இவளைக் கற்பழித்ததாக வழக்குப் போடுவேன். அதற்கு நீங்கள் தயாராக இருந்து கொள்ளுங்கள்!"

இந்தப் 'பாயிண்ட்' எனக்கு மிகவும் பிடித்தது.

அந்த அதிகாரி என்ன நினைத்தாரோ, உடனே மீண்டும் யாருக்கோ டெலி:போன் போட்டார்.

வக்கீல் சொன்னதை அப்படியே சொன்னார்.

உடனே :போனை வைத்துவிட்டு, சந்திரபுஷ்கரணியை ஜாமீனில் விடுதலை செய்து விட்டார்.

சந்திரபுஷ்கரணியோடு நான் வக்கீலுக்கு நன்றி கூறினேன்.

அவர் காரில் ஏறி உட்கார்ந்ததும், காரிலேயே ஒரு கிளாஸ் சாப்பிட ஆரம்பித்தார்.

பிறகு வக்கீலைக் கொண்டு போய் வீட்டில் விட்டு விட்டு, சந்திரபுஷ்கரணியை என் கம்பெனிக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டேன்.

இனி அவளை பம்பாய்க்கு அனுப்ப முடியாது.

இரவெல்லாம் எனக்கு ஒரு யோசனை.

சந்திரபுஷ்கரணி மீதான வழக்கில் சந்திரசூரியனையும் கோர்ட்டுக்கு இழுப்பது; பம்பாய் அரசாங்க விருந்தினர் விடுதி நிர்வாகி; பரிசாரகர்கள் ஆகியோரைச் சாட்சிக்கு அழைப்பது. அவளை விபசாரத்துக்கு அழைத்ததே சந்திரசூரியன்தான் என்று வாதாடுவது.

எனது வக்கீலுடைய திறமையில் எனக்கு நம்பிக்கை உண்டு.

இரவு பதினொரு மணிக்கு அவருக்கு நான் டெலி:போன் செய்தேன். அப்போது அவர் நல்ல 'சுதி'யில் இருந்தார்.

"இந்த ஒரு வழக்கை வைத்து அரசாங்கத்தையே நாறடித்து விடுகிறேன்!" என்றார்.

"நானும் பத்திரிகைகளில் பரபரப்பை உண்டாக்கி அரசாங்கத்தையே கவிழ்த்து விடுகிறேன்" என்றேன்.

"நான் நாறடித்த பிறகு. நீங்கள் கவிழ்த்து விடுங்கள்!" என்றார்.

கவிழ்ந்த பிறகு நாறடிப்பது எப்படி?

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சந்திரபுஷ்கரணி என் கால்களைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

"என்னால் உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்?" என்றாள்.

"இந்த மாதிரிக் காரியங்களெல்லாம் இல்லையென்றால், ஒரு மனிதனின் சுயசரிதம் சுவையாக இருக்காது" என்றேன்.

"காந்திஜி தென் ஆப்பிரிக்காவில் இருந்து திரும்பிய உடனேயே, அவரது சுயசரிதம் சுவை இல்லாமல் போய் விட்டது. அது காங்கிரஸ், இயக்கத்தின் 'கெஜட்'டாகி விட்டது. ஆனால் சகல விதமான வாழ்க்கைப் போராட்டததிலும் அடிக்கடி பங்கு கொள்ளும் ஒருவனின் சுயசரிதமே சாகும் வரைக்கும் சுவையாக இருக்கும்!" என்றேன் மேலும்.

சந்திரபுஷ்கரணி என் அருகில் உட்கார்ந்தபடியே அனைத்தையும் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஆரோக்கியமான அரசியலை இந்தியா சந்தித்து வெகு காலமாகி விட்டது.

பதவிக்கு வரும் யாரும், 'தாங்கள் பொது நன்மைக்காகவே வருகிறோம்' என்று கருதுவதில்லை.

பதவியைப் பரம்பரையாகப் பட்டாப் போட்டுக் கொண்ட மிட்டா மிராசுகளின் வாரிசுகள் போல அவர்கள் காட்சியளிக்கிறார்கள்.

'இரும்பு பிடித்த கையும், சிரங்கு பிடித்த கையும் சும்மா இருக்காது' என்பார்கள்.

பதவிக்கு வந்தவனும் அப்படித்தான்!

பதவியில் இருக்கும்வரை வேண்டாதவர்களை ஆட்டி படைக்கவே அவன் ஆசைப்படுகிறான். ஜனநாயகம், ஜனங்களுக்காக இயங்கவில்லை!

அதிகாரத்துக்கு வந்துவிட்ட மமதையாளர்களைச் சுமப்பதுதான் மனிதர்களின் கடமை என்றாகிவிட்டது.

தேர்தல் என்பது மக்கள் தங்கள் சவக்குழியைத் தாங்ளே வெட்டிக் கொள்ளும் திருநாள். அந்தக் குழியை வெட்டும் மண் வெட்டிகளே, வாக்குச் சீட்டுகள்.

கற்பகமும் சந்திரபுஷ்கரணியும் படும் பாட்டை எண்ணியபோது, எனக்கு ஜனநாயகத்தின் மீதுதான் கோபம் வந்தது.

### கவியரசு கண்ணதாசன்

என் காலடியில் உட்காந்திருந்த சந்திரபுஷ்கரணி அழுதுகொண்டே இருந்தாள்.

பெண்களுக்கு ஆண்டவன் கண்களைப் படைத்ததற்கு இரண்டே காரணங்கள்தான். முதலில் ஆடவர்களைக் கவர்ச்சிக்க, பிறகு கண்ணீர் வடிக்க.

அழுகின்ற பெண்ணை முத்தமிடுவதிலே ஒரு சுகம் உண்டு; அதில் அவள் அழுகையும்நின்றுவிடும்.

(அந்தரங்கம் வரும்)

# 'வெளிநாட்டு வேலை!'

எனக்குள்ளாக தொடர்ந்து இருக்கின்ற மன உழைச்சல்தான் அது.... ஏன்தான் வெளிநாடு போகிறவர்கள் தாங்கள் தாங்கள் செய்கின்ற தொழிலை வெளியே சொல்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்களோ தெரியாது! நான் மட்டும் வெளிநாடு போய் தொழில் புரிய நேரிடும் காலத்தில் எனது தொழில் விடயத்தில் உண்மை கூற பின்னிற்க மாட்டேன்.

என்னுடைய நண்பன் கண்ணனும் இதே உறுதிப்பாட்டோடு ஃபிரான்ஸ் நாடு சென்று ஆறுமாத காலங்கள் ஆகிவிட்டன. அவனும் எனது நிலைப்பாட்டிலேயே உறுதியுள்ளவனாக இருப்பவன்.

கண்ணனும் நானும் உயர்ந்த வகுப்பில் கணிதப் பிரிவில் கல்வி பயின்றதனால் ஏற்பட்ட நட்பைக் காட்டிலும் அவன் பிற கல்வி முயற்சிகளுக்காக தலைநகர் சென்ற பின்னரும் தொடர்ந்த எமது நட்பின் அன்னியோன்யம் தான் எனது பெற்றோர்கள் கூட அவன் மேல் பாசத்தை சொரியும் அளவுக்கு நெருக்கத்தை வளர்ந்துவிட்டது.

இதன் காரணமாகவே நான் எனது பெற்றோருக்கு நெருக்குதலைக் கொடுத்து எங்கள் வீட்டுக்கு புதிய தொலைபேசி இணைப்பு ஒன்றினைப் பெறக் கூடியதாகவும் இருந்தது.

எனது தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு நான் அவனுக்கு எழுதிய கடிதம் இது வரையில் அவனுக்குக் கிடைத்திருக்கக் கூடும்....

அவனது தொலைபேசி அழைப்பு எந்த நேரமும் வரக்கூடும்....

இருளின் நிசப்தத்தை கலைத்த வண்ணம் தொலைபேசி அலாரித்தது..... ஆனால் அது கண்ணனின் அழைப்பு அல்ல.

அம்மா இரவு ஆகாரத்தை மேசைக்கு எடுத்துவிட்டு, அப்பாவையும் என்னையும் சாப்பிடும்படி வற்புறுத்தினார்.

சாப்பாட்டு மேசையிலிருந்த.... எனக்கு அதி விருப்பமான உணவு வகைகளில் கூட எனது மனம் இலயிக்கவில்லை.....

கையலம்பிவிட்டு சோர்வுடன் படுக்கைக்குச் சென்றேன். அரைத்தூக்கத்தில் ஆழ்ந்த சமயம், வீட்டில் ஏதோ பரபரப்பு....

"தம்பி, கண்ணாவின் தொலைபேசி அழைப்பு!" அம்மா என்னை துயிலெழுப்பினாள்.

ஆர்வத்துடன் ஓடிச் சென்று 'ரிஸீவரை'ப் பெற்றுக் கொண்டேன். கண்ணனேதான்!

"என்னடாப்பா, எங்கே இருந்து பேசுகிறாய்?" வினாவினேன்.

"நான் பாரீஸ் நகரில்....'ஈகிள் டவருக்கு' அண்மையில்... பிரதான வீதியொன்றின் 'பேவ்மென்ரில்' நின்ற வண்ணம் 'ஹாண்ட் ஃபோனில்' கதைக்கின்றேன்."

எனக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை! அமெரிக்க விண்கலம் சந்திரனில் தரை தட்டிய போது, அதில் பயணித்த விண்வெளி வீரர்கள் 'த ஈகிள் ஹாஸ் லாண்டட்' என்ற செய்தியை பூமியில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அனுப்பியபோது அங்கிருந்திருக்கக் கூடிய விஞ்ஞானிகள் எப்படி குதூகலித்திருப்பார்களோ அப்படியானதொரு மகிழ்ச்சி வெள்ளத்தில் நான் திக்கு முக்காடினேன்.

"என்னுடைய கடிதம் உனக்கு எப்போ கிடைத்தது? இப்போ உங்கு என்ன செய்கின்றாய்?" சந்தோஷ மிகுதியில் உரத்தே பேசினேன்.

அந்த சத்தத்தில் அப்பா தூக்கம் கலைந்து எழும்பி.... "யார்... எங்களுடைய கண்ணனா?" என்று அம்மாவை நெருங்கி கேட்டபடி, தொலைக்காட்சி பெட்டியை இயக்கி 'மியூட்டில்' வைத்து இரசிக்கத் தொடங்கினார். நேரம் சாமம் 12.30 மணி.

"உன்னுடைய கடிதம் போன கிழமையே எனக்கு கிடைத்துவிட்டது. 'பே ஃபோன் காட்' வாங்க கையில் காசு இல்லை. அதுதான் சுணக்கம். இப்ப சம்பளம் கிடைத்துவிட்டது.

சம்பளம் என்றவுடன் 'என்ன வேலை?' என்றுதானே நீ கேட்க முற்படுகிறாய். விபரமாகச் சொல்லுறன் கேள்.

அதற்கு முதல் நீ ஒரு முக்கியமான விடயத்தைத் தெரிந்து வைத்திருக்க வேணும். உன்னோடு தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருக்கின்ற நான், இடையிடையே பிரெஞ்சு மொழியில் வேறொருவருடன் உரையாடுவேன். அப்போ நீ 'லைனை' 'கட்' பண்ணாமல் பேசாமல் இருக்க வேண்டியதுதான். நான் எனது உரையாடலை முடித்த பின்னர் திரும்பவும் உன்னோடு கதைப்பேன்."

இப்போது நான் பேசினேன்...

"சரியடாப்பா.... இப்போ 'லைன்' தானாகவே 'கட்' ஆவதற்கு முன்பதாக, நீ என்ன செய்கின்றாய், சந்தோஷமாக இருக்கின்றாயா..... அதெல்லாவற்றையும் சொல்லன்!"

மீண்டும் கண்ணன் பேசினான்.....



"நான் இங்கு பத்துமாடி 'ஹோட்டல்' ஒன்றில் வேலை செய்கின்றேன். இதன் முதலாளி பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர். மாலை ஆறு மணிக்கு பிந்தாமல் வேலைக்கு வந்து விட வேண்டும். ஒன்பது மணியான மூன்று மணி நேரமும் வீதியோரங்களில் நின்று அந்த ஹோட்டல்' பற்றிய விளம்பர மடங்கிய 'பப்ளிஷ் மென்ட் காட்' ஐ வீதியால் வருவோர் போவோருடன் பிரெஞ்சு மொழியில் உரையாடி அவர்களுக்குக் கொடுக்க வேணும். இதில் பிரச்சனை என்னவென்றால் இது ஒரு தடை செய்யப்பட்ட நடவடிக்கை. இதனால் பொலிஸ்காரரும் ஓ.ஐ.டி காரரும் எப்பவும் என்மேல் பாயலாம். அந்த விடயத்தில் நான் கவனயீனமாக இருந்து பிடிபட்டால் அதற்கு பொறுப்பு நான்தான். முதலாளி பொறுப்பு வகிக்க மாட்டார்.

'பப்ளிஷ் மென்ட் காட்' விநியோகிக்கின்ற கடமையில் தான் நான் இங்கே ஈடுபட்டிருக்கின்றேன். நான் ஏன் இடையிடையே பிரஞ்சு மொழியில் உரையாடுகின்றேன் என்பது இப்போ உனக்கு விளங்கியிருக்கும்.

**திருமலை வீ.என்.சந்திரகாந்தி**

இப்போ இங்கு எட்டு மணி. நான் வீதிக்கு மறுபுறத்தில் இருக்கின்ற 'ஹோட்டலுக்கு' போய்க் கொண்டிருக்கின்றேன். மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் முதலாளியைப் போய்ச்சந்திக்க வேணும். 'ஹோட்டலில்' 'கிறவுட்' சேர்ந்திருந்தால் மீண்டும் தெருவீதிக்கு 'பப்ளிஷ்மென்ட் காட்' விநியோகிக்க போகத் தேவையில்லை. ஆனால் உணவு பரிமாறுகின்ற வேலையை பாரம் எடுக்க வேணும்.

இப்போ முதலாளிக்கு அண்மையில் வந்து விட்டேன். தொடர்பை துண்டித்து விட்டு மீண்டும் எடுக்க முயற்சி செய்கிறேன்."

தொடர்பு துண்டிக்கப்பட்டதும் அம்மாவும் அப்பாவும் கண்ணனின் சுகம் பற்றியே கவலை கொண்டு விசாரித்தார்கள்.

"பணிவும் பயந்த சுபாவமும் உள்ள பிள்ளை. எப்படி சமாளிக்கப் போகுதோ தெரியாது பாவம்!" அம்மா கவலையை வெளிப்படுத்தினாள்.

மீண்டும் தொடர்பு ஏற்பட்டது....

"இங்கு இப்போ சரியான குளிர் காற்று வீசி அடிக்கின்றது. உனக்கும் கேட்கக் கூடியதாக இருக்கும்...." ஒரு கட்டட மறைவில் நின்று பேசுவதால்தான் உனக்கு கேட்கக் கூடியதாய் இருக்குது."

நான் கேட்டேன்..... "என்ன மச்சான் ஒரு 'அம்புலன்ஸ்' சத்தம் மாதிரி ஏதோ கேட்கின்றது?"

அவன் கூறினான்....

"அது அம்புலன்ஸ் இல்லை. பொலிஸ் வாகனம் ஒன்று நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது.... அது பரவாயில்லை. உன்னை நான் எப்படியும் பிரான்ஸ்சுக்கு எடுப்பன். நீ யோசிக்காதை!"

திடீரென்று தொடர்பு துண்டிக்கப்பட்டது. நிமிடங்கள் மணித்தியாலமாகின... என்து அன்பு நண்பனுக்கு என்ன நேர்ந்திருக்கக் கூடும்? அறிமுகம் இல்லாத அன்னிய தேச்ம்.... வேவு பார்க்கும் உளவுப் பிரிவு..... -துரத்தும் நகர் காவல் படை

எனது நண்பனின் உற்சாகமான குரல் என்னை விட்டு ஆயிரமாயிரம் 'கிலோ மீட்டர்' தூரம் விலகிச் செல்கின்றது.... எனது இதயம் கனக்கின்றது. கண்கள் பனிக்கின்றன.

அம்மா பரிவுடன் கேட்கின்றார்... "கண்ணன் என்ன வேலையாம் தம்பி பார்க்கிறான்?"

ஒரு கணம் யோசிக்கின்றேன். எவரும் எப்படியும் கதைக்கலாம் விமர்சிக்கலாம். ஆனால் அனுபவித்துப் பார்க்கும் போதுதான் தாக்கங்களை புரிந்து கொள்ள முடியும்!

நானும் வெளிநாடு செல்ல ஏற்படலாம்.... மனச் சாட்சியை குழி தோண்டி புதைத்து விட்டு தயக்கமாக கூறுகின்றேன்....."பிரபல நிறுவனமொன்றில் 'டிபுட்டி மனேஜர்'!"

# 'நிலம் போன்றவள்....'

தோப்பூரிலிருந்து மோட்டார் சைக்கிளில் வரும்போதே தூரத்தில், பாலத்தோப்பூர் சந்தியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தவளைக் கண்டுகொண்டான். மூன்று மாதங்களுக்கு முன்னதாக இடமாற்றம் கிடைக்கப் பெற்று கற்பித்த பாடசாலையை விட்டு வந்ததன் பின்னர் இன்றுதான் காணக் கிடைத்தது. மூதூர் ஜெற்றியை நோக்கி வேகமாக போய்க்கொண்டிருந்த உஹ்ரோ ஹொண்டாவின் வேகத்தைக் குறைக்குமாறு தன் நண்பனுக்குக் கட்டளையிட்டான்.

"என்ன டீச்சர் ஜெற்றிக்கா...? இதுக்குப் பிறகு பஸ் போக்குவரத்தைச் சொல்ல முடியாது!"

மெல்லிதாகவே சிரித்துக் கொண்டாள், வழமைபோல.

"நாங்களும் ஜெற்றிக்குத் தான் போறம். வாரதென்றால்..."

என்னே முட்டாள்தனமான கேள்வி! தெரிந்திருந்தும், எப்படியாவது உதவி செய்தாக வேண்டுமென்ற எண்ண மேலீட்டினால் பெரிதாக வேறு எதனையும் பொருட்படுத்தக் கூடிய நிலையிலில்லை. பொருத்தப்பாடற்ற வார்த்தைகளைக் கேட்ட நண்பன் தர்ம சங்கடத்திற்குள்ளாகி நெளியத் தொடங்கினான்.

"கூழை மாதிரி கதைக்கிறியே...? ரெண்டு ஆம்பிளைகளுடன் ஒரு பொம்பிளை எப்படி...?" மெல்லிதாகவே காதில் கிசுகிசுத்தான்.

நண்பனின் ஆதங்கத்தைக் காதில் வாங்கிக் கொண்டதாகவும் தெரியவில்லை. நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி ஆசிரியையை அண்மித்துக் கொண்டே,

"பஸ் கிடைக்காவிட்டால் என்ன செய்வீங்க...?"

எப்படியும் இன்று பஸ்கிடைக்காமல் தான் போகும். வீணே தடுமாறுவாள் என்ற கவலை. திரும்பவும் சொந்தக்கிராமத்திற்குப் போவதென்றால் எப்படியும் மூன்று நாலு கிலோ மீற்றர் தூரமாவது போகவேண்டும். மாலை நான்கு மணிக்குப் பின்னர் கிராமத்திற்குச் செல்வதற்கு எந்தவிதமான வாகனப் போக்குவரத்தும் கிடையாதென்பதை தெரிந்திருந்தான். இருட்டுப்பட்டால் ஊருக்குள்ளே செல்வதற்கு இராணுவத்தினர் விரும்பவே மாட்டார்கள். தனது முஸ்லிம் பகுதியிலும் திடீரென்று தங்கி போகக்கூடிய சூழ்நிலை இன்னும் தோன்றவில்லை.

"இன்னும் சற்று நேரம் பார்த்திட்டு, ஓட்டோ பிடிச்சுக்கொண்டாவது ஜெற்றிக்கு போக வேண்டியதுதான்."

"ஓமோம்! இப்போ நிரந்தர டீச்சர் வேலைதானே..? வசதிக்கேற்ற வாழ்வு!"

வார்த்தைகளில் தொனி திருப்தியாக இல்லை. தேவைக்கு மேலாக ஏதும் பேசிக் கொள்ளும் சுபாவம் இல்லாமையினால் பதிலுக்கு மெல்லிதாகவே சிரித்தாள். உடன் வந்த நண்பனின் நச்சரிப்புகளும், கண்டிப்பாக திருமலை போயேயாக வேண்டிய நிர்ப்பந்தங்களும் திருப்தியற்ற நிலைமையில் பஸ் சந்தியைவிட்டு விலகச் செய்தது. திரும்பி வரும்போது நின்றால் கண்டிப்பாக உதவ வேண்டுமென்ற உறுதியை நண்பனிடமிருந்து பெற்றுக்கொண்ட திருப்தியவனுக்குள்,

திருகோணமலை உட்துறைமுக வீதி பொலிஸ் நிலைய எல்லையைக் கடந்து, வெளியே பிரதான வீதியின் ஓரத்தில் ஓட்டோவுக்காகக் காத்திருந்த வேளையில் கவனித்தான். எல்லோருக்கும் பின்னால் கப்பலில் இருந்து இறங்கி கடைசியாகவே வந்து கொண்டிருந்தாள். தனது பயணத்தைச் சற்று தாமதப்படுத்திக் கொண்டான்.

"ஒரு மாதிரியாக வந்து சேர்ந்துட்டீங்க....!"

சிரித்துக்கொண்டாள்.



"இப்போ எந்தப் பாடசாலை தந்திருக்காங்க...?"

பிடிப்பில்லாத வார்த்தைகளைக் கேட்டதும், சட்டென்று தலைநிமிர்ந்து முகத்திற்கு நேரே ஏறிட்டுக்கொண்டாள். பார்வையின் மறுபக்கம் திருப்தியாக இல்லை. கண்களில் பளிச்சிட்ட மின்னல் எதையோ சொல்லத் துடிப்பதையுணர்ந்து கொண்டான்.

"எனக்கு வேலை கிடைக்கவில்லை!" நேரடியான பதில்.

பளிச்சென்ற வார்த்தையினால் ஆச்சரியத்தைவிட தடுமாற்றமே மேலோங்கியது. வரண்ட வார்த்தைகளைவிட பார்வையின் தாக்கம் ஜீரணித்துக்கொள்ளக்கூடியதாக இல்லை. மனப் புழுக்கங்களைப் புரிந்து கொள்ள பழகிக் கொண்டான்.

"எப்படி...?"

"எப்படி என்றால் என்ன சொல்வது...? கிடைக்கவில்லை!"

"எல்லா இன்டர்வியூக்களுக்கும் போய்...!"

"எனக்கு தகுதி இல்லை போல..." தூரே, கடற்பரப்பைப் பார்வையினால் வெறித்துக் கொண்டாள்.

"இது மோசம்! கேட்டதைவிட ஏழு வருடங்கள் மேலதிகமாக தொண்டராக சேவை செய்திருக்கீங்க. இன்னும் ஏ.எல். நான்கு பாடத்திலும் திறமை சித்தி இருக்கு. பின்னே ஏன்....?"

"..............................."

"சம்பந்தப்பட்டவர்களை சந்தித்து கேட்டுப்பார்த்தீங்களா...? சில வேளைகளில் தவறுதலாக ஏதும்...!"

"சாதாரணமாகக் கேட்டுப்பார்த்தாச்சு. ஒபீஸ் ஆக்களிலும் பிழை சொல்லக் கூடியதாக ஏதுமில்லை. இப்போ எல்லாம் பொலிட்டிக்கல் ஆயிடுச்சு. எந்தவித உதவிகளுமற்ற எங்க பாடுகள்தான் கஸ்டம். என்ன செய்திட முடியும்...?"

வார்த்தைகள் பரிதாப உணர்வை மேலிடச் செய்தது. பறிபோன வேலை கிடைத்திட ஏதாவதொரு வழியில் உதவி புரிய வேண்டுமென்ற ஆவல் பெருக்கெடுத்தது.

"வார புதன் கிழமை காரியாலயம் வாங்க. நானும் வாரன். பெரியவர் எனக்கு ரொம்ப வேண்டியவர்தான். முதல்ல கொடுத்த நியமனத்தை மீள் பரிசீலனை செய்யும்படியாக ஒரு முறைப்பாடு கடிதம் எழுதிப் போடுங்க. மற்றதையெல்லாம் நான் கவனிச்சுக்கொள்றன்!"

சட்டென்று நிமிர்ந்து எதிரே ஏறிட்டுக் கொண்டாள்.

"வேண்டாம் விட்டு விடுங்க. நான் கொடுத்து வைக்கவில்லையென்று நினைச்சுக் கிட்டுப்போறன்."

"இது நல்லதாக இல்லை. உங்களுக்கு கிடைக்க வேண்டிய வேலை கிடைத்திட நான் பொறுப்பு. ஊர் பிள்ளைங்களோட கல்வி முன்னேற்றத்திற்காக படுகிற கஸ்டங்களையெல்லாம் கண்ணால் கண்டவன் நான். நல்லதான இலட்சியம் உள்ளவங்களுக்கு ஆசிரியர் வேலை கிடைத்தால் வேலைக்கும் ஒரு கௌரவம்!"

"இல்லை வேண்டாம். வீண் பிரச்சனைகள் ஏதும்..."

"இப்படி பயந்து ஒதுங்கிப் போவதனால் தான் உங்களைப்போன்றவர்களுக்கு நியாயமா கிடைக்க வேண்டியதுகள் இல்லாமற் போகுது. ச்சே!"

சற்று மௌனமாகிக் கொண்டாள். தலை குனிந்து கொண்டிருந்தவள் நிமிர்ந்ததும், எதிரே நின்றவன் தடுமாறிக் கலங்கிப் போனான். கன்னங்களில் கண்ணீர்க்கோடுகளைக் கண்டான். வீணே ஒரு மெல்லிய உள்ளத்தை உடைத்து விட்டோமே என்ற வேதனையுடன். பதிலுக்காகக் காத்திருந்தான். ஒரு தீர்க்கமான முடிவுடன் கண்ணீரைத்துடைத்துக்கொண்டு, மீண்டும் எதிரே நின்றவனை முகத்திற்கு நேரே ஏறிட்டு,

"இன்னொரு பெண் வாழ்க்கை வீணாவதை விரும்பவில்லை. பிளீஸ் விடுங்க!"

"..............................."

"எனக்குத்தான் என்று நான் முடிவா செயற்பட்டிருந்தால் கிடைச்சிருக்கும். இந்த வேலைக்காக செலவுகள் செய்து கஸ்டப்பட்டு படிச்ச காலத்தை மினக்கெடுத்தியது என்னவோ உண்மைதான். நடந்த விசயங்களை தெரித்து கொண்டதன் பின்னர் நானாகவே ஒதுங்கிக் கொண்டேன்."

"புரியக் கூடியமாதிரியாக இல்லையே...?"

"எங்கட சின்ன பாடசாலை. ஒதுக்கப்பட்டிருந்த வெற்றிடம் ஒன்றுதான். கூடவே தொண்டராக மூணுவருசத்திற்கு முன்னர் வந்த வித்தியாவுக்கு கிடைத்ததினால் நிற்று போன கல்யணம் நிச்சயமாயிடுச்சு. நிரந்தர தொழில் இல்லாமையினால் இழுபறி நிலைமையிலிருந்த ஒரு பெண்ணோட கல்யாணத்திற்கு என்னால உதவ முடிஞ்சதை பெருமையாக நினைக்கிறன். வேலை கிடைத்த சில நாட்களுக்குள்ளேயே செல்வாக்கைப் பயன்படுத்தி மாறறல் வாங்கிக் கொண்டு, இங்க டவுண்லதான் ஏதோ ஒரு பாடசாலையில...." மேற்கொண்டு பேச முடியாதவாறு துக்கம் தொண்டையை இறுக்கிக் கொண்டது.

"உங்கட வாழ்க்கை...? தம்பி தங்கச்சிகளோட வயசுபோன தாய் தகப்பனையும் வைச்சுக்கொண்டு குறைந்த சம்பளத்தில்....."

"நம்ம கையில என்ன இருக்கு? என்ட கிராமத்து பிள்ளைங்க நல்லா படிச்சு முன்னுக்கு வரவேண்டும். என்னால உதவ முடிஞ்சா திருப்தி. என்னோட இலட்சியம் ஆசைகள் எல்லாமே பிள்ளைங்களோட எதிர்கால வாழ்வுதான்!"

"வசதியாக வாழ்ந்த நீங்க எல்லா வன்செயல்களிலும் பாதிக்கப்பட்டு, இப்போ கஸ்டமானதொரு காலத்திலும்...."

"பாதிக்கப்பட்டுக் கொண்டதினால் என் வாழ்வு பாழ்பட்டுப் போகவில்லை. இந்த நியமனம் கிடைத்திருக்காவிட்டால் ஒரு பெண்ணோட வாழ்வு சீரழிந்திருக்கும். என்னைப் பொறுத்தளவில் நல்லது செய்திட்ட திருப்திதான்."

பலாத்காரமாக புன்னகைத்துக் கொண்டாள். பின்னர்,

"இப்போ வயசு 37. இன்னுமொரு இன்டர்வியூ வராமலா போகும்." பெருமூச்சுடன் கூறிக்கொண்டாள். என்ன சொல்வதென்று ஏதும் புரியாது தடுமாறிக் கொண்டான். ஒருவேளை எடுத்த தீர்மானம் சரியானதாகவும் மனிதாபிமானமுள்ளதாகவும் கூட இருக்கலாம். திருப்திப்பட்டுக்கொண்ட வழியில் மீண்டும் குறுக்கீடு செய்து குழப்ப இஸ்டப்படாமையினால், மனிதத்தைப் புரிந்து கொண்ட நிலைமையில் வல்ல நாயனை மனதார வேண்டிக்கொண்டான்.

"யா ரஹ்மானே! இன்னுமொரு பரிதாபத்திற்குரியவர் திரும்பவும் பதவியை எடுத்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்!"

**இளையவன்-திருகோணமலை.**

## ரசிக்கின்ற துன்பம்.....

## இனிக்கின்ற கவலை...



மூலஸ்தானத்திலிருந்து ஆண்டவரை வணங்கிவிட்டு கோவில் பிரகாரத்தைச் சுற்றிவரலாம் என்று நடக்க ஆரம்பித்த மாலதி, கோவிலின் இடது மண்டபத் தூணருகே துவண்டு படுத்திருந்தவளைக் கண்டு திடுக்கிட்டாள்.

பாவடை சரசரக்க விரைந்து நடந்து அருகே சென்றாள். நெற்றுக்கு விதை உருவிய பயிற்றங்காய்த் தோலென தோய்ந்து படுத்திருந்தாள் துவாரகா.

கையைத் தலைக்கு வைத்து உடல் வெளிறி வாடிக்கிடந்த அவளைச் சட்டென அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை மாலதிக்கு.

"என்னடி இது, இங்கே படுத்திருக்கிறாய்?" என்று பரபரத்தவள், கீழே அமர்ந்து அவள் தலையைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டாள்.

துவாரகா கண்கள் நீர் உகுத்தபடி இருந்தன. "இதென்ன கோலமடி! நேற்று நன்றாகத்தானே இருந்தாய்.... ஓரிரவுக்குள் எப்படி உன் உடலைப் பாதியாய்க் குறைத்தாய்? சொல்லடி என்ன நடந்தது?"

"நேற்றுத்தான் அவன் என்னைவிட்டுப் போனான்!"

"என்னடி சொல்கிறாய்? என்ன இது வெட்கமே இல்லாமல் வெறும் தரையில் படுத்துக் கொண்டு....."

"எட்டடுக்கு மாளிகையில் ஏற்றிவைத்த என் தலைவன் விட்டு விட்டுப் போனானடி.... நான் வெட்கம் விட்டு நின்றேனடி...."

"ம்.... பாடினது போதும். முதலில் எழுந்திரு!" அவளை உலுக்கி எழுப்பி உட்காரவைத்தாள் மாலதி. சிறிது நேரம் அவளையே ஏற இறங்கப் பார்த்தாள். துயரம் மேலிடக் கேட்டாள்.

"அவன் போனால் உனக்கென்ன வந்தது? ஏன் இப்படிச் சுடுதண்ணி ஊற்றின ரோஜாச் செடிபோல வதங்கிக் கிடக்கிறாய்? கூச்சமும் தொலைந்து குறுநகை தொலைத்து உடம்பின் ஒளிவீச்சையும். இழந்து.....இதென்ன இது என்னால் உன்னைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை...."

துவாரகா சிரித்தாள். கைத்த குரலில் சொன்னாள். "என்னிடமிருந்த சாரமெல்லாவற்றையும் ஒருவன் உருவிச் சென்றபிறகு, இது காற்றைக் கழற்றிவிட்ட பலூன்.... சாறை உறிஞ்சி விட்ட சக்கை....."

"எங்கே போனான் சொல். நான் சென்று அவனிடம் பேசுகிறேன்!"

"என்ன பேசப் போகிறாய்?"

"அவன் யாராகவும் இருக்கட்டுமே. என் சிநேகிதியின் நலம் யாவற்றையும் உறிஞ்சிச் சக்கை பிழிந்துவிட்டுப் போக அவன் யார்? உன்னை இப்படி வாடிச் சோர விட்டுப் போக அவனுக்கென்ன உரிமை?"

"அவன் எங்கேயடி எடுத்தான்? என் பெண்மை நலங்கள் யாவையும் நானாகத்தானே அவனிடம் அள்ளிக் கொடுத்தேன். அவனை விட்டு நீங்கினால் நான் வெறும் சக்கைதான் என்பது நான் விரும்பி எடுத்துக் கொண்ட நிலைதானே....."

மாலதி அவளை இரக்கத்துடன் பார்த்தாள். "அப்படித் தான் இருக்கட்டுமே. கொடி படரக் கொழுகொம்பாய் வந்துநின்றபின், கொடியைத் துவளவிட்டுக் கொம்பு பறந்துபோக என்ன நியாயம்? என்னைத் தடுக்காதே. நான் அவனிடம் சென்று பேசத்தான் போகிறேன். என் தோழியிடமிருந்து நீ உறிஞ்சிச் சென்ற நலங்கள் யாவற்றையும் திருப்பித் தந்துவிடு என்று அவனை மிரட்டினால்தான் சரிவரும்...."

"நானாக விரும்பிக் கொடுத்த ஒன்றை எப்படியடி திருப்பிக் கேட்பது?

வறுமையில் வாடுகின்ற ஒருவனுக்கு, மனமுவந்து சில பொருட்களைத் தானமாகத் தருகிறோம் என்று வைத்துக் கொள். இதனால் நாம் நொடிந்துப் போனால், உடனே அவனிடம் சென்று, கொடுத்ததைத் திருப்பித் தா என்று கேட்பது என்னடி நியாயம் அப்படிக் கேட்பதை விட உயிரை விடுதல் மேலானதன்றோ!

இதோ, இப்படி என்னை வாடவிட்டு, தொலைதேசம் அவன் சென்றிருக்கிறானே.... இது மலையினும் மாணப் பெரிய துன்பம் தான். அந்தச் சித்திரவதைத்தான் நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேனே.... இந்தத் துயர் மகா கொடுமை தான். ஆனாலும், நான் கொடுத்ததைத் திருப்பிக் கேட்பதென்பது துன்பத்துள் எல்லாம் பெரிய துன்பமாகும். தோழி, எனக்காகக் கோபம் கொள்வதை விடு, என் பெண்மை நலம் அனைத்தையும் அவனிடம் கொடுத்துவிட்டு, நான் படும் இந்தத் துன்பம் இருக்கிறதே.... இது நான் ரசிக்கின்ற துன்பம்.... இனிக்கின்ற கவலை!"

### இலக்கிய நயம்

**அடும்பு அவிழ் அணி மலர்**
**சிதைகி மீன் அருந்தும்**
**தடந்தாள் நாரை/ இருக்கும் எக்கர்த்**
**தண் அம் துறைவன்**
**தொடுத்து நம் நலம்**
**கொள்வாம் என்றி தோழி!**
**கொள்வாம்;**
**இடுக்கண் அஞ்சி**
**இரந்தோர் வேண்டிய**
**கொடுத்தவை தா**
**என் சொல்லினும்**
**இன்னாதோ நம்**
**இன்னுயிர் இழப்பே.**

(குறுந்தொகை 349 )

தருவது முழடில்யன்

## ஸ்போர்ட்ஸ்

### கிரிக்கெட் சாதனைகள்



பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் வாசிம் அக்ரம் மட்டும் தான் ஷார்ஜா மைதானத்தில் இரண்டு தடவைகள் ஹட்-ட்ரிக் எடுத்துள்ளார். முதல் முறை 14ம் திகதி ஒக்டோபர் மாதம் 1989ல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராகவும், இரண்டாவது முறை 4ம் திகதி மே மாதம் 1990 அவுஸ்திரேலியாவுக்கு எதிராகவும் ஹட்-ட்ரிக் எடுத்து சாதனை புரிந்துள்ளார்.

மிக இளம் வயதிலேயே டெஸ்ட்போட்டி ஒன்றுக்குத் தலைமை தாங்கியவர் இந்தியாவின் டைகர் பட்டௌடி. இவர் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக 1961-62காலப் பகுதியில் பிரிட்ஜ் டவுனில் நடந்த போட்டிக்குத் தலைமை தாங்கினார். அப்போது பட்டௌடிக்கு வயது 21 வருடங்களும் 77 நாட்களும் மட்டுமே.

ஒரு வருடத்தில் அதிக டெஸ்ட் ஓட்டங்களைக் குவித்த சாதனையாளராகத் திகழ்பவர் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் கப்டன் விவியன் றிச்சாட்ஸ். இவர் 1978ம் ஆண்டு 11 டெஸ்ட்போட்டிகளில் விளையாடி 1710 ஓட்டங்களைக் குவித்திருக்கிறார்.

பாகிஸ்தானின் லாகூரில் 1954-55 காலப் பகுதியில் நடைபெற்ற இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் 328 ஓட்டங்களை எடுத்தது. இந்த 328 ஓட்டங்களுக்குள் உதிரி (எக்ஸ்ரா)வாக இந்திய அணியில் ஒரு ஓட்டம் கூட விட்டுக் கொடுக்கப்படவில்லை.

டெஸ்ட் போட்டியொன்றில் ஸ்டம்ப் செய்து அதிக விக்கெட்டுக்களைச் சாய்த்தவர், இந்திய அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் கிரண் மோரே. இவர் 1987-88ல் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் போட்டியில் 6 மேற்கிந்தியத்தீவு வீரர்களை ஸ்டம்ப் செய்து அவுட்டாக்கினார்.

## லாரா அமர்நாத் மறைவு

சுதந்திர இந்தியாவின் முதல் கிரிக்கெட் கப்டனும் சகலதுறை ஆட்டக்காரருமான லாலா அமர்நாத் இம் மாதம் 5ம் திகதி காலமாகிவிட்டார். இந்திய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதல் சதத்தை அடித்த வீரரும் லாலா அமர்நாத் தான்.

11.08.1911ல் லாகூரில் பிறந்த லாலா அமர்நாத் இறக்கும் போது அவருக்கு வயது 89. அமர்நாத்திற்கு 3 புதல்வர்கள். இவர்களில் மூத்தவர்களான சுரீந்தர் அமர்நாத்தும், மொஹிந்தர் அமர்நாத்தும் இந்திய அணிக்காக விளையாடியவர்கள். மூன்றாவது புதல்வரான ரஜிந்தர் அமர்நாத் இந்திய முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வருகிறார்.

சிறந்த கிரிக்கெட் வீரர் மட்டுமல்லாது சிறந்த கிரிக்கெட் வர்ணனையாளருமாக விளங்கிய லாலா அமர்நாத் 24 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். 1933-34ல் மும்பாயில் இங்கிலாந்துக்கெதிராக நடந்த முதல் டெஸ்டிலேயே சதமடித்தார். உலகிலேயே முதல் போட்டியிலேயே சதமடித்த கப்டன் இவர் ஒருவர்தான்.

முதல் டெஸ்ட் போட்டியிலே லாலா அமர்நாத் சதமடித்தது போன்று அவரது மூத்தமகன் சுரீந்தர் அமர்நாத்தும் தனது முதல் டெஸ்டிலேயே சதமடித்துள்ளார். 1976-77ல் நியூஸிலாந்திற்கெதிராக ஒகடலான்டில் சுரீந்தர் சதமடித்தார்.

இதன்மூலம் முதல் டெஸ்ட் போட்டியிலே சதமடித்த தந்தை-மகன் என்ற சாதனையையும் இவர்கள் படைத்துள்ளார்கள்.

லாலா அமர்நாத் 34 டெஸ்ட்போட்டிகளில் கலந்துகொண்டு 878 ஓட்டங்களையும் 45 விக்கெட்டுக்களையும் எடுத்துள்ளார்.

## சிந்தியா பதில்கள்

★ **சிந்தியாவுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா?**

டேவிட் மொரின், கொட்டகலை.

ஒருவேளை இருந்துவிட்டாரென்றால்? 'இல்லை' என்று சொல்லி ஏன் வீணாக அவர் கோபத்தைச் சம்பாதித்துக் கொள்வான் என்ற பயம் உண்டு. அதேசமயம், கடவுளை முட்டாள்தனமாக நம்புவதில் உள்ள ஆபத்தைச் சொல்ல ஒரு குட்டிக்கதை உண்டு:

அன்று சம்பளதினம். அலுவலகத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்த ஒருவர், வழியில் இருவர் தனியாக நின்று பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டார். "கடவுளைக் காண முடியுமா?" என்று ஒருவன் கேட்க, "முடியும்!" என்றான் மற்றவன், "சேர்ட்டைக் கழற்றிவிட்டு வெறும் உடம்புடன், அதோ பார், அந்த வில்வமரம் இருக்கிறதே... அதன் கீழ் நின்று மேலே பார்த்தால் சூலத்தின் வடிவில் ஒருகிளை தெரிகிறது. அதனூடாக ஆகாயத்தைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிரு, கடவுள் தெரிவார்!" என்றான்.

அவனும் அவ்வாறே போய்ப் பார்த்து விட்டுப் பிரகாசமான முகத்துடன் திரும்பினான். இவனின் கைகளைப் பற்றிக் கொண்டு நன்றி நிரம்பிய குரலில், "நீங்கள் என் கண்ணைத் திறந்துவிட்டீர்கள்.... எப்படிச் சொல்வேன் அந்த ஆனந்தத்தை. கடவுளை நன்றாகப் பார்க்க முடிந்தது" என்று கண்கள் பனிக்கச் சொன்னானாம். அலுவலகத்திலிருந்து வந்து இதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டுநின்றவர், ஆர்வமிகுதியால் அவனிடம் சென்று, சேர்ட்டைக் கழற்றிக் கொடுத்து விட்டு, வில்வமரத்தின் கீழ் போய் அண்ணாந்து வானத்தைப் பார்த்தார். காகக் கூடுகளையும் இலைகளையும் தவிர வேறு எதுவும் தெரியவில்லை. திரும்பிப் பார்த்தால் இருவரையும்காணோம். இவரது சேர்ட்டையும் காணோம். சேர்ட்டுக்குள் அந்த மாதச் சம்பளம்....

★ **ரூபா நாணயக் குற்றிகளை ஏன் வட்டமாகச் செய்கிறார்கள் என்று தெரியுமா சிந்தியா?**

வி.உலகநாதன், யாழ்ப்பாணம்.

ஐந்து சதக் குற்றிகள் புழக்கத்தில் இருந்த காலத்தில் உலகநாதன் பிறக்கவில்லைப் போலிருக்கிறது. போகட்டும். நாணயங்களைப் பதுக்கி வைத்திருக்கக் கூடாது. அது உருண்டோடிப் பலருக்கும் பயன்பட வேண்டும் என்றுதான் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று நான் சொன்னால், உடனே, "அப்ப ரூபா நோட்டுக்களை அடுக்கிப் பெட்டியில் பூட்டி வைத்துக் கொள்ளலாமா?" என்று நீங்கள் கேட்கக் கூடாது.

★ **எப்போதும் மற்றவர்களைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பவர்கள் பற்றி...?**

இலங்கேஸ்வரி மருதை, அக்கரப்பத்தனை.

எப்போதும் தங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பவர்களை நாம் சகித்துக் கொள்வது, இவர்களும் இருப்பதால்தானே!

★ **நீங்கள் பதிலாகக் கூறும் குட்டிக் கதைகளை இன்னொரு தமிழ் வார இதழில் ஒருவர் உடனுக்குடன் பதிவு செய்கிறாரே... அவருக்கு சிந்தியா என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

எஸ், சுந்தரி, வத்தளை.

நான் சொல்லும் குட்டிக் கதைகளும், எனக்கு முன்பு வேறு யாரோ சொல்லியவை தான்!

★ **நம் நாட்டு தனியார் வானொலிகள் பற்றி...?**

மொஹமட் இர்ஹாம், காத்தான்குடி-05.

மூதறிஞர் ஒருவர் சொன்ன வாக்கியத்தை நினைவு படுத்துகிறார்கள். "இந்த இளைஞர்களின் பேச்சு எவ்வளவு இனிமையாக இருக்கிறது! அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று நமக்குக் கேட்காதவரை!"

★ **தினமுரசு இதழின் அபார வளர்ச்சியின் இரகசியம் என்ன?**

ஜவாத், புத்தளம்.

சூடு, சுவை, சுவாரசியம்!

★ **ஹோம்ஸிக்கால் அவஸ்தைப்படாதிருக்க என்ன செய்ய வேண்டும்?**

என்.விஜயகலா, திருகோணமலை.

நத்தையாகப் பிறந்திருக்க வேண்டும்.

★ **ஆண்கள் பெண்களை விரும்புவது அதிகமா, பெண்கள் ஆண்களை விரும்புவது அதிகமா? பதில் தெரிந்தும் கூறாவிட்டால்....!**

ப.ரவீந்திரகுமார், ஊர்காவற்றுறை.

ஆண்களால் அதிகமாக விரும்பப்படும் பெண்கள், அதிகமாக விரும்புவது ஆண்களை! ம்... முருங்கை மரத்தில் மீண்டும் ஏறிக்கொண்டீர்களா....!



★ **தீர்வுப் பொதியை சிங்களத் தீவிரவாதிகளும் எதிர்க்கிறார்கள்; தமிழ்க் கட்சிகளும் எதிர்க்கின்றனவே...?**

கே.ஜெகன், திருமலை.

சிங்களப் பகுதியினர் எதிர்ப்பது இயல்பு. தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை, ஒரு வழி; வத்தலோ சொத்தலோ கிடைக்கும் தீர்வினை எடுத்து நடைபெறும் யுத்த அரசியலின் திசையை மாற்றுவது. தொடர்ந்த செயற்பாட்டில் நமக்குத் தேவையான அதிகாரங்களைக் கூட்டிக் கொள்வது. இரண்டாவது வழி: இப்போதுள்ள சிங்கள பௌத்த இனவாத அரசியலில் அதிகாரங்களைப் பரவலாக்குவது சாத்தியமாகாது. எனவே, ஆயுதமேந்திப் போராடுவது. மூன்றாவது வழி: அரசியல் தீர்வு, ஆயுதப் போராட்டம் என்று 'ரிஸ்க்'குகளில் மாட்டிக் கொள்ளாது, எல்லாவற்றையும் பழித்தபடி, புலிகளின் சண்டையில் குளிர்காய்ந்து, பாராளுமன்றக் கதிரைகளில் சூடேற்றிக் கொண்டு... ஹையா!

★ **நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தை நிறுத்துவதற்கு சிந்தியாவிடம் நல்ல ஐடியா ஏதேனும் உள்ளதா?**

சிவம் ஜெகஜோதி, தலவாக்கலை.

மிகவிரைவாக யுத்தத்தை முடிக்க வேண்டுமா? தோற்றுவிடுங்கள்! ஐடியா உபயம்! ஜோர்ஜ் ஆர்தல்.

★ **நடிகர் விஜய்யின் 'வெப்சைட்' முகவரியைத் தரமுடியுமா?**

எஸ்.கௌரி, கொழும்பு-06.

w.w.w.ilayathalapathy.com

★ **எனது அபிமான நடிகை சிம்ரன் பற்றி...?**

எஸ்.ரவி, பிரதான வீதி, பண்டாரவளை.

ரவியைப் போலவே சிம்ரன் பற்றிய கேள்விகளை வவுனியா ஆர்.வசந்தன், திக்குவல்லை ஐ.அஸ்மி அஹமட் ஆகியோரும் கேட்டிருக்கிறார்கள்.

நடன சுந்தரனாரின் காம்பற்றி தமிழக மாட்டுப் பெண்ணாக வரவிருக்கும் இந்த வழவழ இடைச் சுந்தரி பஞ்சாபைச் சேர்ந்தவர். சொந்தப் பெயர் ரிஷிபாலா. படித்துக் கொண்டிருந்தபோது இவர் கலந்துகொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சியான 'சூப்பர் ஹிட் முகாபுலா' வின் தயாரிப்பாளர்கள் இவருக்கு வைத்த பெயர்தான் சிம்ரன். சினிமாவில் அறிமுகமாகியது அமிதாப்பச்சன் தயாரித்த படமான 'தேரே மேரே சப்னே' மூலம் ஊதினால் ஒடிந்துவிடக்கூடிய இடையோடு ஒரு பாடலுக்கு இவர் நடந்த நடையில் தடுமாறி விழுந்தது தமிழ்ப்படவுலகம். 'வி.ஐ.பி' மூலம் தமிழுக்கு வந்தார். 'வாலி'யில் குஷ்புவின் உயரத்தைத் தொட்டார். ஹொலிவுட்டில் தன் கொடியை நட்டார். போதுமா இந்த சிம்ராயணம்?

★ **டியர் சிந்தியா! இந்த உலகம் புரிகிறதா?**

எஸ்.வினோதினி, மொண்டிகிறிஸ்டோ.

நண்பர்களைப் புரிகிறது; அரசியல்வாதிகளைப் புரிகிறது; வியாபாரிகளைப் புரிகிறது; சொந்தங்களைப் புரிகிறது; காதல் என்று சொல்லி வருபவர்களைப் புரிகிறது; எதிர்காலத்தைச் சொல்கிறோம் என்று வருகிற சோதிடர்களைப் புரிகிறது.... புரிந்துகொண்ட இவற்றாலெல்லாம் கவலைகள் தான் மிச்சமாகியிருக்கிறது! இந்த உலகத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை... அதனால் தான் கொஞ்சமேனும் சந்தோஷமாக இருக்கின்றேன்!

★ **எனக்கு கவிதை எழுத ஆர்வம் உண்டு. ஆனால், கவிதைகளை எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பினால் அவற்றில் ஒன்று கூட வெளியாவதில்லை. இதற்கு நான் என்ன செய்வது?**

கே.எம்.அனீஸ், புதியகாத்தான் குடி-06.

நிறைய கவிதைகளைப் படியுங்கள். பத்திரிகைகளில் வருபவை என்றுமட்டுமில்லாது, பிரபல கவிஞர்கள், பேர்பெற்றவர்கள் எழுதிய கவிதைகள் பலவற்றையும் தேடிப் படியுங்கள். அவை என்ன சொல்கின்றன, எப்படி உங்களைப் பாதிக்கின்றன என்று உங்களுக்குள் விசாரித்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு, உங்களைப் பாதித்த விஷயங்களை, மற்றவர்களையும் அதேபோலப் பாதிக்கும்படி சொல்லிவிட முடியுமா என்று எழுத்தில் முயன்று பாருங்கள். உடனே அனுப்பிவிடாதீர்கள். நாலைந்து மாதங்கள் கழித்து, நீங்கள் அந்தக் கவிதையை மறந்த பிறகு, ஒரு வாசகனாக அதை எடுத்துப் படித்துப் பாருங்கள். அந்தக் கவிதை முற்றிலும் புதிய முறையில் உங்களிடம் பாதிப்பை உண்டு பண்ணுமானால் அனுப்பி வையுங்கள்! பிரசுரமாகும்.

# மன்னாதி மன்னன் 18

**வி**க்கிரமாதித்த மன்னனுடைய, புதிருக்கான விடையைக் கேட்ட வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஓடிப் போய் ஏறிக் கொண்டது. அம்மரத்தின் மீது ஏறி மன்னன் விக்கிரமாதித்தன் வேதாளத்தைப் பிடித்துக் கொண்டு முதுகில் சுமந்த வண்ணம் நடந்து கொண்டிருந்தான். அப்போது வேதாளம் தனது பதினோராவது புதிர்க்கதையைக் கூற ஆரம்பித்தது.

வில்லி என்ற ஊரை வம்சகேது என்றோர் அரசன் ஆட்சி புரிந்து வந்தான். இந்த மன்னனுக்கு மூன்று மனைவியர் இருந்தனர்.

ஒருநாளிரவு தனது மூத்த மனைவியை அழைத்துக் கொண்டு அரண்மனையிலுள்ள பூந்தோட்டத்தில் மன்னன் வம்சகேது உலாவிக் கொண்டிருந்தான். அரசியின் தலையில் சூடியிருந்த மலர்களில் பலவண்டுகள் மொய்த்துக் கொண்டிருந்தன. அன்றையதினம் மிகப் பெரிய வண்டொன்று ரீங்காரமிட்ட வண்ணம் பூச்சூடியிருந்த அரசியின் தலையைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது. அவ்வண்டு ஒரு தடவை அவளுடைய கண்ணுக்கு நேராகப் பறந்து வந்தது.

இதனைக் கண்ட அரசி பயந்துபோனாள். உடனடியாக மூர்ச்சித்து தரையில் சாய்ந்தாள். அவளுடைய தோழியரை அழைத்து, மன்னன் வம்சகேது அரசியை அந்தப்புரத்துக்கு அழைத்துச் செல்லுமாறு பணித்தான்.

மற்றொரு நாளிரவு மன்னன் அவனுடைய இரண்டாவது மனைவியை அழைத்துக் கொண்டு பூந்தோட்டத்துக்கு வந்தான். அன்று பௌர்ணமி தினம்; முழு நிலவு வானில் மிதந்தது.



அந்த நிலவின் ஒளிபட்டதும் அரசியின் மேனியெல்லாம் கொப்புளங்கள் தோன்றின. ஏற்கனவே சிவந்திருந்த அவளின் மேனி மேலும் சிவப்படைந்து விகாரமாகத் தோன்றியது. தோழிகளின் உதவியுடன் அரசியை அந்தப்புரத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும்படி ஏற்பாடு செய்தான் மன்னன்.

பிறிதொரு தினத்தன்று அரசன் வம்சகேது தனது மூன்றாவது மனைவியை தனது அரண்மனையின் உப்பரிகையில் இருத்தி உரையாடிக் கொண்டிருந்தான். அப்போது எங்கிருந்தோ உரலில் உலக்கை கொண்டு இடிக்கும் சத்தம் கேட்டது. இந்தச் சத்தத்தைக் கேட்டதும் வம்சகேதுவின் மூன்றாவது மனைவி தனது கைவிரல்களை உதறிக் கொண்டு சிணுங்கலானாள்.

அரசன் அவளுடைய விரல்களைப் பரிசோதித்தான். பத்து விரல்களும் கன்றிப் போயிருந்தன. துடிதுடித்துப் போனான். காவலர்களை அனுப்பி உலக்கைச் சத்தம் மேற்கொண்டும் கேட்காதவாறு ஏற்பாடுகளைச் செய்தான்.

இவ்வாறு கதைகூறிய வேதாளம், விக்கிரமாதித்த மன்னனைப் பார்த்து, ''மன்னவா! அரசனின் இந்த மூன்று மனைவியரும் வெவ்வேறு வகையில் தாக்குதல் அடைந்துள்ளனர். இவர்களில் எவருக்கு மிக நுட்பமான உணர்ச்சி உள்ளது என்று கூற முடியுமா?" என்று கேட்டது.

விக்கிரமாதித்தன், "வெகு தொலைவிலிருந்து காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்த உரலில் உலக்கை இடிக்கும் சத்தத்தைக் கேட்டதும், விரல்கள் கன்றிப் போன மூன்றாவது மனைவியே நுட்பமான உணர்வு உடையவள்!" என்று கூறினான்.

இந்தப் பதிலைக் கேட்டதும் சற்றும் தாமதியாமல், வேதாளம் விக்கிரமாதித்தனுடைய தோளிலிருந்து குதித்து ஓடிச் சென்று பழையபடி முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

## பன்னிரண்டாவது கதை

விக்கிரமாதித்தன் எதுவித தாமதமுமின்றி வேதாளத்தைப் பின்தொடர்ந்து சென்று, முருங்கை மரத்தில் ஏறி, தனது தோளில் அதனைச் சுமந்த வண்ணம் நடக்கலானான்.

வேதாளம் தனது பன்னிரண்டாவது புதிர்க்கதையைச் சொல்ல ஆரம்பித்தது.

## அரசியின் அழகில் மயங்கிய அரசன்!

வாரனாபுரத்தை ஆட்சி செய்த வம்சமார்க்கன் என்ற அரசன் அழகை இரசிப்பதில் நிகரற்றவன். அந்த அரசனுடைய இரசனைக்கேற்றவாறு அவனுக்கு வாய்த்த மனைவி சந்திரவதனா ஒரு பேரழகி. இருவருக்கும் திருமணமாகி பல மாதங்கள் ஆகியும் தனது மனைவியை விட்டு எங்குமே செல்லாமல் அவளுடைய அழகில் மயங்கிக் கிடந்தான்.

சந்திரவதனாவின் அந்தப்புரத்தில் இரவுபகலாகத் தஞ்சம் புகுந்திருந்த மன்னன் வம்சமார்க்கன் தனது அரச கடமைகளையும் மறந்து மனைவியின் அழகில் கட்டுண்டு கிடந்தான். சந்திரவதனாவும் தனது கணவனை உயிருக்குயிராக நேசித்தாளெனினும், அரசர் தனக்குரிய கடமைகளைச் செய்யாமல் அவளையே சுற்றிச் சுற்றி வலம் வந்து கொண்டிருப்பதை விரும்பவில்லை.

மந்திரிப் பிரதானிகளும் நாட்டு மக்களும், அரசர் தனது கடமையிலிருந்து விலகி நடப்பதற்கு அரசி சந்திரவதனாதான் காரணம் என்றும், தனது மோகவலையில் மன்னனை கட்டி வைத்திருக்கிறாள் என்றும் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டத் தலைப்பட்டனர். மக்களின் புகார் சந்திரவதனாவின் காதுகளுக்கும் எட்டியது. இதனால் அவள் கலக்கமடைந்தாள்.

பகலிலாவது அரசவைக்குச் சென்று அவருடைய கடமைகளை நிறைவேற்றுமாறு கணவனைத் தூண்டினாள். ஆனால் மன்னன் எத்தகைய புத்திமதிகளையும் கேட்பதாயில்லை.

அரசவைக்கு அரசன் வம்சமார்க்கன் வராமையினால் அமைச்சர்கள் தங்களுக்குத் தலைவனாக ஒரு முதலமைச்சரைத் தெரிவு செய்து அரசருக்குரிய பொறுப்புகளை அவரிடம் ஒப்படைத்து ஏனைய பணிகளை வழக்கம் போல் அமைச்சர்கள் பார்த்து வந்தனர்.

அரசர் அரசவைக்கு வராமல் முதலமைச்சரே அரசருக்குரிய கடமைகளைப் பார்த்து வந்தமையினால் அரசவையில் உள்ள அதிகாரிகளும் பிரதானிகளும் வெறுப்படைந்தனர். அரசரிடம் நேரடியாக முறையிட வேண்டிய எத்தனையோ பிரச்சனைகளை அமைச்சரிடம் போய் முறையிடுவதை அவர்கள் விரும்பவில்லை.

மன்னரை ஒரு தடவையாவது பார்த்துவிட வேண்டும் என்று பிரதானிகளில் பலர் விரும்பினர். அரசரைப் பார்க்க வேண்டுமென்று எவராவது விரும்பினாலும் அதற்கான அனுமதியை வழங்காமல் தலைமை அமைச்சர் தட்டிக் கழித்து வந்தார்.

இத்தகைய செயல்களினால் முதலமைச்சர் மீது பிரதானிகளுக்கும் அதிகாரிகளுக்கும் வெறுப்பும் பொறாமையும் ஏற்பட்டன. அரசருக்கு ஏதோ ஒரு வகையில் தலைமை அமைச்சர் தீங்கு விளைவித்து விட்டார் என்று நாட்டில் வதந்திகள் வேகமாகப் பரவின.

இத்தகைய வதந்தி எங்கும் பரவியதால் அமைச்சரால் தனக்குரிய கடமையைச் செய்வது கடினமாக்கப்பட்டு விட்டது.

நாட்கள் செல்லச் செல்ல முதலமைச்சர் மீதான பொது மக்களின் வெறுப்புணர்வு அதிகரித்துக் கொண்டே வந்தது. இதனால் அமைச்சர் அச்சம் கொண்டார். பொறுமையையும் இழந்தார். எவருக்கும் சொல்லாமல் நாட்டை விட்டு வெளியேறி வெறொரு நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

அந்த நாட்டில், அயல் நாடுகளுக்கு கப்பல்களில் சென்று வியாபாரம் செய்யும் ஒரு வர்த்தகரின் தொடர்பு அமைச்சருக்கு ஏற்பட்டது. இருவரும் கடல் மூலம் அயல் நாடுகளுக்குச் சென்று வர்த்தகம் செய்யலாம் என்று புறப்பட்டனர்.

இவர்கள் இருவரும் சென்ற கப்பல் புயலில் அகப்பட்டு ஒரு தீவின் கரையில் போய்க் கரையொதுங்கியது. தரையிறங்கிய இருவரும் கடற்கரையோரமாக நடந்து சென்றனர். அங்கே ஒரு கோயில் தென்பட்டது. அக்கோயிலில் சென்று அமைச்சரும் வர்த்தகரும் வழிபட்டு விட்டுத் திரும்பும் வழியில் அங்கிருந்த ஒரு மேடையில் அழகிய ஓரிளமங்கை படுத்திருப்பதை இருவரும் கண்டனர். அவளுடைய பேரழகைப் பார்த்ததும் அவள் ஒரு தேவதையாகத்தான் இருக்க வேண்டும் என எண்ணினார்கள். ஆகவே அவள் அருகில் செல்லாமல் எட்டத்தில் நின்ற வண்ணம் அவளுடைய எழிலைப் பருகிவிட்டு பின்னர், அங்கு மேலும் தாமதித்தால் விபரீதம் ஏற்படும் என்று பயந்தவர்களாக கடற்கரைக்கு ஓடிச் சென்றனர்.

தாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து வியாபாரம் செய்யப் புறப்பட்ட சமயம் நன்றாகயில்லை என்று கருதியவர்களாக கடற்கரையை நோக்கி வேகமாகச் சென்றனர். கப்பலில் ஏறி மீண்டும் வாரனாபுரத்தை அடைந்தனர்.

இராஜகுமாரன்

அமைச்சர் தனது நாட்டை அடைந்ததும் முதலில் தென்பட்டவர்களிடம் அரசன் வம்சமார்க்கனைப் பற்றி விசாரித்தார். அமைச்சர் நாட்டை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து மன்னரின் போக்கில் மாற்றம் ஏற்பட்டு அவர் அவருக்குரிய கடமைகளைச் சீராக முடித்து விடுவதாக அமைச்சருக்கு தகவல் கூறப்பட்டது. இதனால் மகிழ்ச்சி அடைந்த அமைச்சர் அரண்மனை சென்று மன்னனைக் கண்டார். தாங்கள் சென்ற இடத்தில் ஓர் ஆலயத்தின் அருகில் அழகியொருத்தி படுத்திருப்பதை கண்டதும், அப்பெண் ஒரு தேவதையாக இருக்கலாம் என்று தாங்கள் திரும்பி வந்து விட்டதாகவும் மன்னிரிடம் அமைச்சர் தெரிவித்தார்.

அழகி ஒருத்தியைப் பற்றி அமைச்சர் கூறியதைக் கேட்டதும் அரசர் வம்சமார்க்கனுக்கு சபலம் தட்டத் தொடங்கியது. "அவள் தேவதையாக இருந்தாலும் தேவ கன்னியாக இருந்தாலும், இல்லை வெறும் மானிடப் பெண்ணாக இருந்தாலும் சரி, எப்படியோ அவளை நான் உடன் கண்டாக வேண்டும்!" என்று ஆசைப்பட்டான்.

உடனடியாகவே அமைச்சரையும் வணிகனையும் அழைத்துக் கொண்டு கப்பலில் புறப்பட்டான். *(மன்னன் வருவான்...)*

# சர்தார்ஜி ஜோக்ஸ்



**ஒ**ரு சர்தார்ஜி தனக்குக் குழந்தை பிறந்திருக்கிறது என்று தெரிந்ததும் தனது அப்பாவையும், தாத்தாவையும் அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனார்.

ஆஸ்பத்திரி பிரசவ அறை வாசலில் 'அப்பா மட்டும் உள்ளே செல்லலாம்!' என்று எழுதப்பட்டிருந்தது.

உடனே அந்த சர்தார்ஜி தனது அப்பாவிடம் திரும்பி,

"அப்பா எனக்கு அனுமதியில்லை, நீங்கள் போகலாம்!" என்று சொன்னார்.

அதற்கு அப்பா சர்தார்ஜி தனது தந்தையிடம்,

"ம்ஹூம் எனக்கும் அனுமதியில்லை. நீங்கள்தான் போக வேண்டும் அப்பா!" என்று சொன்னார்.

சர்தார்ஜியின் தாத்தாவோ,

"ம்ஹூம் நான் போகக் கூடாது. என்னுடைய அப்பா தான் போகவேண்டும்.ஆனால் அவர் இறந்து விட்டார். எனவே யாருமே போக முடியாது. வாருங்கள் திரும்பிப் போகலாம்!" என்று சொன்னார்.

உடனே மூன்று சர்தார்ஜிகளும் சோகமாக திரும்பிச் சென்றனர்.

□□



**ஓர்** இராணுவ முகாமில் இரவு நேரத்தில் ஒரு சர்தார்ஜி இராணுவ வீரர் ஒருவர் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். அப்போது அந்தப் பக்கமாக வந்த உயர் அதிகாரி, அந்த சர்தார்ஜி வீரரிடம் சென்று,

"என்ன இவ்வளவு நேரம் லைட் எரிகிறது?" என்று கேட்டார்.

"என் மனைவிக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறேன்!" என்றார் அந்த சர்தார்ஜி வீரர்.

சர்தார்ஜி கடிதம் எழுதுவதைப் பார்த்த அந்த உயர் அதிகாரி,

"என்ன இவ்வளவு மெதுவாக எழுதுகிறாயே, என்று கேட்க

"என் மனைவிக்கு வேகமாக படிக்கத் தெரியாது. அதனால்தான் மெதுவாக எழுதுகிறேன்!" என்றார் அந்த சர்தார்ஜி இராணுவ வீரர்.

□□



**பி**ரசவ ஆஸ்பத்திரியில் மனைவியை அனுமதித்து விட்டு வெளியே நீண்ட நேரம் பரபரப்போடு அங்கு மிங்கும் நடந்துகொண்டிருந்தார் ஒரு சர்தார்ஜி. சிறிது நேரத்தில் கதவைத் திறந்துகொண்டு வந்த தாதி அவரிடம்,

"வாழ்த்துக்கள்! உங்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன!" என்று சொன்னாள்.

அதைக் கேட்ட அந்த சர்தார்ஜி,

"ஐயோ என் மனைவி இவ்வளவு மோசமானவளாக இருப்பாள் என்று நான் நினைக்கவே இல்லை!" என்று தலையில் அடித்தபடி அழுதார்.

எதுவுமே புரியாத அந்தத் தாதி,

"என்ன சொல்கிறீர்கள் எனக்குப் புரியவில்லை!" என்று கேட்க,

"என் மனைவியுடன் ஒரே ஒரு முறைதான் நான் தப்புச் செய்தேன். அதனால் ஒரு குழந்தைதான் என்னுடையது!" என்று சொல்லி அழுதார் சர்தார்ஜி.






பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன. கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு - 06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# இழுப்பு

➡ டேவிற் ஹக்ஸ்லி என்ற அவுஸ்திரேலியருக்கு தனியாளாக நின்று அதிக பாரமுள்ள விமானங்களை இழுத்துச் சாதனை புரிவது ஒரு பழக்கமாகப் போய் விட்டது. ஹக்ஸ்லி 1997ம் ஆண்டு ஒக்டோபர் 15ல் சிட்னி விமானநிலையத்தில் 187 தொன் எடையுள்ள குவாண்டாஸ் போயிங் 447-400 விமானத்தை 91 மீற்றர் (298 1/2 அடி) வரை இழுத்துச் சாதனைப் படைத்தார்.

ஹக்ஸ்லி ஏற்கனவே 105 தொன் எடையுள்ள கொன்கோட் விமானத்தை 143 மீற்றர் (469 அடி 2 அங்குலம், வரை தனியாளாக இழுத்துச் சென்றார். இந்தச் சாதனைப் படம் ஏற்கனவே முரசில் வெளியானது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.



SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# மதிப்பு



⬅ உலகப்புகழ்பெற்ற ஓவியர் லியானடோ டாவின்சி வரைந்த ஓவியங்களில் 'இயேசுநாதரின் இறுதி இராப்போசன' ஓவியம் மிகப் பிரபலமானது.

இந்தப் புகழ்பெற்ற ஓவியத்தை மாதிரியாகக் கொண்டு கொரிய நாட்டைச் சேர்ந்த கிம் ஜாங் ஹோ என்ற சிற்பியின் தலைமையில் 3 சிற்பிகள் சிற்பமாகச் செதுக்கியுள்ளனர்.

வெள்ளை சலவைக்கல் பாறையில் செதுக்கப்பட்டிருக்கும் இந்தச் சிற்பத்தின் நீளம் 3.3 மீட்டர். அகலம் 1.5 மீட்டர். இச்சிற்பத்தின் நிறை 4 தொன்.

1997ம் ஆண்டு ஜூன் மாதம் இச்சிற்பத்தைச் செதுக்க ஆரம்பித்து 1999ம் ஆண்டு நவம்பர் மாதம் செதுக்கி முடித்தனர்.

மொத்தத்தில் 2 வருடங்களும் 5 மாதங்களும் இச்சிற்பத்தைச் செதுக்கி முடிக்க அவர்களுக்குத் தேவைப்பட்டது.

இவ்வளவு காலமும் வெகு சிரத்தையுடன் செதுக்கிய இச்சிற்பத்தின் மதிப்பை உலக ஏலத்தின் மூலம் அறிய ஆர்வம் கொண்டு இன்டர்நெட் மூலம் ஏலத்திற்கு விட்டுள்ளனர்.


(பட உதவி-அஹமட் நியாஸ்-கொரியா)




# எதிர்ப்பு

⬆ எலியன் கொன்ஸலஸ் என்ற சிறுவன் அண்மைக் காலங்களில் உலகிலுள்ள அனைவரது கவனத்தையும் கருத்தையும் கவர்ந்தான். அவனுடைய சொந்த நாடான கியூபாவிலிருந்து அமெரிக்காவுக்குத் தஞ்சம் கோரிப் புறப்பட்டவர்களுடன் கடலில் பயணம் செய்யும்போது, எலியன் பயணம் செய்த படகு கவிழ்ந்து பலர் உயிரிழந்தனர். உயிர்தப்பிய எலியன் அமெரிக்க அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டான்.

எலியனின் தந்தை, தனது மகனைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி அமெரிக்காவுக்கு வந்தார். அவனை விடமுடியாது என்று முரண்டுபிடித்த அவனுடைய உறவினர்களிடமிருந்து மீட்க அமெரிக்க அதிகாரிகள் முரட்டுத்தனமாக நடந்து கொண்டனர். தந்தையும் மகனும் ஹவானா விமான நிலையம் வந்திறங்கியபோது அங்குள்ள மாணவர்கள் இராணுவ சீருடையுடன் வரவேற்றகாட்சி.



# பிரமிப்பு

➡ இயற்கைக் காட்சிகள் உலகெங்கும் நிறைந்திருக்கின்றன. அவற்றைப் பார்த்து இரசிப்போர் புகைப்படங்களில் பிடித்து வந்து வீட்டில் சட்டங்கள் போட்டு மாட்டி வைப்பார்கள். ஓவியக் கலைஞர்களோ தாங்கள் பார்த்து இரசிக்கும் அழகான காட்சிகளை வண்ண ஓவியங்களாகத் தீட்டி அவற்றுக்குச் சட்டங்கள் போட்டு அதைப் பார்த்து பார்த்து இரசிப்பார்கள். ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஓவியக் கலைஞரான ஜோர்க் லாங்க் என்பவர் இயற்கைக் காட்சிகளை இரசிப்பதற்கென்றே புதிய வழிமுறையொன்றை கையாளுகிறார். இயற்கைக் காட்சிகளைப் பார்த்து இரசிப்பதற்கு அவர் செல்லும்போது தான் தயாராக வைத்திருக்கும் பிரமாண்டமான சட்டம் ஒன்றைக் கொண்டு போகிறார். அழகிய காட்சியைக் கண்டதும் அக்காட்சிக்கு முன்னால் சட்டத்தை விரித்துப் பொருத்தி வைத்துக் கொள்ளுவார். எட்டத்தில் இருந்தவண்ணம் சட்டத்தினூடாக காட்சியைப் பார்த்து மகிழ்ச்சியடைவார்.



# இழப்பு

⬆ இரு முறை உலகக் கோப்பை கிரிக்கெட் சம்பியனாகி சாதனை படைத்திருக்கும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி பலமிக்க அணியாகத் திகழ்ந்து வருகிறது.

இம்மாத இறுதியில் ஷோன் பொல்லொக் தலைமையிலான தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலியா செல்கிறது. அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகிறது தென்னாபிரிக்கா. உலகில் அதி வேகப்பந்து வீச்சாளர் என்று கருதப்படும் அவுஸ்திரேலியாவின் பிரெட் லீ தவறான முறையில் பந்து வீசுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். பின்னர் இவர் வீசுவது சரியானதே என்று சர்வதேச கிரிக்கெட் சபை கூறியுள்ளது. எனினும் தென்னாபிரிக்காவுக்கெதிரான போட்டிகளில் இவர் இடம்பெறாது விட்டால் அவுஸ்திரேலிய அணிக்கு இழப்புத்தான்.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



அதியன் ஜெகத்ஸ்வரன் 20.08.2000

புங்குடுதீவையும், பண்டத்தரிப்பையும் பிறப்பிடமாகவும் கனடா வில்லோடேல் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகத்ஸ்வரன் (கோபு) சிவாஜினி (உஷா) தம்பதியினரின் செல்வப் புதல்வன் அதியன் தனது முதலாவது பிறந்த நாளை 20.08.2000 (ஞாயிற்றுக்கிழமை) அன்று தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறான். இவனை அப்பா, அம்மா (கனடா) அம்மம்மா, அப்பப்பா, ஆச்சி, அக்கா (இந்தியா), பெரியப்பா, பெரியம்மா (இந்தியா), பெரியப்பா, பெரியம்மா (ஜேர்மனி), சித்தப்பா (லண்டன்), மற்றும் அப்பம்மா, அப்பப்பா, பெரிய மாமி, பெரிய மாமா (இந்தியா), பெரியப்பா, பெரியம்மா (கனடா), சின்ன மாமா, மாமி (ஜேர்மனி) மற்றும் உற்றார் உறவினர்

அனைவரும் இறைவன் (பரம) கச்சார் வேலி பிள்ளையார் துணை கொண்டு சகல செளபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என வாழ்த்தி நிற்கின்றனர்.

தகவல்: நகாந்தரூபன் (குட்டி மாமா) லண்டன்